# கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண். 20 –
## உயர்கல்வி 2012 – 2013

## முன்னுரை

> **“சிறந்த மனித திறமை மற்றும் பல துறைகளில் உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்களின் வலிமையுடன் இந்தியாவின் அறிவுத் தலை நகரமாகவும், புதுமைத் தளமாகவும் தமிழ்நாடு விளங்கும்”**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் –**
**தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023**

**1.1** தமிழ்நாடு, மகத்தான அடிகளை எடுத்து வைத்து நிலையான சக்தியுடன் முன்னேற்றத்தை நோக்கிச் செல்கிறது. **மாண்புமிகு தமிழக முதலமைச்சரின்** தொலை நோக்குப் பார்வை மற்றும் ஆற்றல் மிக்க வழிகாட்டுதலுக்கு நன்றிக்கடப்பாடு உள்ளவர்களாக இருப்போம். உயர்கல்வியின் மூலம் அறிவைப் பெறுதலும் பலவகையான மாறுபட்ட காலத்திற்கு தேவையான திறன்களைப் பெறுதலும்

வளர்கின்ற மனித சக்தியை முன்னேற்றும் என்பதால் உயர்கல்வி அனைவராலும் கூர்ந்து கவனிக்கப்படுகிறது. இதனால் தமிழகம் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் புதுப்பொலிவுடன் மலரும் என்பதில் ஐயமில்லை.

1.2 உலகத்தலைவர்களின் தொலைநோக்குப் பார்வையுடன், **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்,** அனைவருக்கும் உயர்கல்வியினை எளிதில் அடையச் செய்து நடுநிலைமையை உறுதி செய்திருக்கும் அதே வேளையில், உலகத் தரத்திற்கு இணையாகத் தமிழகத்தின் உயர்கல்வியினை முன்னெடுத்துச் செல்கிறார். தரமான கல்வி அளிப்பது தற்போதைய உடனடித்தேவை என்பதை உணர்ந்து, உயர்கல்வித் திட்டங்களை வகுத்து, அத்தகைய உயர்கல்வி பெறுபவர்கள் அனைவரையும் கவர்ந்து மகிழ்ச்சியும், மனநிறைவும் அடையும் வண்ணம் செயல்படுத்த, முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1.3 இந்தியாவின் உயர்கல்விக்கான தேவை, எண்ணிக்கையில் அதிகரித்து வரும் இளைஞர் சமுதாயத்தால் ஊக்கம்பெறுகிறது. மாணவர் மொத்த

சேர்க்கை விகிதத்தை 2025–ல் 25 விழுக்காடு எய்துவது நமது இலக்காகும். இளைஞர்களுக்கு உயர்கல்வி தொடருவதற்குப் போதுமான கூடுதலான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதை இந்த இலக்கு தெரிவிக்கின்றது. பனிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி கூடுதலான கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் நிறுவப்படுவதன் மூலம் கல்வி பெறும் மாணவர்களில் குறிப்பாக மாணவிகளின் சேர்க்கை எண்ணிக்கையைப் பெருமளவு அதிகரிக்க முடியும். கற்பித்தல் மற்றும் கற்றல் முறைகளை உலகத் தரத்திற்கு இணையாக நவீன காலத்திற்கேற்ப மாற்றியமைக்கும் வகையில் அரசு செயல்படும்.

1.4 உயர்கல்வி, மனித வளர்ச்சிக்கு ஆதாரமான தூணாகவும், மரபுவழிக் கல்விமுறைக்குச் சிகரமாகவும் விளங்குகிறது. தொழிலாளர் சந்தைக்குத் தேவையான உயர்ந்த திறன்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல், ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், குடிமைப் பணியாளர்கள், விஞ்ஞானிகள், தொழில் முனைவோர்கள் மற்றும் பல தொழில்

வல்லுநர்களுக்கு அடிப்படையான மேம்பட்ட திறன்களையும் உயர்கல்வி வழங்குகிறது. பகுத்தாயும் திறன்கள் மற்றும் செயல் வல்லமையுடன் பயிற்சி பெற்ற இத்தகைய தனிநபர்கள்தான் ஒட்டுமொத்த சமூகத்திற்குத் தொடர்புடைய தேவையான முடிவுகளைச் செயலாக்குபவர்களாக இருக்கின்றனர்.

**1.5** பொருளாதார ரீதியில் பின்தங்கிய சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளி மாணவர்களின் நலனிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. உயர்கல்வியில் ஆண்–பெண் வேறுபாடின்மை, கிராம–நகர சமமற்ற தன்மையைச் சரிசெய்தல், ஆகியவற்றை அடைவதற்கு வழிமுறைகள் உறுதி செய்யப்படும். மேலும், மாணவச் சமுதாயம், ஆசிரியர்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் உயர்கல்வித்துறையுடன் தொடர்புடையவர்கள் ஆகிய அனைவரையும் ஒருங்கிணைத்து உயர்கல்வியை வளப்படுத்துவதற்கு வாய்ப்புகள் உருவாக்கப்படும். தொழிற்சாலை – நிறுவனக் கூட்டிணைவு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில் இல்லாத நிலையை மாற்றி, இன்றைய உலகச் சூழலுக்கு ஏற்றவாறு தொழிற்சாலை–

நிறுவனக் கூட்டிணைவிற்கு ஏற்றவாறு ஆசிரியர்களின் புலமை மற்றும் திறமைகளை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் அவர்களுக்கு கிட்டுமாறு வழிவகுத்தல் இன்றியமையாதது. அறிவு அடிப்படையிலான உழைக்கும் சக்தியுடன் மக்கள் தாங்களாகவே, புதிய திறன்களை உள்வாங்கிக்கொள்ளும் திறமைகளோடும், முதிர்ந்த ஆற்றலுடனும், அர்ப்பணிப்புடனும் செயல்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் உயர்கல்வித்துறையின் வாயில்களிலிருந்து பெருமிதமாக வெளிவருவார்கள்.

## 1.6 உயர்கல்வித்துறையின் தொலைநோக்குப்பார்வை:

- உயர்கல்வி நிறுவனங்களைப் புதுமைகள் நிறைந்த நேர்த்தியான மேம்பாட்டு மையங்களாக உருவாக்குதல்.

- கிராமப்புற, பின்தங்கிய மற்றும் தாழ்த்தப்பட்ட குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு அவர்களின் திறமைகள், செயல்திறன்கள் வெளிப்படும் வகையிலும், மேம்படும் வகையிலும் மற்றவர்கள் ஏற்கும்

வகையிலுமான உலகத்தரம் வாய்ந்த கல்வி வழங்குதல்.

- இந்நூற்றாண்டின் தேவைகள் மற்றும் அறைகூவல்களை எதிர்கொள்ளும் வகையில் மாணவர்களை ஆயத்தம் செய்து அனைத்துத் தரப்பினருக்கும் விடுபடாமல் உயர்கல்வி வழங்குதல்.

## 1.7 உயரிய நோக்கம்

“தன்னார்வ ஊக்குவிப்புடன் செயற்படும் நிறுவனங்கள் வாயிலாக மனிதவள மேம்பாட்டினை வளர்ப்பதும், பண்பாடும் சால்பும் கொண்டு வல்லுநர்களை உருவாக்கி, மாநிலத்தையும் நாட்டையும் செழுமைப்படுத்துவதும், உலகளாவிய நிலையில் ஒப்பற்ற மாணவர்களை ஈர்க்கும் பல்கலைக்கழகக் கல்வியினை வழங்கும் உன்னதமான இடமாக தமிழ்நாட்டை உருவாக்குவதும்”- உயர்கல்வித் துறையின் நோக்கமாகும்.

## 1.8 குறிக்கோள்கள்

- கலை, அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கல்வியின் தரத்தை உயர்த்தி வழங்குதல்.

- உலகத்தரத்திற்கு இணையான (world class standard) தரமான கல்வி வழங்குதல்.
- ஆராய்ச்சிமுறை மற்றும் திறன்களை மேம்படுத்தி வேலைவாய்ப்பு பெறும் வகையிலும் தொழிற்சாலை – நிறுவன உறவு இணக்கத்தை எளிதாக்கித் தொழில் முனைவு நெறியை பயிற்றுவித்தல்.

- மக்களிடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை வெளிப்படுத்தல்.

- தொலைதூரக்கல்வித் திட்டங்களை ஒன்றிணைத்துப் புத்துயிரூட்டி பொலிவேற்றம் செய்தல்.

## 1.9 உன்னத உத்தி நெறிப்பாடு

- உலக மனிதவளத் தேவையை ஈடுகட்ட படிப்பு மற்றும் பாடத்திட்டங்களைத் தேர்வு செய்ய உயர்கல்வி நிறுவனங்களுக்குத் தன்னாட்சி உரிமம் வழங்குதல்.

- கடந்தகால பெருமை மற்றும் நம்பகத்தன்மையை மீண்டும் பெற அண்ணா பல்கலைக்– கழகத்துடன் அண்ணா தொழில் நுட்ப பல்கலைக்கழகங்களை இணைத்தல்.

- பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினை சார்ந்த மாணவர்கள் பயன்பெறும் வகையில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி கல்லூரிகளில் கட்டண அமைப்பைச் சரி செய்தல்.

- சமுதாயத்தில் பின்தங்கிய பகுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கு உயர்கல்வி வழங்குவதன் மூலம் உள்ளடக்கிய சமூக பொருளாதாரம் மேம்பாடடைய செய்தல்.

- ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மூலம் சிறப்பு மையங்களாக பல்கலைக்கழகங்களை திகழச் செய்தல்.

- உலகளாவிய கற்பிக்கும் கலைப்போக்கினை மனதில் கொண்டு நிலைத்த பாடத்திட்ட செய்கைகள் மற்றும் நிறுவனங்கள் அளிக்கும் பாடப்பிரிவுகள் அடிப்படையில் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளை நிரல்படுத்துதல்.

- மின்வழி நிருவாக நெறிமுறை (e-governance) நிறைவேற்றுதல்.

## 1.10 தமிழ்நாட்டுக் கல்விச்சூழல்

பொருளாதார வகையில் பின்தங்கிய மாணவர்கள் கிராமப்புற மாணவர்கள், ஒடுக்கப்பட்ட குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்கள் இவர்களுக்கு உயர்கல்வி அளிப்பதன் மூலம் தமிழ்நாடு, மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது. இந்தியாவின் சிறந்த

கல்வி நிறுவனங்களில் சில தமிழ்நாட்டில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அவைகளாவன சென்னைப் பல்கலைக் –கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் பல. நமது **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** உருவாக்கியுள்ள மிகச் சிறந்த உயர்கல்வித் திட்டங்கள் காரணமாகவும், தமிழ்நாட்டில் சிறந்த கட்டுமான வசதிகளுடன் உன்னதமான உயர்கல்வி நிறுவனங்கள் இருப்பதாலும், முனைப்பான ஆசிரியர்கள் பணியாற்றுவதாலும் விரும்பத்தக்க கல்வி கற்க ஏதுவான இடமாகத் தமிழ்நாடு கருதப்படுகிறது. உயர் கல்வி இயக்கத்தில் மாநிலத்தின் கீழ் இயங்கும் பல்கலைக்கழகங்களின் பங்களிப்பு சிறப்பு கவனத்திற்கு உரியது. உயர்கல்வியின் முக்கிய அங்கமாக மூன்றாம் நிலை மையங்களாக பல்கலைக்கழகங்கள் திகழ்கின்றன. மேலும், அறிவு உருவாக்கத்திற்கும் உயர்வான செயல் வல்லமைகளை வளர்ப்பதற்கு பல நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் அமைப்பாகவும் பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன.

1.11 இந்தியாவின் மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டு எண். 0.619ஆக இருக்கும் நிலையில் தமிழ்நாடு

0.736 பெற்று, நாட்டின் உயர்நிலை மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. தேசிய அளவில் மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதம் தோராயமாக 13 சதவிகிதமாக இருக்கும்போது தமிழ்நாடு தோராயமாக 18 சதவிகிதத்துடன் தேசிய சராசரி விகிதத்தைவிட அதிகமாகப் பெற்றுச் சிறப்பாகத் திகழ்கிறது.

1.12 **மாண்புமிகு தமிழக முதலமைச்சரின்** அறிவுரைகளின்படி வகுப்பறைகள், சோதனைக்கூடங்கள், நூலகங்கள் மற்றும் நிர்வாகத்தில் நவீன மற்றும் மிகச்சிறந்த தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்துதல் நம்முடைய தலையாய பணியாக உள்ளது. தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்கள் உயர்கல்வியின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும்.

1.13 தமிழக அரசு மிகவும் ஆற்றல் வாய்ந்த, நியாயமான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பொதுமக்கள் தேவைகளை நிறைவு செய்கிற வகையில் உயர்கல்வித் துறையில் கொள்கைச் சீர்திருத்தங்களை தீவிரமாக மேம்படுத்தி வருகிறது. அறிவுப் பொருளாதாரச் சூழலில் நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும்

தொழில் நுட்பம் ஆகியவற்றுடன் அறிவு என்பதும் உற்பத்திக்கான முதன்மையான அடிப்படைக் கோட்பாடு என்பதை உணர்ந்து இச்சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**1.14** மேற்கூறியவற்றுடன், மூன்றாம் நிலைக்கல்வி என்பதும் சமூகப் பங்கேற்பை உறுதி செய்வதற்கு அனைவரையும் உள்ளடக்கிய சமூக மூலதனம் ஒன்றிணைவை வளர்ப்பதற்கும் முக்கியமானதாகும். திறன்களை வளர்ப்பதற்கும், வறுமையைக் குறைப்பதற்கும் உயர்கல்விதான் முக்கியமானது எனப் பல்வேறு பன்னாட்டு அமைப்புகள் தங்களுடைய அறிக்கைகளின் முடிவுகளாக தெரிவித்துள்ளன. வளர்ச்சிக்கு அடிப்படையான பொதுப் பொருண்மைகளை அளிக்கும் உயர்கல்வி சமூகத்தின் அனைத்துப் பிரிவு மக்களும் எளிதில் பெறக்கூடியதாக இருக்க வேண்டும். எனவே, உயர்கல்வி என்பது முழுமையான கல்வி முறையின் முக்கியக் கூறாகப் பார்க்கப்படுகிறது. ஆகவே, உயர்கல்வி இலகுவானதாகவும், அனைவரையும் உள்ளடக்கியதாகவும், முன்னேற்றத்தை அளிக்கக்கூடியதாகவும் மற்றும் அறிவுப்

பொருளாதாரத்தின் வெற்றிக்கு ஆதாரமானதாகவும் இருக்க வேண்டும்.

**1.15** பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் தற்போது முற்றுப் பெற்றுள்ளது. **12**வது ஐந்தாண்டுத் திட்டத்தில் **(2012–17)** அனைவருக்கும் உயர்கல்வியைக் கொண்டு செல்லுதல், சரிநிகர்மைக்கு வாய்ப்பளித்தல், இணக்கம் மற்றும் சரியான தரநிலை நிர்ணயம் செய்தல் போன்றவற்றை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படும். இலக்கினை அடைய திட்டங்களைப் உருவாக்கி வெகு குறுகிய காலத்தில் கீழ்க்கண்டவாறு செயல்படுத்த அரசு தீர்மானித்துள்ளது:-

i. 2011-12ஆம் ஆண்டு **42** அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. இவற்றில் **41** அறிவிப்புகளுக்கு, ஆணைகள் வெளியிடப்பட்டு செயல்படுத்தப் பட்டுள்ளன.

ii. **மாண்புமிகு தமிழக முதலமைச்சரால்** உயர்கல்வி வரலாற்றில் முதல்முறையாக **2011–12**ம் ஆண்டில் **11** கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் நெமிலி, நாகலாபுரம், அரூர், கள்ளக்குறிச்சி, சாத்தூர், வேதாரண்யம், திருப்பத்தூர், திருத்துறைப்பூண்டி, பாப்பிரெட்டிப்பட்டி, நன்னிலம் மற்றும் ஸ்ரீரங்கம் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டன. இக்கல்லூரிகளில் **2531** மாணவர்கள் பயின்று வருகின்றனர். **11** கல்லூரிகளுக்கும் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

iii. ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டவாறு 2011 ஆம் ஆண்டில் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலியில் செயற்பட்டு வந்த அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களை அண்ணா பல்கலைக்கழகத்தோடு ஒருங்கிணைக்கப் படுவதற்கான சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டது. தற்போதுள்ள கட்டுமான வசதிகள், பணியாளர் நிர்ணயம், பணிச்சுமை, இணைவுக்கான வழிமுறைகள் ஆகியவற்றை அரசு நெறிமுறைகளின்படி தொகுத்து உரிய பரிந்துரைகளை அளிக்க 5 தணிக்கைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் விரைவில் முடிவுற இருக்கின்றன.

iv. அரசு, அரசு நிதியுதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் / பலவகை தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி ஆகியவற்றில் இறுதி ஆண்டு மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் விரைவாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 1.74 லட்சம் விலையில்லா மடிக்கணினிகள் ஏப்ரல் 2012ற்கு முன் வழங்கப்படும். 2012–13ஆம் ஆண்டில் 2.12 லட்சம் விலையில்லா மடிக்கணினிகள் மீதமுள்ள மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ளன.

v. தொழிற் கல்வியான பி.இ., பி.டெக்., மற்றும் எம்.பி.ஏ., எம்.சி.ஏ., ஆகியவற்றிற்கு கல்விக் கட்டணத்தை நிர்ணயம் செய்ய ஒய்வு பெற்ற மாண்புமிகு நீதியரசர் என்.வீ.பாலசுப்பரமணியம் தலைமையில்

பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு 1992–ஆம் ஆண்டு கல்வி நிறுவனங்கள் கட்டாய நன்கொடை கட்டணம் வசூலித்தலைத் தடை செய்தல் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட குழு அரசால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிட அதிகக் கட்டணம் மற்றும் நன்கொடை வசூலிக்கும் கல்லூரிகளின் மேல் பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் இதுவரை 74 கல்லூரிகளில் விசாரணை மேற்கொண்டு, அவற்றில் 25 கல்லூரிகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள், பெற்றோர், பொதுமக்கள் ஆகியோர்களிடையே விழிப்புணர்வும் தன்னம்பிக்கையும் ஏற்பட்டுள்ளன.

vi. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணியாற்றும் உதவிப்பேராசிரியர்களுக்கான பணிமூப்பு பட்டியலை தரவரிசைப் படுத்தும் பணி பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த நிலையில் உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் உளவியல் நெறிமுறைப்படி தரவரிசைப்பட்டியல் இணையதளத்தில் வெளியிடப்பட்டு தற்போது ஒரு இணைஇயக்குநர் ஐந்து மண்டல இணை இயக்குநர்கள், ஒரு முதல்நிலைக்கல்லூரி முதல்வர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன.

vii. தொழிற்கல்வி பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கான கல்விக்கட்டண விலக்கு இந்தக் கல்வியாண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு, 1,56,892 மாணவர்கள் பயன் பெற்றனர்.

viii. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சுழற்சி இரண்டில் பணியாற்றும் கௌரவ

விரிவுரையாளர்களுக்கு அளிக்கப்படும் தொகுப்பூதியம் ரூ.6,000/—த்தில் இருந்து ரூ.10,000/—க்கு உயர்த்தப்பட்டது.

ix. மணி நேரம் / சுழற்சிமுறை / பகுதி நேரம் / மாலை நேரம் வகுப்புகளை நடத்தும் பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான ஊதியம் ரூ.6000/—இல் இருந்து ரூ.10,000/—ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

x. தொழில்நுட்ப இயக்குநரகத்தின் கட்டுமானப்பிரிவு தொன்மை வாய்ந்த வரலாற்றுச் சின்னங்களாக விளங்கும் கட்டிடங்களை பட்டியலிட்டு அவற்றை பாதுகாத்து பராமரித்து புதுப்பொலிவை கொடுக்கும் பணியினை மேற்கொள்ள உள்ளது. இப்பணிக்காக இந்திய தொல்லியல்துறை வல்லுநர்கள் மற்றும் மாநில தொல்லியல் துறை வல்லுநர்கள் பயன்படுத்தப் படுவார்கள்

## 1.16 உலகத்தரம் வாய்ந்த சிறப்பு நிலையை எய்துவதற்கான முன்முயற்சிகள்

உயர்கல்வியின் தரத்தை உயர்த்த தரநிர்ணய கோட்பாடுகளை தமிழக அரசு வலியுறுத்தும் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகிறது. நமது கல்வி நிறுவனங்கள் வலிமையான அறிவுத்தளத்தின் மீது நிறுவப்பட்டிருந்தாலும், கற்பிக்கும் முறைகளில் மறுசீரமைப்பு தேவைப்படுகிறது. மாணவர்கள் விருப்பத்திற்கும் சந்தையின் தேவைகளுக்கும் உள்ள நீண்ட இடைவெளி இணைக்கப்பட வேண்டும். தமிழக

அரசு மேற்கண்ட பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய தேவையை உணர்ந்து வேலைவாய்ப்பினை பெருக்க உகந்த திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகிறது. பன்னாட்டு தரத்திற்கு இணையாக ஆசிரியர்கள் மேம்பாடு குறித்தும் அரசு கவனம் செலுத்தி வருகிறது. மேற்கூறியவற்றின் அடிப்படையில் உயர்கல்வி நிறுவனங்களில் பின்வரும் திட்டங்கள் உருவாக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

அ. 2011 கொள்கை விளக்கக் குறிப்பு அறிவிப்பின்படி செயல்திறன் வளர்க்கும் வகுப்பறைகள், காட்சிவழி உரை வசதிகளை ஏற்படுத்த ஒவ்வொரு பல்கலைக் கழகத்திற்கும் ரூ. 20 லட்சம் வீதம் பத்து பல்கலைக்கழகத்திற்கு ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது..

இவ்வகுப்பறைகள் கீழ்க்கண்ட தொழில்நுட்ப வசதியுடன் செயல்படும்

**வலைதள வெள்ளைத்திரை**
**எல்.சி.டி புரொஜெக்டர்**
**( Short-Throw LCD Projector)**
**ஒலி அமைப்பு, ஆவண புகைப்படக் கருவி**
**காணொளிக்காட்சி உரை, இணையதள தொடர்பு**

மேலும், இவ்வகுப்பறைகள் தொழில்நுட்பத்தை ஆசிரியர்களின் கைகளுக்கு கொண்டுசென்று மரபு சார்ந்த கற்பித்தல் முறைகளோடு ஒருங்கிணைந்து ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மெருகூட்டும்.

ஆ. மேலைநாட்டு மொழிகளான ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் மற்றும் சீன மொழிகளை மாணவர்கள் கற்றுக்கொள்ள ஏதுவாக அயல்நாட்டு மொழி ஆய்வுக்கூடம் நிறுவுவதற்கு ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் ரூ. 15 லட்சம் வீதம் பத்து பல்கலைக்கழகங்களுக்கு ரூ. 1.50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒலி, ஒளி அமைப்பு முறையில் நவீன மயமாக்கப்பட்டு அம்மொழிகள் இவ்வாய்வுக் கூடம் மூலம் கற்பிக்கப்படும்.

இவ்வாய்வுக் கூடத்தில்

**15 கணினிகள்**
**மொழிகளுக்கான ஆய்வுக்கூட மென்பொருட்கள்,**
**பல்லூடக ஒளி ஒலி வசதியுுன் கூடிய அறைகள்,**
**சர்வர்,**
**16 போர்ட் ஸ்விட்ச்**
**ஒருங்கிணைப்பு இழைகள் மற்றும் அவை சார்ந்த உபகரணங்கள் அமைக்கப்படும்.**

இ. 2011–ன் கொள்கை விளக்கக் குறிப்பு அறிவிப்பின்படி மாணவர்களை லாபகரமான சுயவேலைவாய்ப்பு மற்றும் வருமானம் மிகுந்த வேலைவாய்ப்பு பயிற்சி அளிப்பதற்கு ஒரு பல்கலைக்கழகத்திற்கு ரூ. 20 லட்சம் வீதம் 10 பல்கலைக்கழகங்களுக்கு ரூ 2 கோடி செலவில் தொழில் முனைதல் மற்றும் திறன் வளர்ச்சி திடடங்களை உருவாக்கிச் செயல்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த தொழில் முனைதல் மற்றும் திறன் வளர்ச்சி மையங்களில்

**இணையதளம்**
**ஒரு தொலைபேசி (2 Mbps)**
**ஒரு நகல் எடுக்கும் இயந்திரம்,**

**இரண்டு கணினி**
**எல்.சி.டி. புரொஜெக்டர்**

ஆகியவற்றுடன் வட்டார தேவைகளுக்கு ஏற்ப பணிமனை உருவாக்கப்பட்டு மாணவர்களை வேலை தேடுபவர்களாக இல்லாமல் வேலை கொடுப்பவர்களாக மாற்றும்.

சற்றேறக்குறைய 100 திறன்களில் பயிற்சி அளிக்கப்படும்.

அவற்றுள் சில .–

- ஆடை வடிவமைத்தல் (Apparel Designing)
- மருத்துவ மொழிபெயர்ப்பு
- அலுவலக மேலாண்மை ஆங்கிலம் பேசுதல், ஆளுமை வளர்ச்சி அடைதல்
- தையல் உடை அலங்காரம் (Dress making)
- எண்ணிக்கை 9.1 (Tally 9.1)
- வலைத்தள வடிவமைப்பு
- மறை அமைப்பு வடிம் (Embedded System Design)
- மின்உயிரூட்டும் படம் மற்றும் வரைகலை
- ஆடை வடிவமைப்பு
- கருவி இசை (Key Board & Guitar)
- புகைப்படம் மற்றும் ஒலி ஒளி காட்சி (Videography)
- சுற்றுலா மற்றும் சுற்றுலா மேலாண்மை
- காட்சித் தொகுப்பு / கணினி ஒளி அச்சு Visual Editing / Desktop publishing

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கம் மற்றும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையுடன் இணைந்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிப்பை இடையில் நிறுத்தியவர்கள், ஏழை மற்றும் திறமையான தொழிலாளர்களுக்கு சிறுதொழில்களான நகை செய்தல்,

ஜவுளி, உணவு பதப்படுத்தல், பற்றவைத்தல், குளிர்சாதன பெட்டியை பழுதுபார்த்தல், அச்சு தொழில்நுட்பம், கைப்பேசி பழுதுபார்த்தல், மின்னனு மற்றும் மின்சார சாதனங்களை பழுதுபார்த்தல் (தொலைக்காட்சி, குளிர்பதனப்பட்டி, மின்விசிறி மற்றும் பிறவீட்டு சாதனங்கள்) போன்ற பயிற்சி அளித்து திறன் தேவைகளை நிறைவு செய்து வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும்.

ஈ) ஒரு பல்கலைக்கழகத்திற்கு 10 லட்சம் வீதமாக பத்து பல்கலைக்கழகங்களில் ஒரு கோடி ரூபாய் செலவில் ஆசிரியர்கள் மாணவர்கள் ஆராய்ச்சியாளர்களை பயிற்றுவிப்பதற்காக வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் இருந்து புகழ்பெற்ற பேராசிரியர்களை வரவைப்பதற்கான ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. **மாண்புமிகு தமிழக முதலமைச்சரின்** ஆற்றல் மிக்க வழிகாட்டுதலின் கீழ் அரசு மகளிர் காயிதே மில்லத் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் ஆசிரியர்களுக்கு தகவல் தொழில்நுட்ப திறன்களைப்பெறும் வகையில் மைக்ரோ சாப்ட் நிறுவனத்தின் மூலம் பயிற்சிகள் நடத்துவதற்கு விரைவான நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

உ) வெளிநாடுகளில் இருந்து பன்னாட்டு பயிற்சி பெற்ற நிபுணர்கள் மற்றும் நம்நாட்டில் இருக்கக்கூடிய சிறந்த பேராசிரியர்களிடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டு பாடத்திட்ட வளர்ச்சி மையம் உருவாக்கும் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் ரூ. 1 கோடி வீதமாக பத்து பல்கலைக்கழகங்களுக்கு ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தை தொடர்ந்து பின்வரும் வழிமுறைகளில் பாடத்திட்ட வளர்ச்சி மையங்கள் உருவாக்கப்பட இருக்கின்றன.

- **தகவல் தொகுப்பு உருவாக்குதல்**
- **வளைதளம் உருவாக்குவர் மற்றும் நிர்வாகிகளை பணியமர்த்துதல்.**
- **வெப்போர்டல் (Web Portal)**
- **இணையதள தொடர்பு ஏற்படுத்தி தருதல்**
- **கணினி நகலெடுக்கும் கருவி**
- **எல்.சி.டி. ப்ரஜெக்டர்**
- **காட்சி வழி உரைவசதி மற்றும் சர்வர்**

**1.17** தமிழ்நாடு தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் என்பது மத்திய அரசு, மாநில அரசு மற்றும் தனியார் தொழில் துறையின் பிரதிநிதியாகத் திகழும் சி.ஐ.ஐ. (CII)-ன் முயற்சியால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் ஒரு சுயாட்சி உரிமையுள்ள, இலாபத்தைக் கருதிச் செயற்படாத ஒரு சங்கமாகும். அது சிறப்பு வாய்ந்த தகவல் தொழில்நுட்பவியல் துறையைச் சேர்ந்த முன்னோடிகள் மற்றும் தமிழ்நாடு அரசு அதிகாரிகளால் நிருவகிக்கப்படுகிறது.

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் நோக்கம், தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த செயற்களத்திலுள்ள உயர் கல்வி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதும் அதன்மூலம் அவர்களுடைய மாணவர்கள் தொழில் தொடங்குவதற்கும் மற்றும் பணியில் அமர்த்தப்படக்கூடிய அளவுகளுக்கான தகுதியைப் பெற்று பயனடைவதற்குமேயாகும்.

2011–12ஆம் ஆண்டில், தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனம் பெரிய தொழில் நிறுவனங்களுடன் இணைந்து தமிழக உயர்கல்வி நிறுவனங்களிலுள்ள 1140 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது. இதன் மூலம் 62,000 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனம் 3 பன்னாட்டு ஆய்வு இதழ்களை மூன்று மாதத்திற்கு ஒருமுறை வெளியிடுவதன் மூலம் மாநிலத்தின் ஆய்வாளர்களுக்கு உதவி வருகின்றது. 2011–12ஆம் ஆண்டில் மட்டும் 12 இதழ்களை வெளியிட்டிருக்கின்றது.

1.18 மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து செயல்திட்டங்களை உயர்கல்வியில் மறுமலர்ச்சியை, மறு ஆக்கத்தை ஏற்படுத்தி உன்னதமான இடத்தை நோக்கி தமிழகம் விரைந்து சென்று கொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில், நமக்கெல்லாம் உறுதுணையாகவும் ஓய்வில்லாமல் உயர்ந்த முயற்சிகளை முன் எடுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நாம் நன்றிக் கடன்பட்டவர்கள் ஆவோம்! உயர்கல்வியின் தரத்தை

உயர்த்துவதற்கான முயற்சிகளினால் கீழ்கண்ட இலக்குகளை அடைய உள்ளோம்;

- மேல்படிப்பைத் தொடரும் மாணவர்களின் பலவகையான தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் உயர்கல்வியினை அமைத்தல்

- தொழில்நுட்ப ஆற்றல் மூலம் உலகத் தரத்தை எய்தல்.

- சிறந்த தலைவர்கள் மற்றும் நிறுவன அமைப்பாளர்களை உருவாக்கப் பயிற்சி அளிப்பதற்கு திறமான வழிமுறைகளை வகுத்து வழங்குதல்

- தற்போதைய கல்விசார் நிலைக்கேற்ப தேவையான ஆய்வுமுறையை மேம்படுத்தல்

- மாற்றுத்திறனாளிகளுக்கான உயர்கல்விச் சேர்க்கையை உறுதி செய்தல்

- முறைசார் கல்வி மற்றும் முறைசாராக் கல்வி கற்கும் மாணவர்களுக்குத் தொழிற்சாலைக் கூட்டு இணைவு அமைவதற்கு வழியை உருவாக்குதல்

**1.19 மாண்புமிகு îlöè முதலமைச்சர்** அவர்களின் பொன்மொழியின் அடிச்சுவட்டில் தமிழக இளைஞர்கள் வளமான எதிர்காலத்தை நோக்கி முன்னேறிச் செல்வதற்கு உயர்கல்வித் துறையில் பணிகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

> *“நவீன உலகமயமாக்கப்பட்ட இன்றைய உலகின் விருப்பங்கள் கட்டுக்கடங்காதவைகளாகவும், ஆசைகள் அதீதமானதாகவும் உள்ளன. இவ்விருப்பங்களையும், ஆசைகளையும் ஒருமுகப்படுத்தி, அவற்றை முழுமையாக உருவாக்குவதற்குத் தக்க திசைவழியை வழங்குவது மக்களாட்சி ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் கடமையாகும்”.*

**நிதி ஒதுக்கீடு – 2011 -12**

2011-12ஆம் நிதியாண்டில் திட்டப் பணிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.341.28 கோடியில், ரூ.300.45 கோடி செலவிடப்பட்டு, இதன்மூலம், மொத்த ஒதுக்கீட்டில் 85 சதவீத இலக்கு எய்தப்பட்டுள்ளது.

**நிதி ஒதுக்கீடு – 2012 -13**

மானியக் கோரிக்கை எண். 20, உயர்கல்வித் துறை என்ற தலைப்பின்கீழ் மொத்த செலவினத் தொகை ரூ. 2432.98 கோடி ஆகும். இதில் ரூ. 725.66 கோடி திட்டப் பணிகளுக்கானதாகும். ரூ. 1707.32 கோடி திட்டத்தில் சேராத செலவினமாகும்.

## நிதி ஒதுக்கீடு 2012 - 2013

| கணக்குத் தலைப்பு (1) | | திட்டப் பணி (2) | திட்டத்தில் சேராதது (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|---|
| | | ரூபாய் இலட்சத்தில் | | |
| 2059 | பொதுப்பணி பராமரித்தலும் செப்பனிடுதலும் | - | 2652.41 | 2652.41 |
| 2202 03 | பொதுக்கல்வி பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | 1313.98 | 140433.88 | 141747.86 |
| 2203 | தொழில்நுட்பக் கல்வி | 66560.86 | 26641.96 | 93202.82 |
| 2204 | போட்டி விளையாட்டுகளும் மற்றும் இளைஞர் நலப் பணிகளும் | 1482.12 | - | 1482.12 |
| 2205 104 | கலையும் பண்பாடும் ஆவணக்காப்பகங்கள் | 40.00 | 594.14 | 634.14 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | - | 60.16 | 60.16 |
| 2251 | தலைமைச் செயலகம் சமூகப் பணிகள் | - | 307.47 | 307.47 |
| 3425 | இதர அறிவியல் ஆராய்ச்சி | 492.64 | - | 492.64 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3454<br><br>110 | மக்கள் தொகை புள்ளி விவரங்கள் முழுக் கணக்கெடுப்பு ஆய்வு மற்றும் புள்ளி விவரம், விவரச் சுவடியும், புள்ளி விவரக் குறிப்பேடுகளும் | - | 41.82 | 41.82 |
| 4202 | கல்வி, போட்டி விளையாட்டு கலை மற்றும் பண்பாடு குறித்த மூலதன செலவு | 2676.35 | 0.01 | 2676.36 |
| 7610 | அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | - | 0.01 | 0.01 |
| | மொத்தம் | 72565.95 | 170731.86 | 243297.81 |

## 2011 – 12 – ஆண்டுக்கான பகுதி – II திட்டங்கள்

2011–12 – ஆம் ஆண்டில் பகுதி – II திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 8 கோடி, அப்பணிகளுக்காக முழுவதுமாக செலவிடப்பட்டுள்ளது.

## 2012 – 2013 – ஆண்டுக்கான பகுதி – II திட்டங்கள்

| வ. எண். | திட்டங்களின் விவரம் | இறுதி நிலை செலவு | 2012 – 13 செலவு |
|---|---|---|---|
| கல்லூரிக் கல்வி | | **ரூ. இலட்சத்தில்** | |
| **1** | கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் கணினி வசதிகளை மேம்படுத்துவதற்காக கணினிகள் மற்றும் அதனைச் சார்ந்த உபகரணங்கள் வாங்குதல் | 6.90 | 6.90 |
| **2** | 69 அரசு கல்லூரிகளின் முதல்வர் அலுவலகங்களுக்கு கணினி வசதிகளை மேம்படுத்துவதற்காக கணினிகள் மற்றும் அதனைச் சார்ந்த உபகரணங்கள் வாங்குதல். | 133.13 | 133.13 |
| **3** | 11 அரசு கல்லூரிகளில் கணினி வசதிகளை மேம்படுத்துவதற்காக கணினிகள் மற்றும் அதனைச் சார்ந்த உபகரணங்கள் வாங்குதல். | 159.97 | 159.97 |

| | | | |
|---|---|---|---|
| தொழில்நுட்பக் கல்வி | | | |
| 4 | 5 பொறியியில் கல்லூரிகளில் 20 ஆய்வகங்கள் கட்டுதல் | 150.00 | 150.00 |
| 5 | 8 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 20 வகுப்பறைகள் கட்டுதல் | 150.00 | 150.00 |
| 6 | தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் கணினி வசதிகளை மேம்படுத்துவதற்காக கணினிகள் மற்று அதனைச் சார்ந்த உபகரணங்கள் வாங்குதல் | 100.00 | 100.00 |
| தமிழ்நாடு ஆவணக் காப்பகம் | | | |
| 7 | நூலகம் மற்றும் விவரச்சுவடிப்பிரிவிற்கு எஃகு அட்டங்கள் வாங்குதல் | 12.00 | 12.00 |
| 8 | 1900 ஆண்டிற்கு முன் உள்ள செப்பனிடப்பட்ட ஆவணங்களும் 1900 ஆம் ஆண்டிலிருந்து பாதுகாக்கப்பட்டு வரும் ஆவணங்களும் முதற் கட்ட டிஜிட்டல் மற்றும் நுண்பட சுருள் பணிகள் மேற்கொள்ளுதல். | 12.00 | 12.00 |
| 9 | 1900 ஆண்டிலிருந்து அட்டவணைகளை டிஜிட்டல் பணி மேற்கொள்ளுதல். | 5.00 | 5.00 |
| 10 | தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் 6 மாவட்ட ஆவணக்காப்பங்களுக்கு, ஆவணங்களை உலர வைப்பதற்கு, உலர் அட்டங்கள் மற்றும் பீட வசதியுடன் கூடிய மின்விசிறிகள் வாங்குதல். | 4.50 | 4.50 |
| 11 | கணினிகள் மற்றும் கணினி சார்ந்த உப பொருட்கள் வாங்குதல் | 4.00 | 4.00 |
| 12 | தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் தூசுகளை அகற்ற தூசு அகற்றும் கருவி (Vacuum Cleaner) வாங்குதல் | 1.50 | 1.50 |

| | | | |
|---|---|---|---|
| **13** | புத்தகம் கட்டும் பிரிவிற்கு அழுத்து இயந்திரம் வாங்குதல் | 0.50 | 0.50 |
| **14** | தமிழ்நாடு ஆவணக்காப்பக ஆராய்ச்சிக்கூட ஆராய்ச்சியாளர்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு தண்ணீர் சுத்தப்படுத்தும் அக்குவாகார்டு அல்லது அதற்கு நிகரானது வாங்குதல் | 0.50 | 0.50 |
| தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மாநில மன்றம் | | | |
| **15** | கல்லூரிகளின் ஆய்வு மாணவர் களுக்கான அறிவியல் ஆய்வு நிதியுதவி பற்றாக்குறையை களையும் திட்டம் | 15.00 | 15.00 |
| தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் | | | |
| **16** | வேலூா் மாவட்ட அறிவியல் மையத்தில் மூன்று பக்கங்களில் (மேற்கு திசை தவிர) பாதுகாப்பு சுவர் கட்டுதல் மற்றும் சிமெண்ட் கான்கிரிட் paver blockகள் அமைத்தல் | 18.00 | 18.00 |
| **17** | பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம் மற்று.ம் கோளரங்கம் ஆகியவற்றின் மேல் தளத்தில் Weathering Course மற்றும் மேல்தள ஓடுகளை திரும்ப அமைத்தல் | 12.00 | 12.00 |
| அறிவியல் நகரம் | | | |
| **18** | அறிவியல் விழா | 15.00 | 15.00 |
| | மொத்தம் | 800.00 | 800.00 |

# 2. கல்லூரிக் கல்வி

2.1 உயர்கல்வித் துறையில், தொழிற்கல்வி பாடப்பிரிவுகளில் சேராத மாணவர்கள் உயர்கல்வி பெறும் வகையில், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் பெரும் பங்காற்றுகின்றன.

2.2 1965ம் ஆண்டில் துவங்கப்பட்ட பொதுக் கல்வி இயக்ககமானது இரு பிரிவாக பிரிக்கப்பட்டு, கல்லூரிக் கல்வி இயக்குனரகம் என தனியாக ஏற்படுத்தப்பட்டது. தற்போது கல்லூரிக் கல்வி இயக்குனரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 7 அரசு ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகள், 148 அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 14 அரசு உதவி பெறும் ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 429 சுயநிதிக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 5,10,620 மாணவர்கள் பயில்கின்றனர். உதவிப் பேராசிரியர், இணைப் பேராசிரியர் பதவிகளில் 12,344 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். சுய நிதிக் கல்லூரிகளில் 3,70,019

மாணவர்கள் படித்து வருகிறார்கள். தற்போதுள்ள தேவைகள் மற்றும் போக்குகளைக் கருத்திற்கொண்டு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நவீன பாடப்பிரிவுகளான இளமறிவியல் மின்னணுவியல் மற்றும் தொலை தொடர்பியல், இளமறிவியல் நுண்ணுயிரியல், இளமறிவியல் காட்சி ஊடக தொலைத் தொடர்பியல், இளமறிவியல் ஆடை வடிவமைப்பு, முதுகலை அறிவியல் தகவல் தொழில்நுட்பவியல், முதுகலை அறிவியல் வன உயிரியல் இளங்கலை சுற்றுலா மற்றும் பயண மேலாண்மை, இளங்கலை இதழியல் மற்றும் தகவல் தொடர்பியல், மற்றும் இளங்கலை பாதுகாப்பு ஆகியவை அளிக்கப்படுகின்றன.

**புதிதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்குதல்**

**2.3** உயர் கல்வித் துறையின் வரலாற்றில் முதன் முறையாக இதுவரை இல்லாத வகையில், உயர் கல்வி வசதி இல்லாத இடங்களில் இருபாலர் பயிலும் 11 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2011 ஜீலைத் திங்களில் துவங்கப்பட்டன.

ஸ்ரீரங்கம், (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) நெம்மேலி, (காஞ்சிபுரம் மாவட்டம்) நாகலாபுரம், (தூத்துக்குடி மாவட்டம்) அரூர், (தருமபுரி மாவட்டம்), கள்ளக்குறிச்சி, (விழுப்புரம் மாவட்டம்) சாத்தூர் (விருதுநகர் மாவட்டம்) வேதாரண்யம் (நாகப்பட்டினம் மாவட்டம்), திருப்பத்தூர் (வேலூர் மாவட்டம்), திருத்துறைப்பூண்டி (திருவாரூர் மாவட்டம்), பாப்பிரெட்டிப்பட்டி (தருமபுரி மாவட்டம்) மற்றும் நன்னிலம் (திருவாரூர் மாவட்டம்) ஆகிய இடங்களில் இக்கல்லூரிகள் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளாகத் துவங்கப்பட்டன.

2.4 ஊரகப்பகுதியில் உள்ள பெரும்பாலான முதல்தலைமுறை மாணவர்கள் உட்பட, ஏழை மாணவர்களின் தேவைகள் மற்றும் கனவுகளைப் பூர்த்தி செய்யும் வகையில், இக்கல்லூரிகள் **2531** மாணவர்களுடன் **2011–12**ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்த அனைத்து **11** பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளுக்கு தேவைப்படும் நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**அரசு கல்லூரிகளில் புதியப் பாடப்பிரிவுகள்**

**2.5** அரசு கல்லூரிகளில் இளநிலை மற்றும் முதுநிலை வகுப்புகளில் புதியப் பாடப்பிரிவுகளுக்கு தேவை அதிகரித்து வருகின்றன. இது ஒவ்வொரு நாளும் உயர் கல்வியின் தேவை அதிகரித்து வருவதைக் காட்டுகிறது. **2011–12**ம் ஆண்டில் **15** இளநிலைப்பாடப்பிரிவுகள், **86** முதுநிலை /எம்.பில்/பி.எச்.டி பாடப்பிரிவுகளை **68** பணியிடங்களுடன் துவங்குவதற்கும் **2012–13**ஆம் ஆண்டில் **61** பணியிடங்களுடன் தோற்றுவிப்பதற்கும் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவ்வாறு புதியப் பாடப்பிரிவுகள் மற்றும் பணியிடங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளதை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்கள் வரவேற்றுள்ளனர்.

**சுழற்சிமுறை**

**2.6** சுழற்சி முறை அறிமுகப்படுத்தியதன்மூலம், மாணவர்கள் சேர்க்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

2011–12ம் கல்வி ஆண்டில் சுழற்சி முறை I-ன் கீழ் 34,858 மாணவர்களும் சுழற்சி முறை II-ன் கீழ் 12,040 மாணவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

2.7 அரசு கல்லூரிகளில் சுழற்சி முறை II-ன் கீழ் வகுப்புகளை நடத்துவதற்கு கௌரவ விரிவுரையளர்கள் நியமிக்கப்பட்டனர். 2011–12ம் ஆண்டிலிருந்து கௌரவ விரிவுரையாளர்களின் மாத ஊதியம் ரூ.6000 லிருந்து ரூ.10000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**இலவசக் கல்வி**

2.8 அனைத்து, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் முறையே முதுநிலை மற்றும் இளநிலை வகுப்புகள் வரை அரசால் இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 5,10,620 மாணவர்கள் பயனடைந்துள்ளார்கள். இம்மாணவர்களில் 47.4% மகளிர் ஆவர்.

**இலவச பேருந்து பயணச் சீட்டு**

2.9 அரசு கல்லூரிகளில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படும் இலவச பேருந்து

பயணச்சீட்டு திட்டத்தின் கீழ் **1,53,963** மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

**மகளிர் முன்னேற்றம்**

**2.10** இந்திய ஆட்சிப்பணி / இந்தியக் காவல் பணித் தேர்வுகளில் பங்குபெறும் மகளிருக்கென, சென்னை இராணிமேரி கல்லூரி, மதுரை மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரி ஆகியவைகளில் இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென ஆண்டு தோறும் ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கான ஆங்கில மொழி புத்தாய்வு பயிற்சி திட்டம்**

**2.11** மொழி கற்பித்தலில் உள்ள நவீன நுட்பங்களை ஆசிரியர்களுக்கு அளிப்பதன் மூலம் அவர்களின் ஆங்கில மொழிக் கற்பித்தலை மேம்படுத்துதல் மற்றும் உலகச் சந்தையில் போட்டியிடும் வகையில் மாணவர்களின் பேச்சுத் திறனை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, கல்வி நிறுவனங்களில்

அமெரிக்காவைச் சேர்ந்த TESOL என்ற நிறுவனத்தின் வல்லுநர் 10 மாத ஆதரவுத் தொகையுடன் பணியமர்த்தப்பட்டுள்ளார். இவர் முழுநேர ஆங்கில மொழி ஆங்கில வல்லுநராக செயல்பட்டு, ஒரு வாரத்திற்கு 20 தொடர்பு வகுப்புகளை நடத்துகிறார். மேலும், ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல், பாடக் குறிப்புகள் தயாரித்தல் மற்றும் இதுதொடர்பாக ஆதரவு கல்வி நிறுவனங்கள் குறிப்பிடும் மற்ற நடவடிக்கைகளிலும் இவ்வல்லுநர் பங்கு கொள்வார்.

**கலந்தாய்வு மூலம் இடமாறுதல்**

2.12 கல்லூரிக் கல்வி இயக்குனரகத்தில் பணிபுரியும் ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கு, முதன்முறையாக 2011–12ஆம் கல்வியாண்டில் வெளிப்படையான கலந்தாய்வு மூலம் இடமாறுதல் திட்டம் கொண்டுவரப்பட்டது. இக்கலந்தாய்வில் 84 ஆசிரியரல்லாப் பணியாளர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

**இன்போசிஸ் BPO நிறுவனம் மூலமாக ப்ராஜக்ட் ஜெனிசிஸ் பயிற்சி திட்டம்**

**2.13** இன்றைய உலகச் சூழலில், மாணவர்கள் ஆய்வு செய்யும் திறன் மற்றும் பேச்சுத் திறன்கள் பெற்றிருப்பது அவசியமாகிறது. இதனைச் கருத்திற்கொண்டு பெங்களூரில் உள்ள இன்போசிஸ் BPO நிறுவனத்தின் உதவியுடன் கல்லூரி ஆசிரியர்களுக்கு ப்ராஜெக்ட் ஜெனிசிஸ் பயிற்சி திட்டம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் உதவியுடன் பல்வேறு கல்லூரிகளில் 10 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 205 மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

**பட்டப்படிப்புடன் பட்டயப்படிப்பு அல்லது சான்றிதழ் படிப்பு [ADD ON COURSE] பயிலுதல்**

**2.14** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் பட்டப்படிப்பு மாணவர்கள் பயன் பெறும் பொருட்டு அவர்கள் பட்டப் படிப்புடன், பட்டய / சான்றிதழ் படிப்புகளை பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதனால் மாணவர்கள்

வேலைவாய்ப்பு சந்தையில் போட்டியிடவும் வெற்றிகரமான தொழில் முனைவோராக உருவாவதற்கும் வழி வகுக்கிறது.

**வேலை வாய்ப்பு முகாம்**

**2.15** தொழிற் கல்லூரிகளில் உள்ள பணியமர்த்தும் பிரிவு போல, மாணவர்கள் பயன்படும் பொருட்டு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணியமர்த்தும் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு மையங்களில் வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. அதாவது, அரசு ஆடவர் கலைக் கல்லூரி, நந்தனம், டாக்டர் அம்பேத்கார் அரசு கலைக் கல்லூரி, வியாசர்பாடி, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம், பெரியார் ஈ.வெ.ரா கல்லூரி, திருச்சிராப்பள்ளி, சிக்கன்னா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர் மற்றும் ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி, மதுரை. இவ்வேலைவாய்ப்பு முகாம்கள் மூலமாக **1040** பட்டதாரிகளை முன்னணி நிறுவனங்கள் தேர்வு செய்துள்ளனர்.

**தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகை**

2.16 தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு ரூ.400 ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு ரூ.1.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 33,750 மாணவர்கள் பயன்பெற்றதன் மூலம் இத்தொகை முழுவதுமாக செலவழிக்கப்பட்டுள்ளது.

**தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.**

2.17 அரசு கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்கள், குறிப்பாக ஊரகப் பகுதியில் உள்ள மாணவர்கள் ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடப் பிரிவுகளில் கற்பதற்கு துவக்கத்தில் பிரச்சினைகளைச் சந்திக்கிறார்கள். அவர்களிடம் உள்ள அச்சத்தை போக்கி நம்பிக்கையூட்டும் விதத்தில் அம்மாணவர்களுக்கு, வகுப்புகள் முடிந்த பின் மற்றும் விடுமுறை நாட்களில் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கு ரூ.2 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 11,032 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

**ஆராய்ச்சி மாணவர்களுக்கு (Ph.D) ஊக்கத் தொகை**

**2.18** அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பல்வேறு பாடப்பிரிவுகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்கள் (Ph.D) ஒரு வருடத்திற்கு ரூ. **36,000/–** ஊக்கத் தொகையாக பெறுகிறார்கள். இத்திட்டத்தின் மூலம் **46** ஆராய்ச்சி மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். இதற்கென அவர்களுக்கு ரூ.**16.60** லட்சம் ஊக்கத் தொகையாக அளிக்கப்பட்டுள்ளது.

**நாட்டு நலப்பணித் திட்டம்**

**2.19** **1969**–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் துவங்கப்பட்ட நாட்டு நலப் பணித்திட்டம் தமிழ்நாட்டில் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் **3,71,000** மாணவத் தொண்டர்களுடன், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொழில்நுட்ப நிறுவனங்கள், இந்திய தொழில் நுட்பக் கழகங்கள், ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றில் செயல்படுத்தப்படுகிறது.

**2.20** கிராமங்களைத் தத்தெடுத்தல், தொழுநோய், கண், பல், புற்றுநோய் கண்டறிதல் மற்றும் ஒழித்தல் இதய நலன், தாய் சேய் நலன், முதலுதவிப் பயிற்சி, குருதிக் கொடை, குருதி வகைப்படுத்துதல், குருதி கொடையாளர் பட்டியல் பராமரித்தல், எயிட்ஸ் விழிப்புணர்வு திட்டம், யோகா மற்றும் தியானம் ஆகியவை அடங்கிய சுகாதார முகாம்கள், தலைமை பண்பு பயிற்சி, வேலை வாய்ப்பு வழிகாட்டல் மற்றும் கலந்தாய்வு, மென்திறன் வளர்த்தல், பள்ளிகளின் இடைநிற்றல் மாணவர்கள் கல்வியைத் தொடர உதவி புரிதல், முதியோர் கல்வி ஆகியவை நாட்டுநலப் பணித் திட்டத்தின் சில செயல்பாடுகள் ஆகும். இதன் மூலம் மாணவர்கள் சமூக பண்பு, நலன் மற்றும் அக்கறை ஆகிய பண்புகளுடன் பொறுப்பான குடிமக்களாக மலர்கிறார்கள்.

**2.21** சிறப்பு முகாம்களில் தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் மாணவர்கள் உள்ளூர் இளைஞர்களுடன் சேர்ந்து செயல்படுகிறார்கள். பொதுப் பயன்பாட்டுச் சேவைகள், கழிவறை கட்டுதல், நீர்த் தேக்க தொட்டிகள், சமுகக் கூடங்கள், சுற்றுச் சுவர்கள், விளையாட்டுத் திடல்கள் ஏற்படுத்துதல், சாலை உருவாக்கம் போன்ற

பணிகள் மூலம் நிலையான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுகிறது.

2.22 பின்வரும் சாதனைகள் மூலம் நாட்டுநலப் பணித்திட்ட மாணவர் தொண்டர்களின் சமூக பொறுப்புணர்ச்சி வெளிப்படுகிறது :–

- சுமார் 4 லட்சம் மக்கள் பயன் அடையும் வகையில் சற்றேறக்குறைய ஏறத்தாழ ரூ.6 கோடி மதிப்பீட்டில் நிலையான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- நாட்டுநலப் பணித்திட்ட மாணவர் தொண்டர்களால் 89,133 அலகு குருதி கொடை அளிக்கப்பட்டுள்ளது.
- 4,87,653 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.
- 95,155 கல்வியறிவு இல்லாத நபர்கள், கல்வியறிவு பெற்றுள்ளனர்.
- 90 மாநில அளவிலான மற்றும் 3 தேசிய அளவிலான விருதுகளை வென்றுள்ளனர்.

## விளையாட்டு

2.23 தமிழ்நாட்டில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் விளையாட்டு என்பது கல்வியின் ஒரு பகுதியாகும். மாணவர்கள் விளையாட்டில்

சிறப்பாக செயல்பட்டு தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கு பெற்று பரிசுகள் மற்றும் விருதுகளை வென்றுள்ளனர். இத்தகைய சாதனைகளில் ஒரு சில பின்வருமாறு:–

சென்னை இராணி மேரிக் கல்லூரி மற்றும் காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரிகளை சேர்ந்த செல்வி டி. பாப்பாத்தி, கே. பிரியா மற்றும் பி. லதா ஆகிய மூவரும் தேசிய கபடி போட்டியில் விருதுகள் வென்றுள்ளனர். மதுரை அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவியர்கள் நீச்சல் போட்டியில் பல்கலைக்கழக அளவிலான பட்டத்தை வென்றுள்ளனர். மேலும் அம்மாணவியர்கள் தென்னிந்திய கைப்பந்து போட்டியில் பங்கு பெற்றுள்ளனர். லயோலா கல்லூரி மாணவர்கள் உலக பல்கலைக் கழகங்களின் தடகள போட்டியில் பங்கு பெற்று வென்றுள்ளனர். இச்சாதனையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பாராட்டியுள்ளார்கள்.

# தொழில் நுட்பக் கல்வி

3.1 தமிழ்நாட்டில் தொழில் நுட்பக் கல்வியில் ஒருங்கிணைந்த மேம்பாட்டினை ஏற்படுத்தும் நோக்கத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் 1957ல் அக்டோபர் மாதம் 14ம் நாள் நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில் தொழில் நுட்பக் கல்வியியல் பட்டம் மற்றும் பட்டயச் சான்றிதழ் அளவில் புதிய மேம்பாட்டுத் திட்டங்களையும் கோட்பாடுகளையும் வரையறுத்து சமூகத்தில் ஏழை மற்றும் கிராமப்புற மாணவர்களின் நலனுக்காக தமிழக அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதனை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாட்டில் தற்போது 6 அரசு பொறியியல் கல்லூரிகளும் 3 அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகளும் , 18 அண்ணா தொழில் நுட்பப் பலகலைக்கழகப் உறுப்புக் கல்லூரிகளும் மற்றும் 498 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும் செயல்பட்டு வருகின்றன. இதைத் தவிர 30 அரசு பலவகை தொழில் நுட்ப கல்லூரிகளும் 34 அரசு நிதியுதவி பெறும் பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளும், மூன்று இணைப்பு வகை தொழில் நுட்பக் கல்லூரிகளும் மற்றும் 380 சுயநிதி

பலவகை தொழில் நுட்ப கல்லூரிகளும் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் பொது மற்றும் தனியாருடன் இணைந்து (ppp mode) புதிய இந்திய தகவல் தொழில் நுட்பக் கழகம் (IIIT) நிறுவுதல்**

3.2 2011–12ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டபடி திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (ppp mode) புதிய இந்திய தகவல் தொழில் நுட்பக் கழகம் செயல்படுத்தும் பணி துவங்கியுள்ளது. இதுதொடர்பாக 16.12.2011, 7.2.2012 மற்றும் 9.2.2012 தேதிகளில் முதனிலைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அரசாணை (நிலை) எண். 4, உயர்கல்வி (ஜே1) துறை, நாள் 6.1.2012ல் தலைமைச் செயலாளர் தலைமையில் நிலைக்குழு (Steering Committee) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நிலைக்குழுவின் முதற்கூட்டம் 10.2.2012 அன்று தொழில் துறை பிரதிநிதிகளுடனும், சிறப்பு அழைப்பாளர்களுடனும் நடைபெற்றது. நிலைக்குழுவின் துணைக்குழு கூட்டமும் 24.2.2012 மற்றும் 11.4.2012 அன்று நடைபெற்றது. திருச்சிராப்பள்ளி

மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், சேதுராப்பட்டி கிராமத்தில் 56.37 ஏக்கர் நிலம் தொழில் நுட்பக் கழகம் அமைக்க கையகப்படுத்த அடையாளம் காணப்பட்டுள்ளது.

**தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் புதிய அரசு பொறியியல் கல்லூரி அமைத்தல்**

3.3. 2011–12ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டபடி தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், மேலச்சொக்கநாதபுரம் கிராமத்தில் புதிய அரசு பொறியியல் கல்லூரி 2012–13ம் ஆண்டில் தொடங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதற்காக அக்கிராமத்தில் 12.06 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. மேற்கண்ட கல்லூரி அமைப்பதற்காக ஆசிரியர் / அலுவலர்கள் நியமனம், கட்டிடம் கட்டுதல், உபகரணங்கள் வாங்குதல், கணினிகள், அறைக் கலன்கள், மற்றும் நூலகப் புத்தகங்கள் வாங்குதல் போன்ற பணிகளுக்காக நான்காண்டுகளுக்கு ரூ.9364.94 லட்சம் முதலீட்டில் நிர்வாக அனுமதியும் அரசு வழங்கியுள்ளது. மேலும், 2012–13ஆம் ஆண்டில் கட்டிடம் கட்டுதல் (ரூ.2000.98 லட்சம்), உபகரணங்கள் வாங்குதல் (ரூ.74.00 லட்சம்) மற்றும் பணியாளர் ஊதியம்

(ரூ.448.55 லட்சம்) போன்றவற்றிற்காக ரூ.2523.53 லட்சம் (ரூபாய் இருபத்தைந்து கோடியே இருபத்து மூன்று லட்சத்து ஐம்பத்து மூன்றாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பும் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

**மத்திய நிதியுதவி திட்டம்**

3.4 மத்திய நிதியுதவித் திட்டத்தின் கீழ் ஏழு புதிய பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகள் தருமபுரி, கரூர், பெரம்பலூர், தேனி, திருவாரூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இதுதவிர, மதுரையிலும் பலவகை தொழில் நுட்பக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. 2011–12ம் ஆண்டில் புதியதாக தொடங்கப்பட்ட ஏழு பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளில் இரண்டாமாண்டு மாணவர்களுக்காக உபகரணங்கள் வாங்குதல், இயந்திரங்கள் மற்றும் நூலகப் புத்தகங்கள் போன்றவை வாங்குவதற்காக அரசு ரூ.14.67 கோடி வழங்கி ஆணையிட்டுள்ளது.

**3.5** இந்திய அரசு மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு நிதி திட்டத்தின்கீழ் **19** அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளும், **5** சுயநிதி பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளும், மகளிர் விடுதிகள் தலா ரூ.**1** கோடி வீதம் கட்ட தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அதேபோன்று **20** பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகள் அடிப்படை வசதிகளை மேம்படுத்திக் கொள்ள தலா ரூ.**2** கோடி ஒரு முறை மானியம் வழங்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளில் சுழற்சி முறை பாடத்திட்டம்**

**3.6** **2009–10**ஆம் ஆண்டு முதல் **14** அரசு பல்வகை தொழில் நுட்பக் கல்லூரிகளில் **3420** கூடுதல் மாணவர் சேர்க்கை இடங்களுக்கான சுழற்சி முறை பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் கிராமப்புறத்திலுள்ள தகுதி வாய்ந்த ஏழை, எளிய மற்றும் நடுத்தர மாணவர்களுக்கு பட்டயக் கல்வியை வழங்கும் கொள்கையுடன் அறிமுகப்பட்டுத்தப்பட்டுள்ளது. **2011–12**ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் **3111** மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை**

**3.7** பொறியியல் கல்லூரிகளில் முதல் மற்றும் இரண்டாம் ஆண்டுகளில் ஒற்றைச் சாளர முறையில் சேர்க்கை பெறும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக்கட்டணம் செலுத்துவதிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. **2011–12**ஆம் ஆண்டில் **1,56,987** மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் **2011–12**ஆம் ஆண்டில்**304.27** கோடி ஒதுக்கப்பட்டு, ரூ.**298.90** கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் அகதி முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களில் தகுதிவாய்ந்த காப்பாளர்களுக்கும் (wards) விரிவுபடுத்தப்பட்டுள்ளது. **2012–13**ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.**477.97** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பலவகை தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் மற்றும் பேருந்து கட்டண விலக்கு**

**3.8** அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும்

கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இம்மாணவர்களுக்கு இலவச பேருந்து அடையாள அட்டையும் வழங்கப்பட்டுள்ளது.

**ஒற்றைச் சாளர கலந்தாய்வில் மாணவர் சேர்க்கை**

**3.9** தகுதிவாய்ந்த ஏழை எளிய மாணவர்கள் குறைந்த அளவில் கல்விக்கட்டணம் செலுத்தி பொறியியல் கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்தை கருத்திற்கொண்டு சுயநிதி சிறுபான்மை அல்லாத பொறியியல் கல்லூரிகளில் 65 சதவிகித மாணவர் சேர்க்கை இடங்களும், சுயநிதி சிறுபான்மை பொறியியல் கல்லூரிகளில் 50 சதவிகித மாணவர் சேர்க்கை இடங்களும் ஒற்றைச் சாளர முறையில் அண்ணா பல்கலைக்கழகம் மூலமாக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஒற்றைச் சாளர முறைக்கு விண்ணப்பித்த 1,47,564 மாணவர்களில் 2011–12ம் ஆண்டில் 1,10,166 மாணவர்களுக்கு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.**

**3.10** தமிழ்நாட்டிலுள்ள பொறியியற் கல்லூரிகளில் மற்றும் பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு தேவைப்படும் பயிற்சியினை வழங்க சென்னை தரமணியில் உள்ள தேசிய தொழில் நுட்ப ஆசிரியர்கள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஆசிரியர்கள் தங்களுடைய திறன்களை தற்காலத்திற்கேற்ப மேம்படுத்திக் கொள்வதன் மூலம் கற்றல், கற்பித்தல் திறனை அதிகரித்துக் கொள்ள உதவுகிறது. இதன் மூலம் **603** ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**அரசு பொறியியல் மற்றும் பலவகைதொழில் நுட்பக் கல்லூரிகளில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்**

**3.11** அரசு பொறியியல் கல்லூரிகளில் காலியாகவுள்ள **154** உதவிப் பேராசிரியர் பணியிடங்களையும், பலவகைதொழில் நுட்பக்

கல்லூரிகளில் காலியாகவுள்ள **139** விரிவுரையாளர் பணியிடங்களையும் நிரப்ப அரசு ஆணை வெளியிட்டுள்ளது. ஆசிரியர் தேர்வு வாரியம் இதற்கான விளம்பர அறிவிக்கையை வெளியிட்டு தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

## 3. 12 இதர சாதனைகள்

i) தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியரல்லா பணியாளர் களுக்கான வெளிப்படையான பணியிட மாறுதலுக்கான கலந்தாய்வு **2011–12**ம் கல்வியாண்டில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டு அதன் மூலம் **46** பணியாளர்கள் பயன்பெற்றனர்.

ii) தமிழ்நாட்டிலுள்ள இலங்கை அகதிகளின் குழந்தைகள் **2011–12**ஆம் கல்வியாண்டு முதல் பொறியியல் கல்லூரிகளில் இரண்டாமாண்டு பி.இ., / பி.டெக். (Lateral Entry) மற்றும் எம்.பி.ஏ./ எம்.சி.ஏ. / எம்.இ. / எம்.டெக்., போன்ற முதுநிலை படிப்புகளில் சேர்ந்து படிக்க முதன்முறையாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

iii) **92** ஏழை மாணவர்களுக்கு தலா ரூ.**25,000/–** வீதம் அவர்கள் பி.இ. / பி.டெக்., தொடர்ந்து பயில ஏதுவாக முதலமைச்சரின் பொது

நிவாரண நிதியிலிருந்து கடந்த பத்து மாதங்களில் ரூ.23 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**உயர் திறன□ பயிற□சி மையம் அமைத்தல□**

3.13 சேலம், தியாகராஜர் பலவகை தொழில□ நுட்பக் கல□லூரியில□, நாடு முழுவதிலும் உள□ள முன□னனி நவீன தொழில் நுட்ப வளர்ச்சியடைந்த இலாபகரமான நிறுவனங்களுக்கு ஈடாக, மாணவர்களின□ / பொது மக்களின□ / பணியாளர்களின□ அறிவு மற□றும் திறனை அதிகரிக்க ஒருங்கிணைந்த உயர் திறன□ பயிற□சி மையம் ஒன□று நிறுவப்படுகிறது. கட்டிடப் பொறியியல□ துறையின□ கீழ□ அழிக்க இயலாத நவீன சோதனை பொருண்மை சார்ந்த பயிற□சி ரூ. 210 இலட்சம் செலவிலும், ரூ. 250 இலட்சம் செலவில□□ இயந்திரவியல□ துறையில□ வடிவமைப்பு மற□றும் சி.என□.சி பயிற□சியும், ரூ. 216 இலட்சம் செலவில□, மின□னியல□ மற□றும் மின□ணணுவியல□ துறையில□ VLSI (ம) கணிணியில□ ஒரு நவீன பயிற□சியும் ஆக மொத்தம் ரூ. 676 இலட்சம் செலவில் பயிற்சிகள் அமைக்கப்படும்.

**தொழில் நுட்பக் கல்வித் தர மேம்பாட்டு திட்டம் நிலை II**

**3.14** தொழில் நுட்பக் கல்வித் தர மேம்பாட்டுதிட்டம் நிலை II: இத்திட்டம் மத்திய அரசின் நிதியுதவி திட்டமாகும், மைய மாநில அரசுகளின் பங்களிப்பு விகிதம் **75 : 25** ஆகும். பொறியியல் கல்லூரிகளுக்கு மட்டுமான இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ **2430** கோடியாகும். **2012–13**ஆம் நிதியாண்டில், தோராயமாக ரூ. **86.55** கோடி மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.15** துணை கூறு **1.1.** : ல் பயி□ல□ திறனை முன□னேற□றவும் பயிலும் மாணவர்களை வேலை வாய□ப்புக்கு தகுதியுள□ள பட்டதாரிகளாக உருவாக்கும் பொருட்டும் கல□லூரிகளை வலுப்படுத்த, இத்திட்டத்தின□கீழ□ ஒரு கல□லூரிக்கு ரூ **10** கோடி நிதி ஒதுக்கீடு செய□யப்படும். பர்கூர், அரசினர் பொறியியல□ கல□லூரி இத்திட்டத்தின□கீழ□ தேர்ந்தெடுக்கப்பட்டுள□ளது.

**3.16** துணை கூறு **1.2.** : ல் பட்ட மேற□படிப்பின□ தரத்தினை மேம்படுத்துதல□, தேவைக்கேற□ப ஆராய□ச்சி மற□றும் மேம்பாடு மற□றும் புதிய கண்டுபிடிப்புகள

ஊக்குவித்தல் ஆகியவைகள் அடங்கும். இத்திட்டத்தின் கீழ் ஒரு கல்லூரிக்கு ரூ 12.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அரசு பொறியியல் கல்லூரி, கோயமுத்தூர் அழகப்பச் செட்டியார் பொறியியல் கல்லூரி, காரைக்குடி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, கணிணி பொறியியல் துறை, அரசினர் பொறியியல் கல்லூரி, சேலம் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

# 4. பல்கலைக்கழகங்கள்

உயர் கல்வித் துறையின் ஆளுகையின் கீழ் பின்வரும் பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன :-

1. சென்னைப் பல்கலைக்கழகம்
2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
3. பாரதியார் பல்கலைக்கழகம்
4. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
5. அழகப்பா பல்கலைக்கழகம்
6. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
7. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
8. பெரியார் பல்கலைக்கழகம்
9. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
10. தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம்
11. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
12. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
13. அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.

## சென்னைப் பல்கலைக்கழகம்

4.1. 1857 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம் நாட்டின் மிகப் பழமைவாய்ந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும். இந்திய துணைக் கண்டத்தில் குறிப்பிடத்தக்க வகையில் ஏற்பட்டிருக்கும் கல்வி வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக சென்னைப் பல்கலைக்கழகம் திகழ்கிறது.

4.2. பல்கலைக்கழக நிதிநல்கை குழு தோன்றிய 1956 ஆம் ஆண்டு முதலே சட்ட விதி 2(எப்) மற்றும் 12(பி) யின் கீழ் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் தற்போது 6 வளாகங்களில் இயங்கி வருகிறது. அனைத்தும் சென்னைப் பெரு நகரப் பகுதியிலேயே அமைந்துள்ளன.

4.3. 'தன்னாட்சிக் கல்லூரிகள்' (Autonomous Colleges) எனும் சித்தாந்தத்தை பல்கலைக்கழக முறையில் அறிமுகப்படுத்திய முதல் பல்கலைக்கழகம் சென்னைப் பல்கலைக்கழகமாகும். இதனால்

‘தன்னாட்சிக் கல்லூரி’ எனும் அங்கீகாரம் பெறும்முகமாக, கல்லூரிகள் தமது கல்வித் தரத்தையும் கட்டமைப்பு வசதிகளையும் உயர்த்துவதற்கு ஊக்கப்படுத்தப்பட்டனர். மேலும் மிகச் சிறப்புதகுதி வாய்ந்த கல்லூரி என்ற நிலையை அடைய ஆவல் கொண்டன. தற்போது 126 கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ளன. இவற்றுள் 20 கல்லூரிகள் தன்னாட்சிக் கல்லூரிகளாகும். மேலும் இப்பல்கலைக்கழகத்தில், 18 புலங்களின்கீழ் 72 பயிற்றுவித்தல் மற்றும் ஆய்வுத்துறைகள் உள்ளன.

## 4.4. பல்கலைகழகத்தின் இதர செயல்பாடுகள்

1. விருப்பார்ந்த தர மதிப்புத் திட்டம்
2. நாட்டு நலப் பணித் திட்டம்
3. வேளாண் பொருளியல் ஆய்வு மையம்
4. சென்னைப் பல்கலைக் கழக ஒன்றியம்
5. பல்கலைகழக மாணவர் ஆலோசனை மையம்
6. கல்விப் பணியாளர் கல்லூரி
7. கல்லூரி வளர்ச்சிக் குழு
8. பல்கலைக்கழக பன்னாட்டுத் தொடர்பு மையம்
9. முன்னாள் மாணவர் சங்கம்
10. பணியமர்த்தும் பிரிவு
11. தொடு திரைத் தகவல் வசதி

12. இணையதளம் www.unom.ac.in மற்றும் www.ideunom.ac.in)
13. கணினி மற்றும் வலைதளம்
14. செயற்கைக்கோள் வழிக் கல்வி
15. பதிப்புத் துறை
16. நூலகம்
17. ஆய்வு, ஆலோசனை மற்றும் விரிவாக்கம்
18. பல்கலைக்கழகம், தொழில்நிறுவனம், சமுதாய தொடர்பு மையம்
19. பல்கலைக்கழக சிறப்புத் தகுதி – செயல்திட்டங்கள்
20. தனிநபர் திட்டங்கள், ஆய்வு திட்டங்கள்
21. துறை ஆங்கீகாரங்களும் ஆய்வுத் திட்டங்களும்.
22. தமிழ்நாடு அரசு பல்கலைக்கழகத் திட்டங்கள்
23. முனைவர் பட்ட ஆய்வுத் திட்டங்கள்
24. ஆய்வு வெளியீடுகள்
25. ஒற்றைச் சாளர முறை மாணவர் சேர்க்கை
26. இணையப் பல்கலைகழக உருவாக்கம்
27. ஆப்பிரிக்க மாணவர்களுக்கு முதுகலை (தகவல் தொழில்நுட்பம்) மற்றும் இளங்கலை தொழில் நிர்வாகம் (B.B.A). இணையதளம் வழியாக வழங்கும் திட்டம்.

## 4.5 சாதனைகள்

காஞ்சிபுரத்தில் உள்ள நெமிலியில் இந்த பல்கலைக்கத்தின் முதல் உறுப்புக் கல்லூரியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 18.7.2011 அன்று தொடங்கி வைத்தார்.

- அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வெளியீடுகளுக்கான **"எச்"** அட்டவணையின் அடிப்படையில் இந்தியா டுடே யின் நீல்சன் ஆய்வு **15.11.2011** அன்று அளித்த இந்தியாவின் **538** பல்கலைக் கழகங்களின் தரவரிசையில் **5** வது இடத்தில் இப்பல்கலைக்கழகம் உள்ளது.

- **2011** ஆம் ஆண்டின் "Mover திட்டம்–**2011**" அனுமதி வழங்கப்பட்டுள்ளது இத்திட்டம் ஸ்பெயின் நாட்டின் மூர்சியா பல்கலைக்கழகத்துடன் ஒத்திசைந்து நடத்தப்படும் மஹேவா திட்டத்தின் தரம் உயர்த்தப்பட்ட திட்டமாகும், (எராஸ்மஸ் முண்டாஸ் ஆக்ஷன் **2)** மேலும் ஐரோப்பிய ஆணைக்குழுவால் நிதியளிக்கப்பட்டு பட்டப்படிப்பு, உயர் முதுகலைப்பட்டப்படிப்பு மற்றும் ஆராய்ச்சி படிப்புப் படிக்கும் மாணவர்கள் ஐரோப்பிய பல்கலைக் கழகத்தில் மானியம் மூலமாகப் படிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி தருவதாகும்.

## புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

- உலகம் முழுவதும் உள்ள மிகப் புகழ் வாய்ந்த **114** பல்கலைக்கழகங்களுடன் ஜுன் **2011** முதல் இதுவரை புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. மேலும் HCL, TCS போன்ற பெரிய தொழில் நிறுவனங்களுடன் பல்கலைக்கழக தொழில் நிறுவனங்கள் கூட்டிணைவு திட்டம் மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப் பட்டுள்ளன.

- **6** காப்புரிமை பட்டயங்கள் கையெழுத்திடப்பட உள்ளன.

**மாணவர் நலன் தொடர்பான நிகழ்ச்சித் தொகுப்புகள்**

- SAARC நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் 40% கற்பித்தல் கட்டணச் சலுகை பெறத்தக்கவராவர். இந்திய மாணவர்களுக்கு இணையாக இலங்கை மாணவர்களும், திபெத்தியன் அகதிகளும் கற்பித்தல் மற்றும் இதர பாட கட்டணங்கள் செலுத்த சலுகை வழங்கப்பட்டுள்ளது.

- "கற்கும் போதே சம்பாதிக்கும் திட்டம்" பல்கலைகழகத்தின் உயர்கல்வி மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. தகுதி வாய்ந்த மாணவர்கள் பகுதி நேர ஆய்வுக் கூட உதவியாளர்களாகவும், நூலக உதவியாளர்களாகவும், தொழில் நுட்ப உதவியாளர் களாகவும், கற்பிக்கும் உதவியாளர்களாகவும் தக்க மாத ஊதியத்துடன் பணி புரிவார்கள்.

- இப்பல்கலைகழக்தின் அனைத்து மாணவர்களுக்கும் மென்–திறன் பயிற்சியளிக்கும் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இப்பல்கலைக்கழகத்தின் அனைத்து மாணவர்களுக்கும் முதுகலைப் பட்டங்கள் பெற இக்கல்வித் திட்டத்தின் மூலம் 8 தரமதிப்புப் பெற வேண்டுமென்பது கட்டாயமாகும்.

- மாணவர் கட்டாய காப்பீட்டு திட்டம் ஆராய்ச்சிக் கல்வி மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஏழு பெற்றோர்கள் ஏற்கனவே ரூ. 7 இலட்சம் பெற்றுப் பயனடைந்துள்ளார்கள்.

- பல்கலைக்கழகத் துறைகளுக்கும், பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்ற கல்லூரிகளுக்கும் தணிக்கை மற்றும் உள்ளார்ந்த தர உறுதித்திட்டம் உருவாக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

- மின்னணு நிர்வாகத் திட்டத்திற்கு பல்கலைக் கழகத்தை விரைவாக மாற்றுவதற்கு அனைத்து நிர்வாகப் பிரிவு ஊழியர்களுக்கும் தகவல் தொடர்பு அடிப்படையிலான கணினிப்பயிற்சி இலவசமாக வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது.

- மின்னணுவியல் மூலமான நிர்வாகத்தினாலும், முனைவர் பட்ட ஆய்வேடுகளில் நடைபெறும் அறிவுத் திருட்டினைக் கண்டறியும் Turnitin மென்பொருள் பயன்பாட்டில் உள்ளதாலும் முனைவர் பட்டங்கள் விரைவாகவும் சரியாகவும் வழங்கப்பட்டு வருகின்றன.

- பல்கலைக்கழகத் துறைகளிலும் குறிப்பாக இணைவு கல்லூரிகளில் பயிலும் ஏழை, கிராமப்புற மாணவர்களின் வசதிக்காக இலவசக் கல்வித்திட்டம் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் 50 மாணவர்கள் பல்கலைக்கழகத் துறைகளில் பயன் பெற்றுள்ளனர். மேற்படி மாணவர்களுக்குத் தேவையான பாடப்புத்தகங்கள் இந்த இலவசத் திட்டத்தின் வழி வழங்கப்பட்டு வருகிறது.

- முதுகலை, இளநிலை ஆய்வு, முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவியரின் நலனுக்காக, சேப்பாக்கம் வளாகத்தில் நான்கு மாடியில் மாணவியர் விடுதி கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்திற்கான வரைபட அனுமதிக்காகச் சென்னைப் பெருநகர வளர்ச்சிக்

குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. தரமணி வளாகத்தில் அமைந்திருக்கும் மாணவியர் விடுதியில் மேலும் ஒரு தளம் கட்டப்பட்டு வருகிறது.

- மாணவர் நலனுக்காக வேலைவாய்ப்பு ஆலோசனை குறைதீர்ப்பு மையமும் சேப்பாக்க வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் மாணவர்களும் பெற்றோர்களும் வளமான வாழ்க்கைக்கு தகுந்த, உபயோகமான தகவல்களை பெறுகின்றனர்

- வணிகவியல் (ஆனர்ஸ்) கற்கும் மாணவர்களுத்குத் தொழிலகப் பயிற்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது 2011–12 ஆம் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற நான்கு கல்லூரிகள் இந்தப் பயிற்சியுடன் கூடிய வணிகவியல் (ஆனர்ஸ்) பட்டப்படிப்பை வழங்குகின்றன. இத்திட்டத்தினால் 160 மாணவர்கள் தொழிலகப் பயிற்சி பெற்று பயனடைந்துள்ளனர்.

- சென்னை மாதவரத்தில் உள்ள அகர்சன் கல்லூரியிலும், காஞ்சிபுரத்தில் உள்ள சங்கரா கல்லூரியிலும் சமுதாயக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. நகர்ப்புறம் மற்றும் கிராமப் புறத்தில் உள்ள கல்வி பெறாத இளைஞர்கள் வேலை வாய்ப்பினைப் பெறும் நோக்கத்தில் இக்கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. நுகர்வோர் உறவு மின்னணுவியல் நுட்பவியலாளர், மகளிர் ஓட்டுநர், உணவக நிர்வாகம் முதலான பயிற்சிகள் அகர்சன் கல்லூரியில் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றுடன் அழகுக்கலைப் பயிற்சி, செல்பேசி பழுது நீக்கல், தையல் கலை, கணினி பழுது நீக்கல்

முதலானவற்றிலும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. சங்கரா கல்லூரியில், தையல்கலை, மின்னியல், குளிரூட்டும் கருவி, செல்பேசி பழுதுநீக்கல், பல்ஊடகம் முதலானவற்றில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேற்படி பயிற்சிகள் 16 வயது முதல் 35 வயது வரை உள்ளவர்களில் முறையாகக் கல்வி பயில இயலாதவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

- மாணவர்களின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு வங்கிகள் தாமாக முன்வந்து நிதி உதவி செய்கின்றன.

- பல்கலைக் கழகத்தின் அனைத்து வளாகங்களிலும் மின் நூலகம் உருவாக்கப்பட்டுவருகிறது.
- அனைத்து வளாகங்களுக்கும் கணினி வலைத் தொடர்பு வழங்கப்பட்டுள்ளது.

- மேம்பட்ட கணினி இணையதள வசதிகள் உள்ளன.

- கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன.

- தொலைநிலைக் கல்வி மாணவர் சேர்க்கையிலும் ஒற்றைச் சாளர முறை பின்பற்றப்படுகிறது.
- மாற்றுத் திறனாளி மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது.

## 4.6. 2012–2013 ஆம் கல்வியாண்டிற்கான செயல்பாடுகளும் திட்டங்களும்

- ஐந்து புதிய துறைகள் உருவாக்கப்படவிருக்கின்றன.

- கணினிக் குற்றத் தடயம் மற்றும் தகவல் பாதுகாப்பு மையம், தேசிய நரம்பு, நஞ்சு ஆராய்ச்சி மையம், கைதிகள் மறுவாழ்வு மையம் ஆகிய மூன்று புதிய மையங்கள் தோற்றுவிக்கப்படவுள்ளன.

- எல்லா வளாகங்களிலும் சூரிய மின்னாற்றல் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- எல்லா வளாகங்களிலும் wi-fi இணைப்புவழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- எல்லா வளாகங்களிலும் உடல் நல மையங்களும் மாணவர்களுக்கான அனைத்து வசதி மையங்களும் உருவாக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- ஆசிரியர்கள் மற்றும் மாணவர் பரிமாற்றச் சேவை மற்றும் ‘மூவர்’ (Mover) திட்டம்.

- ஆசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிற்சித்திட்டம் மற்றும் முதுமுனைவர் பட்ட ஆய்வு உதவித்திட்டம்.

- கல்வி உதவித் தொகை கிடைக்காத அனைத்து மூன்றாமாண்டு முழுநேர முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை சம்பளமாக ரூ.2000/–வழங்கப்படும்.

- HCL – உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி அனைத்து இறுதியாண்டு மாணவர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படும்.

- பன்னாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் ஒருங்கிணைக்கப் பட்ட முனைவர் பட்ட ஆய்வுத்திட்டம் (Ph.D)

- இங்கிலாந்திலுள்ள நோர்த்தெம்டன் பல்கலைக் கழகத்துடனான (University of Northampton) ஒருங்கிணைப்புடன் கழிவுப்பொருள் மேலாண்மைக்கான பன்னாட்டுக் கல்வி மையம் உருவாக்குதல்.

- ð™è¬ô, èöè CøŠ¹ˆ î°F திட்டத்தின் II –ஆம் பாகம் அறிமுகப்படுத்துதல்

## மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

4.7. சிறப்பு தகுதி பெற்ற பல்கலைக்கழகமான மதுரை காமராசர் பல்கலைக்கழம் 1966–ல் நிறுவப்பட்டது. இந்தியாவில் உள்ள 471 பல்கலைக்கழகங்களில் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவினரால் 9 பல்கலைக்கழகங்கள், சிறப்பு தகுதி பெற்ற பல்கலைக்கழகங்கள் என்று கண்டறியப்பட்டுள்ளன. அந்த 9 பல்கலைக்கழகங்களில் மதுரை காமராசர் பல்கலைக்கழகமும் ஒன்று. இப்பல்கலைக்கழகத்தில் 74 துறைகளை உள்ளடக்கிய 18 புலங்கள் உள்ளன. மொத்தம் 96 கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்தில் இணைவு பெற்றுள்ளன. இவற்றுள் 2 அரசுக் கல்லூரிகள், 12 அரசு உதவி பெறும் கல்லூரிகள், 21 தன்னாட்சிக் கல்லூரிகள், 33 சுயநிதிக் கல்லூரிகள், 4 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், 5 மாலை நேரக் கல்லூரிகளும் அடங்கும். இவை தவிர 20 அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயல்படுகின்றன. தொலைநிலைக் கல்வி இயக்ககமானது புதுதில்லி

பல்கலைக்கழகத்திற்கு அடுத்தபடியாக ஆரம்பிக்கப்பட்ட தொன்மை வாய்ந்த ஒன்றாகும்.

<u>**சமுதாய கல்லூரிகள்**</u>

4.8. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் தனது இணைப்புக் கல்லூரிகளின் மூலமாக 10 சமுதாயக் கல்லூரிகளை நிறுவியுள்ளது. இவை மதுரை மாவட்டத்தில் 5, விருதுநகர் மாவட்டத்தில் 4, தேனி மாவட்டத்தில் ஒன்று என பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. 9 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் ஒத்துழைப்போடு ஆறு மாத காலத்தில் பத்துப் பாடங்கள் நடத்தப்படுகின்றன. இளைஞர்களுக்கு மென்திறன் ஆற்றல், தொழில் முனைவோர் மேம்பாடு, ஆக்கபூர்வமான மனப்பான்மை உருவாக்க மதிப்பீட்டுக் கல்வி ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

**பல்கலைக்கழகத்தில் பசுமை வளாகம்**

4.9. பல்கலைக்கழகம் வளாகத்தை பசுமையாவும், தூய்மையாகவும் ஆக்குவதற்காக மதுரை காமராசர் பல்கலைக்கழகமும், தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகமும் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில்

கையெழுத்திட்டுள்ளன. இதன்படி பசுமை வளாக உருவாக்கத்திற்காக ரூ.20 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

**அண்ணா நூற்றாண்டு விழா இந்திய ஆட்சிப்பணி தேர்வுகளுக்கான பயிற்சி**

**4.10.** இந்திய ஆட்சிப்பணித் தேர்வுகளுக்கு 100 மாணவர்களை கட்டணமின்றி பயிற்றுவிப்பதற்காக தமிழ்நாடு அரசு ஓர் பயிற்சி மையத்தை இந்தப் பல்கலைக்கழகத்தில் நிறுவியுள்ளது.

**சாதனைகள்**

**கருத்தரங்கம் மற்றும் பயிற்சிப்பட்டறைகள்**

**4.11.** மத்திய, மாநில அரசுகளின் நிதி நல்கை அமைப்புகளிடமிருந்து நிதி உதவி பெற்று அனைத்து துறைகளும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பயன்பாட்டிற்காக கருத்தரங்குகள் பயிற்சி பட்டறைகள் மற்றும் மாநாடுகள் நடத்தி உள்ளன. இத்தகைய நிகழ்வுகளால் தேசிய மற்றும் பண்பாட்டுக் கல்வியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்து கொண்டு தங்களின் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் மற்றும் பதிவுகளை கருத்து பரிமாற்றம் செய்துகொள்கிறார்கள். புதிய ஆராய்ச்சிக்கான தளங்களும் அடையாளப்

படுத்தப்பட்டன. மேலும் ஆய்வு அறிஞர்கள் ஆராய்ச்சியில் தேசிய மற்றும் உலகளவில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

4.12 கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்களின் நலன் கருதி மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆசிரியர் மேம்பாட்டுக் கல்லூரி 11 புத்தாக்கப் பயிற்சிகளையும், 3 புத்தொளி பயிற்சிகளையும் நடத்தியது. புதிதாகப் பணியமர்த்தப்பட்ட பல்கலைக்கழக துணைப் பேராசிரியர்களுக்காக ஐந்து நாள் அறிமுகப் பயிற்சி ஒன்று நடத்தப்பட்டது.

- ❖ பல்வேறு கருத்து பரிமாற்ற நிகழ்ச்சிக்காக தைவான், ஜெர்மனி, சிங்கப்பூர், இலங்கை, இத்தாலி, ஆப்பரிக்கா, ஐக்கிய அமெரிக்கா, சீனா, சுவிட்சர்லாந்து, ஆகிய நாடுகளில் இருந்து ஆராய்ச்சி அறிஞர்கள் 2011ல் இப்பல்கலைக்கழகத்திற்கு வருகை புரிந்துள்ளனர்.
- ❖ 122 ஆராய்ச்சி கட்டுரைகள் இப்பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்களால் ஜெர்மனி, சிங்கபூர், தைவான், இலங்கை, இத்தாலி, ஆப்பரிக்கா, அமெரிக்கா, சீனா சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் நடைபெற்ற கருத்தரங்குகளில், விலங்கு நடவடிக்கை மற்றும் உடலியல் (animal behaviour and physiology) உயிர் வேதியியல், மரபியல், நோய் எதிர்ப்பியல் (immunology) நுண்ணுயிர் தொழில்நுட்பம், தாவர அறிவியல், மரபணு பொறியியல், மூலக்கூறு நுண் உயிரியல், நானோ அறிவியல், சூரிய இயற்பியல், யோகா , பூகோள

தகவலியல் ஆகிய தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ளன.

- ❖ மேலும் ஜெர்மனி, நெதர்லாந்து, சீனா, நார்வே, ஐக்கிய அமெரிக்கா, இத்தாலி போன்ற நாடுகளில் இருந்து ஆராய்ச்சி அறிஞர்கள் இப்பல்கலைக்கழகத்திற்கு வருகை புரிந்துள்ளனர்.

- ❖ கற்றல், கற்பித்தல் தரத்தை மேம்படுத்த மின்னணுவியல் கல்விமூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதற்கென இன்பொனெட் மையம் 50 கணினிகளுடன் ஜுன் 2012 முதல் செயல்பட உள்ளது.

- ❖ ஆராய்ச்சி பணிக்காக ரூ. 20.5 கோடி பல்கலைக்கழக மான்யக் குழு மற்றும் பிற நிதி நல்கைக் குழுவிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

## வெளிநாட்டுடன் கூட்டிணைவு

**4.13** இந்தோ–தைவான் பரிமாற்ற திட்டத்தின் கீழ் ஆறு அறிஞர்கள் **2011**–ல் தைவான் பல்கலைக் கழகத்திலிருந்து இப்பல்கலைக்கழகத்திற்கு வருகை புரிந்தனர்.

**4.14** புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் மதுரை பல்கலைக்கழகமும், பிரிட்டனில் உள்ள கீல் (KEELE) பல்கலைக்கழகமும் **30.02.2012** அன்று ஒப்பந்தம் செய்து கொண்டன. இதன்படி கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பும் தேவைக்கேற்ப புதுமையான கல்வித்திட்டம் வளரச் செய்யவும் இரு பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் இவற்றில் பங்கேற்கவும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

## பாரதியார் பல்கலைக்கழகம்

4.15 பாரதியார் பல்கலைக் கழகம், பிப்ரவரி 1982–ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இப்பல்கலைக் கழகமானது, கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் உதகமண்டலம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகமானது 33 கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சித் துறைகளை உள்ளடக்கி 13 புலங்களாக செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகம், ஆராய்ச்சியுடன் கூடிய பாடத்திட்டத்தில் தரத்தை மேம்படுத்தி, சமுதாயத்திற்கு உகந்த வகையில் சிறப்பு தகுதி பெறும் நிலை நோக்கி முன்னேறுவதை தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

4.16 இப்பல்கலைக்கழகத்தின்கீழ் உள்ள, 105 கல்லூரிகளில், 22 தன்னாட்சிக் கல்லூரிகள் மற்றும் 83 சார்புக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு 1,80,000–க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி பட்டதாரிகள் படித்து பட்டம் பெற்று வருகின்றனர். தேசிய தரக்கட்டுப்பாட்டு மையம், இப்பல்கலைக் கழகத்திற்கு A (CGPA : 3.02) சான்றிதழ் மீண்டும் வழங்கி கௌரவித்துள்ளது.

4.17 பாரதியார் பல்கலைக் கழகம் அனைவருக்கும் தரமான உயர்கல்வியை வழங்கி திறமை கொண்ட குடிமக்களை உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. மேலும், 'பயிற்று பலகல்வி' தந்து இப்பாரை உயர்த்திடவேண்டும் என்னும் பாரதியாரின் கவிதை வரிகளை பின்பற்றி, நாட்டின் நலம், முன்னேற்றம் மற்றும் சமுதாய வளர்ச்சியை உயர்த்துவதே முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

**சமுதாயக் கல்லூரி**

4.18 இப்பல்கலைக்கழகத்தில் ஏப்ரல் 2007–ம் ஆண்டு சமுதாயக் கல்லூரி என்ற அமைப்பு தொடங்கப்பட்டது. இவ்வமைப்பின் கீழ் அங்கீகாரம் பெற்ற 11 சமுதாயக்கல்லூரிகள், சமூகத்தில் நலிவடை.ந்த மற்றும் பொருளாதாரத்தில் பின்னடைவில் உள்ள மாணவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் திறனை உயர்த்துவதே முக்கிய நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகின்றது.

**கல்விப் பணியாளர் கல்லூரி**

4.19 கல்விப் பணியாளர் கல்லூரி 1987–ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. கடந்த 25

ஆண்டுகளில் ஆசிரியர்களின் திறனை மேம்படுத்த பல திறன்மேம்பாட்டு பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 242 புத்தாக்கப் பயிற்சிகள் பல துறைகளை சார்ந்த ஆசிரியர்களுக்கு (அறிவியல், கலை, வணிகம், சமூக அறிவியல், மொழியியல் மற்றும் பல) பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டு அதன் வாயிலாக 6694 ஆசிரியர்கள் பயன் பெற்றுள்ளனர். மேலும் 2011–2012–ம் ஆண்டில் பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட அனைத்து மேம்பாட்டு திட்டங்களையும் செயல்படுத்தி சாதனை புரிந்துள்ளது.

**தொலைதூரக் கல்விச் சேவை**

4.20 தொலைதூரக் கல்விச் சேவை 1991–92–ம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டது. இச்சேவையின் முக்கிய நோக்கமானது தரமான நிறைவான கல்வி சேவையை கல்வி பயில முடியாத மாணவர்களுக்கும், பல துறைகளில் தங்களின் அறிவுத்திறனை மேம்படுத்த முனையும் மாணாக்கர்களுக்கும் வழங்குவதே ஆகும். இத்துறையின் கீழ் 300 பகுதிநேர கல்வி மையங்களும், 162 பங்கேற்றல் மற்றும் இணையதள மையங்களும்

செயல்பட்டு வருகின்றன. மொத்தம் 73,605 மாணாக்கர்கள் பங்கு பெற்று பயனடைந்துள்ளனர்.

**சாதனைகள்**

- ❖ மேலாண்மை மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுத்துறை கனடாவில் உள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பிரொவின்ஸ் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கல்வி மற்றும் ஆராய்ச்சி மேலாண்மைக்கான ஆய்வை மேற்கொள்ள ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- ❖ அறிவியல் துறை மெக்சிகோவில் உள்ள சின்வெஸ்டாவ் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சி மேற்கொள்ளவும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பரிமாற்றம் செய்து பகுதிநேர மற்றும் சிறப்பு சொற்பொழிவு ஆற்ற ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- ❖ நுண்ணறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை கனடாவில் உள்ள ஆல்பர்ட்டா பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சி மேற்கொள்ளவும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பரிமாற்றம் செய்து பகுதிநேர மற்றும் சிறப்பு சொற்பொழிவு ஆற்ற ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- ❖ சமூகப் பணியியல் துறை ஜெர்மனியில் உள்ள சி.பி.எம். கிறிஸ்டோபல்–கிறிஸ்டியன் பிளைண்ட் மிஷனுடன் இணைந்து பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் இணைப்புக் கல்லூரிகளில் உள்ள மாற்றுத்திறனாளி மாணவர்களை கண்டறிந்து அவர்களை மேம்படுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

- ❖ பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் வாயிலாக வளைதளம் மூலம் நூலகத்தை அமைக்கப்பெற்று, மின்னணு இதழ்கள்/மின்னணு–கற்பித்தல்/ மின்னணு –கல்வி பெறுதல் மூலமாக 6800–க்கும் மேற்பட்ட தேசிய மற்றும் உலகளவில் பிரசித்தி பெற்ற கல்வித்துறை ஆய்வேடுகளை கணினியின் மூலம் ஏற்றப்பட்டு அனைவரும் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

- ❖ 3000–க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மற்றும் இணைப்புக் கல்லூரிகளின் மாணவர்களுக்கு டி.சி.எஸ், எச்.சி.எல் மற்றும் விப்ரோ நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளது.

- ❖ இவ்வாண்டில் 80 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு இந்திய °®¬ñŠ ðE^ தேர்வுக்கு அண்ணா குடிமைப்பணி மையம் மூலமாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

- ❖ இந்தியாவிலேயே இந்திய விமானப்படை பைலட் அதிகாரி தேர்வில் முதலிடத்தில் பல்கலைக்கழக மாணவர் திரு வெங்கடேஷ் தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்பது சிறப்பு அம்சமாகும்.

- ❖ உடற்கல்வித்துறை, யு.ஜி.சி நிதிநல்கைக்குழு வாயிலாக மண்டல நீர்வள மையம், பொங்டம்–இமாச்சல் பிரதேசம் மற்றும் கூடலூர்–தமிழ்நாடு ஆகிய இடங்களில் மாணவர்களுக்கு மலையேறும் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

- ❖ ஊடகம் மற்றும் தகவல் தொடர்பியல் துறை ஜாப்னா பல்கலைக்கழகத்துடன் இணைந்து 20–க்கும் மேற்பட்ட ஆவணப் படங்கள் மற்றும் குறும்படங்கள் வெளியிட்டுள்ளனர்.

- ❖ பல்கலை நிதிநல்கைக்குழுவால் ரூபாய் 10 லட்சம் பல்கலைக்கழக அடிப்படை வசதி மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கை துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- ❖ மத்திய அரசின் (UGC-DST) பல்வேறு நிதிநல்கை நிறுவனங்களிடமிருந்து ரூ.56.45 லட்சம் பெற்று ஆசிரியர்களால் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ❖ மியா–டிரஸ்ட் (MEA-TRUST) மூலம் இருந்து ரூ.96,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ❖ மகளிரியல் துறை அமெரிக்கன் நூலகம், சென்னையுடன் இணைந்து மூன்று நாள் கருத்தரங்காக மகளிர் மற்றும் பெண்களுக்கான கல்வி மேம்பாட்டு திறன் பற்றி கலந்தாய்வு நடத்தப்பட்டது.

### கருத்தரங்குகள் மற்றும் பட்டறைகள்

- ➢ இப்பல்கலைக்கழகத்தில் 10 உலகளாவிய தேசிய கருத்தரங்குகள், 28 தேசிய அளவிலான கருத்தரங்குகள், 12 மாநில அளவிலான கருத்தரங்குகளும் மற்றும் 2 கலந்தாய்வுகளும் நடத்தப்பட்டுள்ளன.
- ➢ 258–க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிகள் உலகளாவிய மற்றும் தேசிய அளவிலான கருத்தரங்குகளில் ஆசிரியர்கள் பங்கேற்றுள்ளனர்.

- 60–க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பிரசித்தி பெற்ற இதழ்களில் வெளியிட்டுள்ளனர்.
- 32 புத்தகங்கள் இப்பல்கலைக்கழக பேராசிரியர்களால் இவ்வாண்டு எழுதி வெளியிடப்பட்டுள்ளது.
- பல்வேறு துறைகளைச் சார்ந்த 30 பேராசிரியர்கள் பெங்களூரில் மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தால் நடத்தப்பட்ட பாதுகாப்புத்தர நிர்ணயம் ªî£ì˜ð£è ï¬ìªðŸø 3 நாள் கருத்தரங்குகளில் பங்கு பெற்றனர்.

**எஸ்.சி., எஸ்.டி மற்றும் சிறுபான்மை மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு**

4.21 பல்கலைக்கழக விரிவாக்கம் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துடன் (THADCO) இணைந்து மூன்று நாள் கருத்தரங்கு நடத்தியது. இதில் பல்கலைக்கழக இணைப்பில் உள்ள கல்லூரிகளில் வேலைவாய்ப்பு அலுவலர்களுக்கு எஸ்.சி., எஸ்.டி மற்றும் சிறுபான்மை மாணவர்களின் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு பெறுவதற்கான, பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**இலவச கல்வித் திட்டம்**

4.22 பல்கலைக்கழகத்தால் இலவச கல்வித்திட்டமானது பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் தனித்திறன் உள்ள மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு அதிகமாக 5 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்து பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு இலவச கல்வி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் நடப்பாண்டில் பல்கலைக்கழக துறைகளின் மூலம் 23 மாணவர்களும் அதன் கீழ் செயல்படும் கல்லூரிகளின் மூலம் 250 மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

## பாரதிதாசன் பல்கலைக்கழகம்

**4.23** பாரதிதாசன் பல்கலைக்கழகம், **1982–**ஆம் ஆண்டு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயரால் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் இலச்சினையும் அதில் பொறிக்கப்பட்டுள்ள புதியதோர் உலகம் செய்வோம் எனும் முத்திரை வரிகளும் வீறார்ந்த வளர்ச்சியைக் கூறுவனவாக உள்ளன. தற்போது பாரதிதாசன் பல்கலைக்கழகம் தனது முப்பதாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்து நம்பிக்கையுடன் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இப்பல்கலைக்கழகத்தின் கீழ் **131** கல்லூரிகள் இணைவு பெற்றுள்ளன. அவற்றுள் **17** அரசுக் கல்லூரிகள், **20** அரசு உதவி பெறும் கல்லூரிகள், **71** சுயநிதிக் கல்லூரிகள், **8** பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் மற்றும் **15** அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் செயல்படுகின்றன.

**4.24** கல்வி, ஆராய்ச்சி மற்றும் அதன் விரிவாக்கம் ஆகியவற்றில் பெரும் இலக்குகளை எட்டுவதற்கு பாரதிதாசன் பல்கலைக்கழகம் அனைத்து

முயற்சிகளையும் எடுத்து வருகிறது. செயலாற்றல் மிக்க பல்வேறு துறைகளையும், ஆற்றல் மிகு கல்லூரிகளையும், ஆய்வு நிறுவனங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள இப்பல்கலைக் கழகம் அரிய கல்வி வாய்ப்புகளை வழங்குவதில் முன்னோடி உயர்கல்வி நிறுவனமாக திகழ்கிறது. இப்பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் புதுமை மிகு பயில் திட்டங்கள் வாயிலாக ஊரக மக்களுக்கு உயர்கல்வியை வழங்கும் நோக்கம் நிறைவேறியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## சாதனைகள்

### 4.25 ஆய்வு

சில குறிப்பிட்ட துறைகளில் சிறப்புத் தகுதியைப் பெறுவதற்கான ஆய்வுக் களங்களில் பல்கலைக் கழகத்தின் சில ஆய்வுத் துறைகள் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. **398** ஆய்வுக் கட்டுரைகள் இந்திய இதழ்களிலும் **871** ஆய்வுக் கட்டுரைகள் பன்னாட்டு இதழ்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. இது தவிர, வருடத்திற்கு இருமுறை வெளிவரக் கூடிய பாரதிதாசன் பல்கலைக்கழக ஆராய்ச்சி இதழ் மற்றும் ஆங்கிலத்தில்

வெளிவரும் IEEE- SPECTRUM இதழ்க் கட்டுரைகளைத் தமிழில் மொழிபெயர்த்துப் பல்கலைக்கழக பதிப்புத்துறை வாயிலாக வெளியிடப்பட்டு வருகிறது. மேலும் பல்கலைக்கழக மற்றும் இணைவு பெற்று கல்லூரிகளில் செயல்பாடுகளைத் தாங்கி பல்கலைக்கழக காலாண்டு செய்தி இதழையும் பதிப்புத்துறை வெளியிட்டு வருகிறது.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜுலை 2011–ல் காணொலிக் காட்சி மூலம் ஸ்ரீரங்கம் மற்றும் நன்னிலத்தில் உறுப்புக் கல்லூரிகளையும், வேதாரண்யம் மற்றும் திருத்துறைப்பூண்டியில் மாதிரிக் கல்லூரிகளையும் தொடங்சி வைத்தார்கள்.

- மின்னனு தகவல் தொடர்பு முறையிலான கற்றல்– கற்பித்தல் வசதிகளை மேம்படுத்தவும், இதன் வழியாகப் பெறும் தகவல்களை ஆசிரியர்களும், ஆய்வாளர்களும், மாணவர்களும் மின் ஆதாரங்கள் மூலமாக மின்னணு கற்பித்தலை வளர்த்துக் கொள்ளவும், தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளும்படியாகவும் அறிவை விரிவு செய்யும் பணியில் இப்பல்கலைக்கழகத்தின் தகவலியல் மையத்தில், நிறுவப்பட்டுள்ள அறிவுக் கருவூல மையம் சிறப்பாக ஈடுபட்டு வருகிறது.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உள்ளார்ந்த ஆர்வத்தின் வெளிப்பாட்டின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகள் மற்றவர்களைப் போல இயல்புடன் வாழக்கூடிய நிலையைப் பெறுவதற்கான

வழிவகைகளை உருவாக்கக் கூடிய மாற்றுத் திறனாளிகளுக்கான மையம் ஒன்று 2011–12–ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகத்தில் தொடங்கப் பட்டுள்ளது. மேலும் அவர்களது திறமைகளைக் கண்டறிந்து, அதற்கேற்ப இம்மையத்தின் மூலம் பயிற்சி அளித்து அவர்களது எண்ணங்கள் நிறைவேற இப்பல்கலைக்கழகம் பெரிதும் முயற்சி எடுத்துள்ளது. இம்மையத்திற்கு நிரந்தர அடிப்படையில் உதவிப் பேராசிரியர் ஒருவர் நியமிக்கபட்டுள்ளார். ஜூலை 15 2011–ல் ஒரு பேசும் மின்நூலகம் மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டது.

- பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில், தேசிய தொழில்நுட்பம் சார்கற்றல் நிகழ்ச்சி (NTEL) ஊடக மற்றும் இணையதள காட்சிப்புலவழிக் கல்வியின் மூலம் தரமாக பயில்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், சட்டமன்ற பெண் உறுப்பினர்களுக்கான உடற்பயிற்சிக் கூடம் சென்னையில் நிறுவப்பட்டதன் வழிகாட்டுதலின் அடிப்படையில் இப்பல்கலைக் கழகத்தில் பெண்களுக்கான சிறு உடற்பயிற்சிக் கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

- எழுத்தறிவற்ற, படிப்பை பாதியில் கைவிட்ட மற்றும் வேலையில்லா இளைஞர்கள் தங்கள் தனித் திறன்களை மேம்படுத்த சமுதாயக் கல்லூரித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ரூ. **99.50** இலட்சம் மதிப்பில் பல்கலைக் கழக நிதி நல்கைக் குழு கல்வி பணியாளர் கல்லூரிக்கான ஆசிரியர் விருந்தினர் இல்லம் **27.3.2012–ல்** காணொலிக் காட்சி மூலம் தொடங்கி வைக்கப்பட்டது.

**4.26** கிராமப்புற மற்றும் ஏழை, எளிய மக்களின் கல்வித் தேவைகளைக் கவனத்தில் கொண்டு பின்வரும் நான்கு பல்கலைக்கழக இருபாலர் உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் மாதிரிக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன:

பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, ஸ்ரீரங்கம்
பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, நன்னிலம்
பல்கலைக்கழக மாதிரிக் கல்லூரி, திருத்துறைப் பூண்டி
பல்கலைக்கழக மாதிரிக் கல்லூரி, வேதாரண்யம்

**4.27** ஸ்ரீரங்கம் பல்கலைக் கழக உறுப்புக்கல்லூரியில் புதிய நூலகம் திறக்கப்பட்டு, இந்நூலகத்தை பல்கலைக் கழக நூலகத்துடன் இணைக்கும் வகையில் N-LIST வசதியின் மூலம் மின்நூல்களை படித்துப் பயன் பெற வழி செய்யப்பட்டுள்ளது.

4.28 பல்கலைக் கழக வளாகத்தில் ரூ. 124.25 இலட்சம் மதிப்பில் உடற்பயிற்சிக் கூடம் மற்றும் விரிவுரைக் கூடம் கட்டப்பட்டு வருகிறது. ரூ. 1.3 கோடி மதிப்பில் அமைக்கப்படவுள்ள கருத்தரங்கக் கூடம் மற்றும் மாணவர் வசதி மையத்தின் அடித்தளம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# அழகப்பா பல்கலைக்கழகம்

4.29 அழகப்பா பல்கலைக்கழகம் 1985–ல் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் 2005–ல் தேசிய தர நிர்ணயக் குழுவின் 'ஏ' தகுதி பெற்ற பல்கலைக் கழகமாகும். சிறந்த தலைமையையும், சார்புடைய புதிய பாடத்திட்டங்களும், அர்ப்பணிப்புடைய பேராசிரியர்களையும், பொறுப்பான நிர்வாக அமைப்பையும், ஒழுக்கமுடைய மாணவர்களையும் கொண்டுள்ள இப்பல்கலைக்கழகம் **செயலிற் செம்மை** என்ற குறிக்கோளினைச் செம்மையுற செயல்படுத்தி வருகிறது.

4.30 இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 29 கல்லூரிகள் உள்ளன. இவற்றுடன் 8 அரசுக் கல்லூரிகள், 5 அரசு உதவி பெறும் கல்லூரிகள், 11 சுயநிதிக் கல்லூரிகள், 5 மாலை நேரக் கல்லூரிகள் அடங்கும்.

### நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள்

4.31 உயர்கல்வியில் தரத்தினைக் கண்ணும் கருத்துமாகக் கடைபிடிப்பதில் அழகப்பா பல்கலைக்கழகம் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

பாடத்திட்டங்கள் அனைத்தும் நவீனப்படுத்தப் பட்டுள்ளன. மாணவர்களைத் தேர்வு செய்வதிலும் பல்கலைக்கழகத்தில் படிக்க அனுமதி வழங்குவதிலும் தரத்தைப் பேண வேண்டும் என்பதற்காக நுழைவுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. மாணவர்களின் திறமைகளை ஊக்குவிப்பதற்கெனச் செயல்முறைக் கல்வித் திட்டங்கள் பாடத்திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

4.32 கல்வியின் அனைத்து தளங்களிலும் குறிப்பாக, கல்வி முறை, விரிவாக்கம், நிர்வாகம், ஆய்வு மற்றும் கற்றல் ஆகியவற்றில் சிறப்பு தகுதியை எய்துவது.

கல்வி வளர்ச்சி, சமுதாய விழிப்புணர்வு, தொழில் நுட்ப உயர்வு, சுற்றுச் சூழல் மற்றும் பொருளாதார மேம்பாடு ஆகிய ஐந்து அம்சங்களைக் கவனத்தில் கொண்டு அழகப்பா பல்கலைக்கழகம் மிகச் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது.

**தொலைநிலைக் கல்வி படிப்புகள்**

**4.33** தொலைநிலைக் கல்வி வாயிலாகக் கல்வி வாய்ப்புகள் மாணவர்களின் வாயில்களை சென்றடையும் வண்ணம் வெளிநாடுகள் உள்பட இந்தியா முழுவதும் அளிக்கப்படுகின்றன. 8 வெளி நாடுகள் உட்பட தொலைநிலைக் கல்வி வாயிலாக 208 படிப்பு மையங்கள் செயல்படுகின்றன. தொலைநிலைக்கல்வி வாயிலாகத் தரப்படும் அனைத்துப் படிப்புகளுக்கும் தொலை நிலைக்கல்விக் குழுமம், புதுடில்லியின் (இந்திரா காந்தி திறந்தநிலைப் பல்கலைக்கழம்) அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைப்பு வழி வகையில் தரப்படும் படிப்புகள்**

**4.34** மாணவர்களின் தேவைக்கேற்ப திறமை அடிப்படையிலான சான்றிதழ், பட்டயம், இளங்கலை, முதுகலைப் பட்டயம், மற்றும் முதுகலைப் படிப்புகள் உணவக நிர்வாகம், ஆடை வடிவமைப்பு, நுண்கலை, உயிரித் தொழில்நுட்பம், கடலோர மற்றும் வான அறிவியல் போன்ற முக்கியத் துறைகளில் தரப்படுகின்றன.

**மாணவர் சேர்க்கை**

**4.35** அழகப்பா பல்கலைக்கழகத் துறைகளில் **2400** மாணவர்களும், இணைப்புக் கல்லூரிகளில் **27000** மாணவர்களும், ஒருங்கிணைப்பு வழி வகைகளில் **2300** மாணவர்களும் தொலைநிலைக் கல்வி மூலம் **1,28,000** மாணவர்களும் சேர்த்து கிட்டத்தட்ட **1,60,000** மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். மொத்த மாணவர்கள் எண்ணிக்கையில் **65** சதவிகிதம் பெண்களாக இருப்பது சமுதாய வளர்ச்சியைக் குறிப்பதாக இருக்கிறது.

**பல்கலைக்கழக – மாநகராட்சி வங்கி இணைந்து நடத்தும் பொது நூலகம்**

**4.36** பல்கலைக்கழகம் மற்றும் கார்ப்பரேஷன் வங்கி இணைந்து லெ.சி.லெ.பழனியப்பச் செட்டியார் நினைவு கலையரங்கில் பல்கலைக்ழக பொது நூலகம் ஏற்படுத்தி சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

## சாதனைகள்

### 4.37 ஆய்வுகள்

- SCOPUS ஆவண கணக்கீட்டின்படி அழகப்பா பல்கலைக்கழகம், பன்னாட்டு பல்கலைக் கழகங்களுடன் இணைந்து ஆய்வு வெளியீடுகள் வெளியிடுவதில் 3 –ஆம் தர வரிசையையும், சராசரி மேற்குறியீட்டு அட்டவணை ( Average citation index) ஆய்வு தரத்தில் இந்த பல்கலைக்கழகம் 7 வது இடத்தையும் பெற்றுள்ளது.

- இந்த ஆய்வுத் திறனுக்காக இந்திய அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை (DST) ரூ.6 கோடி நிதி நல்கையை அனுமதித்துள்ளது. இந்த நிதிநல்கை மூன்று தவணைகளில் வழங்கப்படும்.

- இப்பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்களின் ஆய்வுப் பணிக்காக 19 ஆய்வுகள் மேற்கொள்ள UGC/ DST/ CSIR மூலமாக ரூ.1.72 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

### மாநாடு

4.38 அமெரிக்கா, கொரியா, ஸ்விட்சர்லாந்து, ஆஸ்திரேலியா, ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகய நாடுகளில் நடைபெற்ற பன்னாட்டு மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

38 தேசிய மாநாடுகள்/ கருத்தரங்குகள்/ பட்டறைகள்/ நிகழ்வுகள்/ சொற்பொழிவுகள் ஆகியவை பல துறைகளிலும் இக்கல்வியாண்டின் போது நடத்தப்பட்டன.

**மானியங்கள்**

4.39 இந்த ஆண்டில் தமிழ் நாடு அரசு மொத்த மானியம் ரூ. 346.60 இலட்சமும், ஈடுசெய் மானியம் ரூ.94.99 இலட்சமும் சிறப்புக் காரணங்களுக்காக ரூ. 50 இலட்சமும் அனுமதித்துள்ளது.

**உள் கட்டமைப்பு வளர்ச்சி**

4.40 கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்தின் அடிப்படையில் உள்கட்டமைப்பு வசதிகள் ரூ. 5 கோடி செலவில் செய்யப்பட்டுள்ளன. அதில் தொலைதூரக் கல்வி இயக்ககம், ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகள், ஆசிரியர் விருந்தினர் மாளிகை, பர்வையாளர்கள் விடுதி ஆகியவை அடங்கும். இவைகள் 27.03.2012 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொலி மாநாட்டின் மூலம் திறந்து வைக்கப்பட்டன.அதே போல் ரூ. 3 கோடி செலவில் கட்டப்பட உள்ள புதிய தங்கும்

விடுதிகள், பெண்கள் விடுதி விரிவாக்கம், உடல்நல மையம் ஆகியவற்றுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

**மாணவர்களுக்கான வசதி செயல்பாடுகள்**

- பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி தொடரும் 595 SC/ST மாணவர்களுக்கு ரூ. 63.53 இலட்சம் படிப்பு உதவித்தொகை இந்த கல்வியாண்டில் இப்பல்கலைக்கழகம் வழங்கியுள்ளது.

- பல்கலைக்கழகத்தில் மற்றும் தொலைத்தூர கல்வி இயக்ககம் வாயிலாக பயிலும் 828 பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய, சீர்மரபினர் மாணவர்கள் உயர் கல்வி தொடர 2011–12 ஆண்டில் ரூ.13.40 இலட்சம் படிப்புதவி வழங்கியுள்ளது.

- மேலாண்மை மற்றும் அறிவியல் துறைகளில் 10 புதிய கல்வித்திட்டங்கள் இந்த ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

- இணையதளம் மற்றும் செய்தி தகவல் தொழில்நுட்பத் துறையில் போதிய அறிவு பெற இப்பல்கலைக்கழக பணியாளர்களுக்கு கணினி சம்பந்தபட்ட வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு துறைக்கும் தனி மின் அஞ்சல் முகவரி உருவாக்கப்பட்டுள்ளன. நிதிப்பிரிவின் அனைத்து செயல்பாடுகளும் ( துறை மற்றும் நிர்வாகச் செலவுகள், சம்பள கணக்கு, முதலீட்டு கணக்கு, நிதி நிலை அறிக்கை) கணினி மூலமாக செய்யப்படுகின்றன. பல்கலைக்கழகத்திற்கு தனி வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. அவ்வப்போது அது உரிய தகவல்களுடன் மேம்படுத்தப்படுகிறது.

- சமுதாய மேம்பாட்டிற்காக குறிப்பாக மகளிர் முன்னேற்றத்திற்காக இப்பல்கலைக்கழகம் இணைப்புக் கல்லூரிகள், NABARD, THADCO, மகளிர் திட்டம், தமிழ் நாடு எயிட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனம் மற்றும் மாவட்ட நீதி மன்றம் ஆகிய பல நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது.

- 30 சூரிய சக்தி விளக்குகள் பல்கலைக் கழக துறைகளில் பொருத்தப்பட்டுள்ளன. இதனால் நிர்வாக பிரிவுகள், ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகளில் மின்சார தேவை குறைகிறது மேலும் மற்ற நோக்கங்களுக்காக சூரிய சக்தியில் இருந்து மின்சாரம் தயாரிக்க இப்பல்கலைக் கழகம் திட்டமிட்டுள்ளது.

- வகுப்பறைகள் நல்ல வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நவீன வகுப்பறையும் கணினி, கேமிரா, LCD மற்றும் காணொலி கருவிகள் குளிர் சாதன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மாணவர்கள் சுலபமாகவும் விரைவாகவும் கல்வி கற்க இவைகள் உதவும்.

- பல்கலைக்கழகத்தில் எல்லா பாடப்பிரிவு மாணவர்களுக்கும் பொதுவான கணினி மையம் அமைந்துள்ளது. அனைத்து துறைகளும், நிர்வாக பிரிவுகளும், ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகள் மற்றும் நூலகமும் இணைய தள வசதியினைப் பெறுகின்ற வகையில் வலைய ஒருங்கிணைப்பு (Net - Cafe) செய்யப்பட்டுள்ளது.

**அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்**

4.41 அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் தமிழக அரசு சட்டம் 15ன்படி 1984–ல் கொடைக்கானலில் நிறுவப்பட்டது. இதன் குறிக்கோள் "சமநிலையை நோக்கி" என்பதாகும். அதாவது, எதிர்காலப் பாலினச் சமன்மைச் சமூகத்தை ஆடவர்க்கு நிகராக அனைத்துத் தளங்களிலும் உருவாக்குவதாகும். பயிற்றுவித்தல், ஆய்வு மற்றும் விரிவாக்கம் என்னும் முச்சாய்வக இலக்குடன் இப்பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது.

4.42 இப்பல்கலைக்கழகத்தில் 18 துறைகளும், 2 உறுப்புக் கல்லூரிகளும், 8 இணைப்புக் கல்லூரிகளும் உள்ளன. பி.எச்.டி. எம்.பில். முதுநிலை, இளநிலை இளங்கலை கல்வியியல், முதுகலைக் கல்வியியல் என்று பல்வேறு நிலைகளில் பாடப்பிரிவுகளை நல்கி வருகிறது. தொலைநிலைக் கல்வி வழி 16 பாட வகுப்புகளை நடத்துவதற்கு புதுதில்லி தொலைநிலைக் கல்விக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**4.43** ‘‘நுண்ம அறிவியல் ஆய்வு’’, ‘‘குறுதுளித் தொழில்நுட்பம்’’, ‘‘உயிரி அறிவியல் நெறி’’, ‘‘சமூக, சமய நல்லிணக்கம்’’, ‘‘கல்வித்தளத்தில் கருத்தியல் பெயர்வுகள் –இக்காலச் சூழல்” மற்றும் ‘‘இந்திய தேசிய இயக்கத்தின் பேசப்படாத பெண்தலைவர்களைக் ஆய்ந்தறிதல்’’ ஆகிய பல்வேறு பொருண்மைகளில் சர்வதேச மற்றும் தேசியக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

**4.44** சர்வதேச சகமதிப்பீடு இதழ்களில் கட்டுரைகள் வெளியிடும் பெண் அறிவியலாளர்களுக்கு ஆண்டுதோறும் இப்பல்கலைக்கழகத்தின் மகளிர் இயற்பியல் சங்கம் விருதுகள் வழங்குகிறது.

**அடிப்படை கட்டமைப்பு**

**4.45** பல்கலைக்கழக வளாகத்திற்குள் வை–பை (Wi-Fi) 1 GB இணைப்பு மூலம் இணைய வசதிகள் நவம்பர் 2011ல் ஏற்படுத்தப்பட்டது.

மின்ஆதார நூலகம் நவம்பர் 2011 முதல் செயல்பட துவங்கியது. இதில் 12600 இதழ்கள் கிடைக்கப் பெறுகின்றன.

**நிதி**

**4.46** பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவால் கூடுதல் உதவித் திட்டத்தின் மூலமாக ரூ. 1.80 கோடி நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. வளர்ச்சி நிதியாக ரூ. 20,00,000/– புதுதில்லியுள்ள தொலைநிலைக் கல்விக் குழுவிடமிருந்து (இந்திராகாந்தி தொலைதூர பல்கலைக்கழகம்) பெறப்பட்டுள்ளது.

**4.47** “உயிர் மூலக்கூறு மீதான நானோ துகள்களின் விளைவுகள்” எனும் தலைப்பில் ஆய்வு செய்யும் திட்டத்திற்காக ரூ. 32,68,292/– அறிவியல் மற்றும் பொறியியல் ஆய்வுக்குழுவால் நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது.

**2012 – 13ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் செயல்பாடுகள் / திட்டங்கள்**

- ❖ அறிவு சொத்துரிமை மையம் அமைத்தல்
- ❖ பல்கலைக்கழக வளாகம் முழுமைக்கும் வை–பை (Wi-Fi) இணைப்பை விரிவு செய்தல்
- ❖ கொடைக்கானல் மருத்துவ குணமிகு மூலிகைகளில் தகவல் தொகுதித் தளம் தயாரித்தல்

## மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

4.48 1990–ஆம் ஆண்டுச் சட்டம் 31–இன்படி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டு, முறையாகச் செப்டம்பர் 7, 1990 அன்று தொடங்கப்பட்டது. தத்துவியல் பேராசிரியரும், '*மனோன்மணியம்*' நாடகம் படைத்த புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளருமான பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளையின் ((1855–1897) திருப்பெயரே இப்பல்கலைக்கழகத்திற்குச் சூட்டப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகம், திருநெல்வேலியில் உள்ள 'அபிசேகப்பட்டியில்' அமைந்துள்ளது. இப்பல்கலைக் கழகத்தின் இரண்டு பட்ட மேற்படிப்பு மையங்களில் ஒன்று ஆழ்வார்குறிச்சியிலும், மற்றொன்று ராஜாக்கமங்கலத்திலும் உள்ளன. திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மூன்று தென்மாவட்டங்களின் நெடுநாளைய கல்வித் தேவைகளை இப்பல்கலைக்கழகம் நிறைவு செய்கிறது.

**நோக்கம்**

- கிராமப்புறப் பின்தங்கிய மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்குதல்
- புதிய முறையில் கற்பித்தல், ஆராய்தல் மற்றும் விரிவான செயல்பாடுகள்வழிக் கல்வியைப் பரப்புதல்
- சமூக ஒற்றுமைக்கு உதவும் மனித பண்புகளை வளர்த்தல்.

## பல்கலைக்கழகத் துறைகள் மற்றும் கல்லூரிகள்

4.49 இப்பல்கலைக்கழகத்தில் 25 கல்வியியல் துறைகள் உள்ளன. மேலும் 2 அரசு கல்லூரிகள், 32 அரசு உதவி பெறும் கல்லூரிகள், 27 சுயநிதிக் கல்லூரிகள், 2 உறுப்புக் கல்லூரிகள், 6 மனோ கல்லூரிகள், 22 சமுதாயக் கல்லூரிகள் மற்றும் 84 விரிவாக்கக் கல்வித்திட்ட மையங்களும் உள்ளன. பட்டமேற்படிப்பு மற்றும் ஆய்வுத்திட்டப் பிரிவுகளோடு பட்டயப் படிப்புகளும், சான்றிதழ்ப் படிப்புகளும் வழங்கப்படுகின்றன.

4.50 2011–2012–ஆம் கல்வியாண்டில், பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளில் 73,112 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர்.

**பல்கலைக்கழக மாணவர் உதவித்தொகை**

4.51 ஆய்வு மாணவர்களை ஊக்கப்படுத்தப் **'பல்கலைக்கழக மாணவர் உதவித்தொகை'** திட்டத்தின்கீழ் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ்த் தேர்ந்தெடுக்கப்படும் ஆய்வாளர்களுக்கு, மாதந்தோறும் ரூ. 2000/– உதவித் தொகையாகவும், ரூ.4000/– சில்லறைச் செலவினமாகவும் வழங்கப்படும்.

**மனோ கல்லூரிகள்**

4.52 முன்னோடிக் கல்வி முயற்சியாக **மனோ கல்லூரிகள்** உள்ளன. பல்கலைக்கழகப் பகுதிக்குட்பட்ட கிராமப்புறங்களில் அமைந்துள்ள இக்கல்லூரிகள், ஏழை மாணவர்கள் மற்றும் மாணவிகள், குறைந்த செலவில் கல்வி கற்பதற்கான வாய்ப்பை வழங்குகின்றன. தற்போது நாகம்பட்டி, சங்கரன்கோவில், புளியங்குடி, கோவிந்தபேரி, திசையன்விளை மற்றும் பனங்குடி ஆகிய ஆறு இடங்களில் **மனோ கல்லூரி மையங்கள்** உள்ளன.

தூத்துக்குடி மாவட்டத்தில் சாத்தான்குளத்தில் ஒன்றும், நாகலாபுரத்தில் மற்றொன்றுமாக இரண்டு உறுப்புக் கல்லூரிகள் செயல்படுகின்றன.

**சமுதாயக் கல்லூரிகள்**

**4.53** பத்தாம் வகுப்பை நிறைவு செய்த கிராமப்புற இளைஞர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தவும், ஏழைகள் மற்றும் கடைக்கோடி மக்கள் தரமான கல்வியைக் குறைந்த செலவில் பெறுவதற்கும், 1999–ஆம் ஆண்டு இப்பல்கலைக்கழகம், இப்பகுதியில் சமுதாயக் கல்லூரிகளைத் தொடங்கின. இத்திட்டத்தின் கீழ் 22 சமுதாயக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டு 15 வேலைவாய்ப்புப் பாடத்திட்டங்கள், தொழில் மற்றும் திறன்சார் படிப்புகள் வழங்கப்படுகின்றன. இவற்றுடன், பட்டயச்சான்றிதழ்களும் அளிக்கப்படுகின்றன.

**சாதனைகள்**
**அறிவியல்**

**புவித் தொழில்நுட்ப மையம்**

**4.54** 2011–12–ஆம் ஆண்டுக்கான இந்தோ–ஹங்கேரியன் கல்விசார் பரிமாற்றப் படிப்புதவித் திட்டம் கையொப்பமிடப்பட்டுள்ளது.

**குற்றவியலும் குற்றவியல் நீதியும்**

**4.55** வருகைதரு அறிஞர் **2011–12**ஆம் ஆண்டுக்கான இந்தோ–ஹங்கேரியன் கல்வியியல் பரிமாற்றத் திட்டம் (Budapest and Hungary) குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதித்துறையைச் சார்ந்த மூத்த துணைப்பேராசிரியர் முனைவர் ஜெய்சங்கர் அவர்கள், இசுரேலில் உள்ள பார் இலான் பல்கலைக்கழகத்தின் குற்றவியல் ஆய்வு மற்றும் நேர்நிலைக் குற்றவியல் வளர்ச்சிமையத்தின் பன்னாட்டு ஆலோசனைக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜெர்மனியில் உள்ள வஞ்சிக்கப்பட்டோருக்கான **உலகச் சமூக மையத்தின்** (WSV) உறுப்பினர் மேம்பாட்டுக்குழு உறுப்பினராகவும், அமெரிக்காவில் உள்ள **ஜான் ஜே** குற்றவியல் நீதிக்கல்லூரியின் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் உள்ளார்.

**கலை**

**ஆங்கிலம்**

- இங்கிலாந்தில் ஆறு மாதங்கள் தங்கி முதுமுனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ள, இணைப்பேராசிரியர் முனைவர் பி.கல்யாணி அவர்களுக்கு, அமைப்புசாரா படிப்புதவி நிதி அளிக்கப்பட்டது.

## பரிமாற்றத்திட்டங்கள்

- வார்சா பல்கலைக்கழகத்துடன் மாணவர் – ஆசிரியர் பரிமாற்றத் திட்டம்.

- தமிழ்ப் பேராசிரியர் முனைவர் A.ராமசாமி அவர்கள், தற்போது வார்சா பல்கலைக்கழகத்தில் வருகைதரு பேராசிரியராகப் பணிபுரிகிறார்.

- ஒருவாரப் பயணமாகப் போலந்தைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்தனர்.

- ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களுடனான **ஈராஸ்முஸ் முண்டஸ்** பரிமாற்றத் திட்டம் இப்பல்கலைக்கழகத்தில் தற்போது நடைமுறையில் உள்ளது.

## பெரியார் பல்கலைக்கழகம்

**4.56** பெரியார் பல்கலைக்கழகம் சேலம் மாவட்டத்தில் **1997–**ஆம் ஆண்டு மிகச்சிறந்த சீர்திருத்தவாதியான E.V. இராமசாமி அவர்களின் நினைவாக நிறுவப்பட்டது. நாட்டின் தொழில்நுட்ப, அறிவியல் சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்த உயரிய நோக்கில் தொடங்கப்பட்ட இப்பல்கலைக்கழகம் இளைஞர்களின் கருத்துக்களையும், திறன்களையும் ஊக்குவிக்கவும், மதச் சார்பற்ற நிலையில் செயல்படவும், தம் பங்களிப்பினைத் திறம்பட நிறைவேற்றி வருகிறது. இப்பல்கலைக் கழகம் கற்பித்தல் மற்றும் கல்லூரிகளுக்கு இணைப்பு அளித்தல் போன்ற பணிகளை நிறுவப்பட்ட நாள்முதல் திறம்பட செயல்படுத்தி வருகிறது. இப்பல்கலைக்கழகத்தின் கீழ் **89** கல்லூரிகள் உள்ளன. இவற்றுள் **10** அரசுக் கல்லூரிகள், **4** அரசு உதவி பெறும் கல்லூரிகள், **57** சுயநிதிக் கல்லூரிகள், **4** பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் மற்றும் **14** சமுதாயக் கல்லூரிகள் அடங்கும்.

4.57 தற்போது பெரியார் பல்கலைக்கழகத்தில் 104 பாடப் பிரிவுக்களுக்கான வகுப்புகள் இணைவுப் பெற்றுள்ள கல்லூரிகளில் அளிக்கப்படுவதோடு, தமிழ், வணிகவியல், கணிதம், இயற்பியல், வேதியியல், கணினி, உயிர் வேதியியல், பொருளியியல், கல்வியியல், உணவு அறிவியல், மேலாண்மையியல், புவி அமைப்பியல், ஆங்கிலம், நுண்ணுரியல், உயிர் தொழில்நுட்பவியல், சமூகவியல், செய்தி மற்றும் தகவல் அறிவியல், மக்கள் தொடர்பியல், உளவியல், நூலகம் மற்றும் தகவல் அறிவியல், தாவரவியல் மற்றும் சுற்றுப்புறச் சூழலியல் என 21 துறைகள் ஆரம்பிக்கப்பட்டு, துறைச்சார்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 4.58 மேம்பாட்டு ஆராய்ச்சி நிலையங்கள்

பெரியார் பல்கலைக்கழகம் பெண்ணியல் கல்வித் தொடர்பான ஆராய்ச்சி மையத்தையும், நானோ–அறிவியல், நானோ–தொழில்நுட்பவியல் மையத்தையும் தன்னுள் கொண்டுள்ளது. இந்த மையங்களில் அவை தொடர்பான மேம்பட்ட ஆய்வுகள் மேற் கொள்ளப்படுகின்றன.

## 4.59 திறன் மேம்பாட்டுத் திட்டம் (சமுதாயக் கல்லூரி)

திறன் மேம்பாட்டு திட்டம் 2002–03 ஆம் கல்வியாண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஊரகப் பகுதியில் உள்ள ஏழை மாணவர்களின் முன்னேற்றத்திற்காகவும், கல்லூரியில் படிக்க முடியாதவர்களுக்காகவும் இத்தகைய பட்டயப் படிப்பு பல்வேறு பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## 4.60 தொலைத்தூரக் கல்வி நிறுவனம்

பெரியார் தொலைநிலைக் கல்வி நிறுவனம் 2001–02 ஆம் கல்வியாண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. தற்போதுள்ள 391 படிப்பு மையங்களில் ஐந்து படிப்பு மையங்கள் வெளிநாட்டில் நிறுவப்பட்டுள்ளன. 100 பாடப்பிரிவுகள் (இளங்கலை, முதுகலை மற்றும் முதுகலைப் பட்டயப்படிப்பு உட்பட) 2011–12 ஆம் கல்வியாண்டில் துவங்கப்பட்டன. பெரியார் பல்கலைக்கழகம் தொலைதூர கல்வி திட்டத்தின்கீழ், இரட்டை பட்டம் திட்ட முறையை (Dual Degree Programme) அறிமுகப்படுத்தியுள்ளது.

## வெளி வளாகத் திட்டங்கள் (Off-Campus Programme)

4.61 பெரியார் பல்கலைக் கழகம் மாணவர்களின் நலனுக்காக வேலைச் சார்ந்த துறைகளில் உயர் கல்வியினைப் பெற வெளி வளாகக் கல்வி முறையினை 2005–2006 ஆம் கல்வியாண்டு புதிய கல்வித் திட்டமாக அறிமுகப்படுத்தியுள்ளது.

4.62 இரண்டு புதிய இருபாலர் பல்கலைக் கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் அரூரில் (தர்மபுரி மாவட்டம்) 2011–2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளன.

## சாதனைகள்

### மாநாடுகள் / கருத்தரங்குகள் / பட்டறைகள்

4.63 பெரியார் பல்கலைக் கழகம் 48 தேசிய கலந்தாய்வுகள் / கருத்தரங்குகள் / பட்டறைகள் மற்றும் 5 பன்னாட்டு கருத்தரங்குகளையும் நடத்தியுள்ளது.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**

**4.64** புவி தகவலியல் மற்றும் விண்கோள் கல்வியியல் துறை பெங்களூரில் உள்ள இந்திய ஆராய்ச்சி நிறுவனத்துடன் சந்திராயன் திட்டம் – II புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது.

இயற்பியல் துறையும், இத்தாலியிலுள்ள மேம்பட்ட ஆராய்ச்சி மையமும், உடல்நலம் மற்றும் விண்வெளி ஆராய்ச்சிக்காக இணைந்துள்ளன.

வேதியியல் துறையும், உணவு அறிவியல் துறையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் தென்கொரியா சோன்பர்க் பல்கலைக் கழகத்திலுள்ள உயிர் தொழில்நுட்பவியல் துறையுடனும், தாய்லாந்து கோக்கன் பல்கலைக் கழகத்திலுள்ள துறையுடனும் கையெழுத்திட்டுள்ளன.

## திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

**4.65** திருவள்ளுவர் பல்கலைக் கழகம் சட்டம், **2002**–இன்படி (தமிழ்நாடு சட்டம் **32/2002**) தமிழக அரசால் **16.10.2002**–ல், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் ஆளுமைக்குட் பட்டு **10** அரசு கலைக் கல்லூரிகள், **9** அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகள், **4** உறுப்புக் கல்லூரிகள், **74** சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், **3** கீழ்த்திசைப் பண்பாட்டுக் கல்லூரிகள் உள்ளடக்கிய **100** கல்லூரிகள் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் வேலூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.

**இலக்குகள்**

**4.66** உயர்கல்வி மூலம் கீழ்க்கண்ட இலக்குகளை அடைய இப்பல்கலைக் கழகம் தீவிரமாக முணைந்து வருகிறது. இவற்றின் வாயிலாக இளைஞர்களின் அறிவுத் திறன் வெளிக்கொணரப்படும்:-

- ★ சமூக விழிப்புணர்வைத் தூண்டுதல்.
- ★ சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

- ★ தன்னைப் போல் பிறரும் வளர்ச்சியடையத் தூண்டுதல்.
- ★ கற்பித்தல் மற்றும் தொடர் ஆராய்ச்சி மூலம் உயர்கல்வி அளித்தல் மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு ஊக்குவித்தல்.

## செயல்பாடுகள்

- ★ விருப்பத் தெரிவு மதிப்பீட்டுமுறை இப்பல்கலைக் கழகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட துறைக்களுக்கான பாடத்திட்டங்கள் வகுப்பப்பட்டுள்ளன. இளங்கலையில் பி.ஏ. அடிப்படை ஆங்கிலம், பி.காம் (நிதி மற்றும் கணக்குகள்), பி.காம் (கணினி பயன்பாடுகள்), பி.எஸ்ஸி (மென்பொருள் பொருளியல்) பி.எஸ்ஸி (புள்ளியியல்) மற்றும் பி.எஸ்ஸி (உணவு பதப்படுத்துதல்).
- ★ விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் முதுநிலை விரிவாக்க மையம் ஏற்படுத்தப்பட்டு முதுகலை ஆங்கிலம், எம்.காம்., எம்.எஸ்ஸி கணிதம் மற்றும் பி.எஸ்ஸி வேதியியல் ஆகிய முதுகலை பாடப்பிரிவுகள் துவங்கப்பட்டுள்ளன.
- ★ திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள தென்னாங்கூர் மற்றும் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள திருவெண்ணெய்நல்லூர் ஆகிய இடங்களில் இரண்டு உறுப்புக் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன.
- ★ 2011–12 ஆம் கல்வியாண்டில், எம்.எஸ்ஸி வேதியியல், எம். எஸ்ஸி கணிதம், எம்.எஸ்ஸி நுண்தொழில்நுட்பம் (Bio-Technology), எம்.ஏ. தமிழ் மற்றும் எம்.ஏ. ஆங்கிலம் ஆகிய ஐந்து முதுகலை துறைகள் துவங்கப்பட்டுள்ளன.

★ அனைத்துத் துறைகளிலும் முனைவர் பட்டம் மற்றும் இளமுனைவர் பட்டம் மற்றும், முதுகலை ஆகிய பட்ட வகுப்புகள் நடைபெறுகின்றன. துறைப் பேராசிரியர்கள் மற்றும் ஆய்வு மாணவர்கள் பன்னாட்டு மற்றும் தேசிய அளவில் ஆய்வுக் கட்டுரைகளை அளித்துள்ளனர்.

★ **2011–12** ஆம் ஆண்டில் விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியிலும், வேலூர் மாவட்டம் திருப்பத்தூரிலும் இரண்டு பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன.

★ **2011–12** ஆம் கல்வியாண்டு முதல் ‘‘திருவள்ளுவர் தொலைதூரக் கல்வி நிறுவனம்’’ தொடங்கி செயல்பட்டு வருகிறது.

★ அகில இந்திய பல்கலைக்கழக அளவிலும், தென் மண்டல அளவிலும், திருவள்ளுவர் பல்கலைக் கழகம் மற்றும் இணைவு பெற்றக் கல்லூரிகளிலிருந்து மாணவ, மாணவிகள் பல்வேறு போட்டிகளிலும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர்.

## சாதனைகள்

### அடிப்படை வசதிகள்

**4.67** திருப்பத்தூரில் உறுப்புக் கல்லூரிக்கு **6.54.0** ஹெக்டேர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிடம் கட்டப்படவுள்ளது.

### புரிந்துணர்வு ஒப்பந்தம்

**4.68** தொலைதூர கல்வி மூலம் ஆழியாரிலுள்ள பகுத்தறிவிற்கான பார்வை (Vision for Wisdom) என்ற உலக சமூக உறவு தொண்டு மையத்தின் உதவியுடன் யோகா, இளங்கலை மற்றும் முதுகலை பாடப் பிரிவுகளுக்கான பட்டய வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

### ஆய்வுத் திட்டங்கள்

**4.69** புதுடில்லி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் நிதி ஒதுக்கீட்டில், மூன்று ஆராய்ச்சி திட்டங்களும், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையத்தின் நிதி உதவியுடன் மற்றொன்றும் செயல்பட்டு வருகிறது.

## 2012–13 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் மற்றும் திட்டங்கள்

★ கூடுதல் கலை மற்றும் அறிவியல் வளாகங்கள், மாணவ மற்றும் மாணவியர் விடுதிகள், துணைவேந்தர், பதிவாளர், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர், பேராசிரியர்கள், ஆசிரியரல்லாப் பணியாளர்கள் ஆகியோர்களுக்கான தங்கும் இடங்கள் மற்றும் மாணவர்களுக்கான விளையாட்டு மைதானம் போன்றவை கட்டப்படவுள்ளது.

★ டாக்டர். அம்பேத்கர் பற்றிய படிப்புகள் மற்றும் முதுகலை ஆராய்ச்சி மையத்தை தொடங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

★ பல்நோக்கு பயன்பாட்டு அரங்கம் கட்டப்படவுள்ளது.

## தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம்

4.70 தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சமூகப், பொருளாதார சூழல்களால் கல்வி பயிலும் வயதில் பள்ளிக் கல்வியைத் தொடர இயலாத ஏழை, எளிய, கிராமப்புற மக்களுக்கும் தொலைதூரப் பகுதிகளில் வாழும் பின் தங்கிய மக்களுக்கும் உயர்கல்வியை வழங்குவதை முதன்மை நோக்கமாக கொண்டு இப்பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது இது இந்திய அளவில் நிறுவப்பட்ட பத்தாவது திறந்தநிலைப் பல்கலைக் கழகமாகும். பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு (UGC), தொலைநிலைக் கல்வி மாமன்றம் (DEC), அனைத்திந்திய பல்கலைக்கழகக் கூட்டமைப்பு (AIU) ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்றது. “எல்லோருக்கும் கல்வி” என்னும் உயரிய நோக்கத்தோடு இப் பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது. பல்கலைக் கழகத்தின் பல்வேறு புலங்கள் வழி வழங்கப்படும் படிப்புகளுக்கு, நவீன தொழில் நுட்பங்களுடன் தானே

கற்றல் முறையில் பாடநூல்கள் உருவாக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

4.71 தற்போது, 101 செயல்முறை திட்டங்கள், 143 கல்வி மையங்கள், 184 சமுதாயக் கல்லூரிகள், 155 கணினிப் பயிற்சி மையங்கள், 21 பி.எட். படிப்பு மையங்கள், வெளி மாநிலங்களில் 29 கல்வி மையங்கள், 11 பல்கலைக்கழக ஒருங்கிணைப்பு மையங்களுடன் மொத்தம் 3.5 லட்சம் மாணவர்கள் என்று இப் பல்கலைக் கழகத்தின் கல்விப் பணிகள் விரிந்து பரந்த நிலையில் உள்ளது.

4.72 ஏழை எளிய மாணவர்களுக்கு தங்கள் வசிப்பிடங்களுக்கு அருகிலேயே உடனடி வேலைவாய்ப்பிற்கு உதவக் கூடிய தொழில் கல்வியை அளிக்கும் நோக்கில் 99 புதிய சமுதாயக் கல்லூரிகளைத் தொடங்கியுள்ளது. இப்பல்கலைக்கழகம் சிறைவாழ் மக்களுக்கும் சமுதாய கல்லூரிகள் மூலமாக கல்வி வாய்ப்பினை தருகிறது. 1020 விதவைப் பெண்கள் தொழில்திறன் பெற்று முன்னேற்றம் காணும் வகையில்

சமுதாயக் கல்லூரிகள் வாயிலாக இலவசமாக வேலை வாய்ப்புக் கல்விப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**சாதனைகள்**

**4.73** தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளுக்கெல்லாம் தொழிற்கல்வியை கொண்டு செல்லும் நோக்கில் நடப்பாண்டில் (2011–2012) 47 புதிய சமுதாயக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன.

**புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

**4.74** தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் மூலம் சிறப்புக் கல்வியியல் மற்றும் மறுசீரமைப்பு படிப்பு (Special B.Ed.,) வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான ஒப்பந்தம், புதுதில்லியில் உள்ள இந்திய மறுசீரமைப்புக் கழகத்திற்கும், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கும் இடையே கடந்த 4.10.2011 அன்று சென்னையில் கையெழுத்தானது.

4.75 சமுதாய சேவையில் முன்னணி வகித்துவரும் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு 32 மாவட்டங்களையும் இணைக்கின்ற வகையில் சமுதாயக் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், புதுதில்லி, தொலைநிலைக் கல்வி மாமன்றத்தின் (DEC) நிதி உதவியுடன் பல்வேறு பாடங்களுக்கான மின்னணுப் பாடக் குறுந் தகடுகளை தயாரித்து மாணவர்களுக்கு வழங்கிவருகிறது. இதுவரை 74 மின்னணுப் பாடக் குறுந் தகடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு, கூடுதலாக, முதுகலை தமிழ் படிப்பிற்கான 10 மின்னணுப் பாடக் குறுந் தகடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

- பல்கலைக்கழகத்தின் மின்னணு ஊடகத் தயாரிப்பு மற்றும் ஆய்வு மையத்தின் சார்பில் மின்னணு படப்பிடிப்பு அரங்கம் நிறுவுதற்கு பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. புதுதில்லி தொலைநிலைக் கல்வி மாமன்றத்தின் நிதியுதவி கிடைக்கப்பெற்றவுடன், மின்னணுப் படிப்பிடிப்பு அரங்கம் நிறுவும் பணிகள் தொடங்கப்படும்.

**2012 – 13 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள முக்கிய திட்டங்கள்:**

- எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய **18** சங்க இலக்கியங்களுக்கான மின்னணு ஒளிப்படக் குறுந் தகடுகள் வெளியிடுதல்.

- ரூ.**8.44** கோடி மதிப்பீட்டில் கல்விப் புல வளாகக் கட்டடம் கட்டுதல்.

❖ **கீழ்க்காணும் 8 புதிய பட்டயப் படிப்புகள் தொடங்குதல்.**

*1. பற்றவைத்தல் தொழில்நுட்பம் பட்டயம்*

*2. பொருத்துதல் தொழில்நுட்பம் பட்டயம்*

*3. நெசவு தொழில்நுட்பம் பட்டயம்*

*4. பின்னலாடை தொழில்நுட்பம் பட்டயம்*

*5. ஆடை சாயமேற்றுதல் மற்றும் அச்சிடுதல் பட்டயம்*

*6. ஆயத்த ஆடை விற்பனைப்படுத்துதல் பட்டயம்*

*7. திருநங்கைகளின் மனித உரிமைக்கான சான்றிதழ் படிப்பு*

*8. சைஃபர் சட்டங்கள் மற்றும் சைஃபர் குற்றங்கள் புலனாய்வு பட்டயம்.*

## அண்ணாமலை பல்கலைக்கழகம்

4.76 அண்ணாமலை பல்கலைக்கழகம் 1929ஆம் ஆண்டு சிதம்பரத்தில் உருவாக்கப்பட்டது. இது நாட்டில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் ஒரு சிறந்த இடத்தை அடைந்துள்ளது. இப்பல்கலைக்கழகம் யுனிடரி (Unitary) என்று சொல்லப்படுகின்ற தன்மையில் ஒரே இடத்தில் அனைத்து வகையான துறைகளையும் உள்ளடக்கியது. இப்பல்கலைக்கழகம் 10 புலன்களையும், 50 துறைகளையும் கொண்டு கலை, அறிவியல் கல்வியியல் இசை, மொழியியல், பொறியியல் மருத்துவம், விவசாயம் மற்றும் கடல்சார் அறிவியல் என்று பல அறிவு சார்ந்த படிப்புகளை வழங்கி வருகிறது. இன்று 425 படிப்புகள் பல்கலைக்கழக வளாகத்தில் வழங்கப்படுகின்றன. இப்பல்கலைக்கழகத்தின் தொலைதூர கல்வி இயக்ககம் ஆசியாவிலேயே இரண்டாவது மிகப் பெரியதாகும். இந்த பல்கலைக்கழகம் கடந்த 83 ஆண்டுகளாக படிப்படியாக வளர்ச்சி பெற்று நாட்டின் வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், ஒரு அறிவுசார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கு நாடு விடுதலை பெறுவதற்கு முன்பும்,

பின்பும் தொண்டாற்றி வருகிறது. நாட்டை உருவாக்கும் பணியிலும் மாணவர்களுடைய எதிர்காலத்தை நிர்ணயிக்கும் இப்பல்கலைக்கழகத்தின் பங்கு மறுக்க முடியாதது.

4.77 சமுதாயத்தின் தேவைக்கேற்ப பல்கலைக்கழகம் பொறியியல், விவசாயம், கடல்சார் அறிவியல், மொழியியல் என்று பல்வேறு துறைகளில் பாடத் திட்டங்களை உருவாக்கி அதற்குரிய ஆய்வுக்கூடங்களை அமைத்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட வசதிகள் முதுகலைப் பட்டப் படிப்பிற்கும், ஆய்வுப் பட்டப் படிப்பிற்கும் சிறந்த உந்துதலாக இருக்கிறது. இதனால் அளவிட முடியயத அளவிற்கு கட்டிடங்களையும் மற்றும் வசதிகளையும் உருவாக்கி பல மாணவர்கள் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. தொலைதூரக் கல்வி மையம் அமைக்கப்பட்டது மற்றுமொரு சாதனையாகும்.

4.78 இப்பல்கலைக்கழகத்தின் சமுதாயப்பணி எல்லோரும் அறிந்த ஒன்றே. இங்கு யோகா மையம், நாட்டு நலப்பணித்திட்டம், கடற்படை தேசீய மாணவர் படை,

சமுதாய பணி மன்றங்கள், மருத்துவ முகாம்கள் மற்றும் பல சமுதாயப்பணிகள் பல துறைகளின் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. ஊரக மேம்பாட்டு மையம் மற்றும் விவசாய விரிவாக்க மையம், ராஜா முத்தையா இதய நோய் மருத்துவ மையம், இருபத்திநான்கு மணி நேரமும் பணிபுரியும் அவசர சிகிச்சை மையங்கள், ஆம்புலன்ஸ் வசதிகள் ஆகியவை இப்பல்கலைக் கழகத்தின் குறிப்பிடத்தக்க மனிதாபிமான செயல்பாடுகள்.

4.79 இப்பல்கலைக்கழகத்தின் பணியமர்த்தல் மையம் இங்கிருந்து பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டுதலையும், வேலை வாய்ப்புகளையும் உருவாக்கித் தருகிறது. இங்கு செயல்பட்டு வரும் தரக்கட்டுப்பாட்டு மையங்கள் அவ்வப்போது வழங்கப்படும் கல்வியின் தரத்தை உறுதிப்படுத்துகிறது.

4.80 இப்பல்கலைக்கழகம் அண்மையில் பவள விழாவைக் கொண்டாடியது. மேலும் இந்திய தேசீய அறிவியல் பேரவை நிகழ்வை நடத்தியது.

# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

**4.81** தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், **2008**ஆம் ஆண்டு, தமிழ்நாடு சட்டம் **33**இன் அடிப்படையில் நிறுவப்பட்டதாகும்.

**பல்கலைக்கழகத்தின் முதன்மையான நோக்கங்கள்**

- தேசிய ஆசிரியர் கல்விக்குழுவின் ஒப்புதலுடன், மாநிலக் கல்வியின் அனைத்து நிலைகளிலும், ஆசிரியர்களின் கல்வித் திறனை மதிப்பிடல்.
- ஆசிரியர் கல்வியில் புதுமையான பாடத்திட்டங்களை அடையாளம் காணல் மற்றும் ஆய்வு வசதிகளை மேம்படுத்துதல்.
- ஆசிரியர் கல்வியில் மேலும் வளர்ச்சிநிலையை எய்துவதற்காகப் புதிய களங்களில் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்துதல்.
- ஆசிரியர் கல்வியை மேம்படுத்துவதற்காகப் பரந்து விரிந்த அளவிலான செயல்பாடுகளை வளர்த்தல். கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், கலந்தாய்வுக் கூட்டங்களை நடத்துதல்.

- பல்கலைக்கழக நூலகங்கள், ஆய்வகங்கள், வெளியீட்டகங்களை உருவாக்கல் மற்றும் பராமரித்தல்

## முக்கிய செயல்பாடுகள்

- தற்போது தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டுப் பாட்டின் கீழ் 639 சுயநிதி ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

- 2011 ஆம் ஆண்டில் பி.எட்., மாணவர்களுக்கு இரண்டுநாள் பாடத்திட்டப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

- தற்போது செயல்பட்டுவரும் ஆய்வுத் திட்டத்தின்கீழ் 110 மாணவர்கள் ஆய்வு செய்கின்றனர். ஜுலை 2011 இல் 34 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர்.

**சாதனைகள்**

**பாடத்திட்ட மேம்பாடு**

4.82 **ஆசிரியர் பயிற்றுநருக்கான கற்பித்தல் முறைமை** பற்றித் திருமதி. **டயானா மெக்ஜி** பி.எச்.டி., (இயக்குநர், தொடர்கல்வி மையம் மற்றும் பன்னாட்டுத் திட்டங்கள், ஜான் அபாட் கல்லூரி, கனடா) அவர்களுடன் விரிவாக விவாதிக்கப்பட்டது.

## ஆய்வு மற்றும் பிற செயல்பாடுகள்

- சென்னை – **5** , திருவல்லிக்கேணியில் அமைந்துள்ள என்.கே.டி. மகளிர் கல்வியியல் கல்லூரியில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்து இணைப்புக்கல்லூரி ஆசிரியர்களுக்குமான பயிற்சித்திட்டம் நடத்தப்பட்டது. காலப்போக்கில், தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களில் உள்ள இணைப்புக்கல்லூரி ஆசிரியர்களையும் இத்திட்டத்தில் பங்கேற்க அழைப்பதெனத் திட்டமிடப்பட்டுள்ளது.

- **மனவளக்கலை, யோகா மற்றும் மதிப்புக்கல்வி** (உலகச் சமூகப் பணிமையத்தின் ஆலோசனைப்படி, நன்னெறிக்கல்வி என்றும் அறியப்படும்) சான்றிதழ் படிப்பிற்கான விதிமுறைகள் மற்றும் பாடத்திட்டத்தின் அடிப்படையில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

## 2012–13 ஆம் கல்வியாண்டிற்கான செயல்பாடுகளும் திட்டங்களும்

- கட்டட மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்குத் தேவையானவற்றை செய்தல்.

## அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.

**4.83** சென்னை மாநகரில் செயல்பட்டு வந்த கிண்டி பொறியியல் கல்லூரி, அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை தொழில்நுட்ப நிறுவனம், குரோம்பேட்டை மற்றும் கட்டிடக்கலை / திட்டமிடுதல் பள்ளி ஆகிய அனைத்து கல்லூரிகளையும் ஒன்று இணைத்து ஒரு தனி பல்கலைக்கழகமாக –பொறியியல், தொழில்நுட்பம், கட்டிடகலை மற்றும் அறிவியல் சார்ந்த ஒரு தனித்தன்மையுடைய பல்கலைக்கழகமாக தொழில்நுட்ப கல்வியில் ஒரு தலையாய முத்திரை பதிக்கும் வண்ணம், **04.09.1978** அன்று அண்ணா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

**4.84** அண்ணா பல்கலைக்கழகம் தன்னகத்து உள்ள ஆசிரியர்கள் ஆராய்ச்சியாளர்கள், மேதைகள் இவர்களின் மூலம் பொறியியல் தொழில் நுட்ப கல்வி, ஆராய்ச்சி, சமுதாய பணி போன்ற அனைத்திலும் அனைவரும் வியக்கும் வண்ணம் பொறியியல் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி இந்தியாவில் ஒரு முதன்மை பல்கலைக்கழகமாக உருவாகியுள்ளது.

**4.85** திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, மதுரை மற்றும் சென்னை போன்ற இடங்களில் நடைப்பெற்று வந்த ஐந்து அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களை, சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்க அரசு சட்டம் இயற்றி உள்ளது.

**பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்கள் :**

- பொறியியல் கல்வியை மேம்படுத்தி, அதன் வாயிலாக மூலம் மனிதவள மேம்பாட்டு வளர்ச்சியை வேகமான தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு பொருந்தும் வகையில் உருவாக்குதல்;

- தமிழ் நாட்டில் பொறியியல் தொழில்நுட்பம் பயின்று வரும் அனைத்து மாணவ–மாணவியர்களின் நம்பிக்கைகளை அண்ணா பல்கலைக்கழகம் தன்னிடம் உள்ள உள்கட்டமைப்பு வசதிகளின் மூலமாகவும் அனுபவம் வாய்ந்த ஆசிரிய பெருமக்களைக் கொண்டு நனவாக்குதல்.

- பொறியியல் பணியாளர்கள் மற்றும் மாணவ–மாணவியர்களிடையே தார்மிக கோட்பாடுகளையும் பொறியியல் தொழில் நுட்பம் சார்ந்த உயர் நோக்கங்களையும் கற்றுத்தந்து அதன் மூலம் சமுதாயத்தில் அனைத்து மக்களையும் நல்ல நெறிமுறைக்கு செயல்படுத்தும் வண்ணம் அவர்களுக்கு உதவிபுரிதல்;

- அறிவு சார்ந்த சமுதாயத்தை உருவாக்கும் எண்ணத்தில் இன்றைய பொறியியல் தொழில் நுட்ப வளர்ச்சியின் உதவியோடு ஆக்க பூர்வமான வகையில் சமுதாயத்திற்கு பணிபுரிதல்;

**பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி :**

4.86 கடந்த 34 வருடங்களில், அண்ணா பல்கலைக்கழகம் அறிவியல், பாறியியல் மற்றும் தொழல்நுட்பத் துறைகளிலும் முன்னேறியுள்ளது. அனைவரும் பாராட்டும் வண்ணம் வளர்ச்சிப்பணிகள், ஆசிரியர்களின் எண்ணிக்கை, மாணவ மாணவியர்களின் சேர்க்கை, புதிய துறைகள், மையங்கள் புதிய கட்டிடங்கள் என தனது செயல்பாடுகளை விரித்து தனி முத்திரையை பதித்துள்ளது.

பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் செயல்முறை அறிவியல் என அனைத்து துறைகளிலும் 58 இளநிலை பாடத் திட்டங்களும் (முழு நேரம்/பகுதி நேரம்), 109 முதுநிலை பாடத் திட்டங்களும் (முழு நேரம்/பகுதி நேரம்), 6 பட்ட முன்னோடி ஆய்வுப் படிப்புகளும், ஆராய்ச்சிப் படிப்புகளும் நடைமுறையில் உள்ளன. மேலும், 34 துறைகள் தன்னிறைவு பெற்ற 48 மையங்களுடன் மற்றும் அதிநவீன சோதனை கூடங்களுடன், அறிவியல் சமுதாயம் எதிர்பார்க்கும் அளவிற்கு தேவையான உள்

கட்டமைப்பு வசதிகளுடன், இப்பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகின்றது.

**பல்கலைக்கழகத்தின் முக்கிய சாதனைகள்**

- இந்திய விண்வெளி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து, முதலாவதாக ‘நுண்–விண்கோள்’ திட்டத்தை அண்ணா பல்கலைக்கழகம் பெற்று செயல் படுத்தியது. இந்தியப் பல்கலைக்கழகங்களிலேயே, முதன் முறையாக இத்தகைய விண்கோள் அண்ணா பல்கலைக்கழகத்தில் வடிவமைக்கப்பட்டு, உருவாக்கப்பட்டது.

- வெள்ள மேலாண்மையின் கீழ், தகுந்த நேரத்தில் மக்களை பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்லும் அளவில், இந்தியாவிலேயே முதன் முறையாக ‘வான்உயர லேசர் நில வரைபடம்’ உபயோகப்படுத்தப்பட்டது.

- ரூ.2.10 கோடி செலவில், 80 ‘விவேக அறிவார்ந்த வகுப்பு அறைகள்’ இப்பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

- தமிழ் நாட்டில் தொழிற்கல்விக்கூடங்களில் பயிற்சிக்காகவும் தொழில்நுட்ப வளர்ச்சிக்காகவும் அண்ணா பல்கலைக்கழகம் பேரறிஞர் அண்ணா வித்தகர் பீடத்தை ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படுத்தியுள்ளது.

- அண்ணா பல்கலைக்கழகம் 1991–ம் ஆண்டு முதல் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி மையத்தினை நிறுவியுள்ளது. அதன்மூலம் இக்கல்வியாண்டில் 3500 இளநிலை மற்றும் முதுநிலை மாணவ–மாணவியர்களுக்கு வேலை வாய்ப்பினைப் பெற்றுத் தந்துள்ளது.

- பல்கலைக்கழக மானியக் குழுவின் தகவல் வலை திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டு அளவில் இரண்டாம் இடத்தையும், உலகளவில் 11ம் இடத்தையும் அண்ணா பல்கலைக் கழகம் பெற்றுள்ளது.

- சுற்றுக்சூழல் அறிவியலிற்கான பல்கலைக்கழக மையத்தை உருவாக்கியதற்காக பல்கலைக்கழக மானியக்குழு, அண்ணா பல்கலைக்கழகத்திற்கு ‘சிறப்பு தகுதிக்கான திறன் தீவு’ எனும் விருதினை வழங்கி உள்ளது.

- தமிழ்நாட்டில் பயிலும் பொறியியல் மாணவ / மாணவியர்களின் மேம்பாட்டிற்காக அறிவுசார் தகவல் தொகுதி மையம் ஒன்றை நிறுவி அதன் மூலம் மின் கற்றல், மின் கல்வி, மின் ஆளுமை, இலக்கு நூலக வசதிகள், வலைதள சேவை போன்ற அத்தனை துறைகளாலும் தமிழ்நாட்டில் இயங்கிவரும் 550க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் பயனடையும் விதத்தில் பல நிகழ்வுகளை செயல்படுத்தி வருகிறது.

- அண்ணா பல்கலைக்கழகமும், அபோல்லோ மருத்துவமனை கல்வி ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து Clinical Trial Management (CTM)

சான்றிதழ் பெரும் வகையில் ஓர் புரிந்துரைணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

- அண்ணா பல்கலைக்கழகம் வெளி நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுடன் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப கல்வியை ஊக்குவிப்பதற்காக இவ்வாண்டில் 4 தேசிய மற்றும் 16 பன்னாட்டு கல்வி நிறுவனங்களுடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

- அண்ணா பல்கலைக்கழகத்தின் விண்வெளி பொறியியல் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களும், மாணவ மாணவியர்களும் ஒருகிணைந்து, '**தக்ஷா**' எனப்படும் மனிதன் இல்லாத வின்வெளி கலன் ஒன்றை திட்டமிட்டு வடிவமைத்து, அதன் பயனாக அமெரிக்க நாட்டின் UAVFORGE-Air Vehicle Challenge என்ற அமைப்பு நடத்தும் பல நாடுகள் கலந்துகொள்ளும் போட்டியில் பெருமையுடன் பங்குபெறவுள்ளது.

- அண்ணா பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் AU-KBC மையத்தின்மூலமாக தமிழகத்தில் உள்ள 32 மாவட்ட மத்திய நூலகங்களையும் சென்னையில் செயல்பட்டு வரும் கன்னிமரா நூலகத்தையும் FOSS-Koha மூலம் தானியங்கி வலை பின்னியில் ஒருங்கினைத்து அதன் மூலம் தமிழகத்தின் உள்ள அனைத்து நூலகங்களுக்கும் தகவல்களை பரிமாறி கொள்ள வைக்கிறது.

- மாணவர்களின் நலனுக்காக, அண்ணா EDUSAT மூலமாக மாணவர்களின் வேலை வாய்ப்பு ஆற்றலை

மேம்படுத்தும் வகையில் Cognizant Technology Solutions (CTS) மூலமாகவும், ஆசிரியர்களுக்காக இன்றைய தொழில்நுட்பம் என்னும் தலைப்பில் Microsoft India மூலமாகவும் பயிற்சி நடத்தப்பட்டது.

- அண்ணா பல்கலைகத்தில் பணியாற்றும் போராசிரியர்களின் மூலம் நடப்பாண்டில் 23 புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- பி.இ. கட்டிட பொறியியல் மற்றும் இயந்திரவியல் துறைகளுக்கான தமிழ் பாடநூல்கள் முதல் பருவத்திலிருந்து நான்காம் பருவம் வரை அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

- பல்கலைக்கழக மானியக்குழு ரூ.5 கோடி நிதியுதவியை அண்ணா பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கீடு செய்து அதில் நடப்பாண்டில் ரூ.2.50 கோடியை கீழ்காணும் கட்டிட பொறியியல், இயந்திரவியல், கணிப்பொறி அறிவியல் மற்றும் பொறியியல், உயிர் தொழில் நுட்பம், வின்வெளி பொறியியல், மென்பொருள் மற்றும் கம்பியில்லா தொழில் நுட்பம் போன்ற துறைக்கு ஒதுக்கியுள்ளது. மேலும், சுற்றுச் சூழ்நிலை ஆய்வு, மீ–நுன் தொழில்நுட்பத்தின் வாயிலாக நீரில் உள்ள எண்டோகிரைன் புளோரைடு ஆர்சினிக் போன்ற மூலக்கூறுகளை அகற்றுதல், பாறைகளில் படிந்துள்ள தேவையற்ற மூலக்கூறுகளை சுற்று சூழல் பாதிக்காத வண்ணம் மதிப்படுதல், தமிழ் நாட்டின் கரையோரங்களில் சுற்று சூழல் மேலாண்மை திட்டம், தொழில்

கூடங்களிலிருந்து வெளிப்படும் நச்சு பொருட்களையும், வாயு பொருட்கையும் அகற்றுதல், விசேட சாம்பலையையும் ஆடை கழிவுகளையும் பயன்படுத்தி கட்டடிடங்கள் கட்டும் மூலப்பொருட்களை உருவாக்குதல், விசேட பொருட்கள் பாதுகாக்கும் வகையில் குறைந்த கார்பன் உள்ள தொழில் நுட்பத்தை பயன்படுத்துதல் போன்ற திட்டங்களை செயல்படுத்தவும் நிதி வரப்பெற்றுள்ளது.

- அண்ணா பல்கலைக்கழகம் வேலை வாய்ப்பை பெருக்கும் வகையில் கீழ் காணும் பொறியியல் தொழில் நுட்ப பாடத்திட்டங்களை இணைத்துள்ளது.

- கணிப்பொறி உற்பத்தி, மேக நிலை கணிப்பொறி உருவாக்குதல், தரவு மையங்கள், தரவு மேலாண்மை, தானியங்கும் மனித வடிவமைப்புக்கள், அலைபேசி தொழில் நுட்பம், பன்னோக்கு ஊடக சாதனங்கள், வரைகலை மென்பொருள் சோதனையிடல், தரக் கட்டுப்பாடு, வலைத்தளம், கம்பியில்லா தொலை தொடர்பு, சார்பு நிலை ஒருங்கிணைத்தல் போன்ற பல்வேறு பாடத்திட்டங்கள் இதில் அடங்கும்.

- கம்பியில்லா தொடர்பு தகவலும், தகவல் தெரிழில் நுட்ப பூங்கா (வலைதள மரங்கள்), விசேட வகுப்பறைகள், உயர்நிலை கணிப்பொறி மையம், தகவல் பாதுகாக்கும் வசதிகள், வலைதல சேவைகள், மென்பொருள் உற்பத்தி, வலை தளத்தில் தேவைப்படும் உபகரணங்கள், மென்பொருள்கள் போன்ற அனைத்தையும் அண்ணா பல்கலைக்கழகம், தொலை நிலை ஒளி ஒலி அமைப்பின் மூலமாக தொலைவிலிருந்து கற்றல் மற்றும் கேட்டல்

அனைத்து மாணவர்களும் பெறும் வகையில் உயர் வசதிகளை இப்பல்கலைக்கழகம் செய்துள்ளது.

## 2012–13ம் ஆண்டில் செயல்படுத்தப்படும் பணிகளும், திட்டங்களும்

- செயற்கைகோள் மற்றும் தொலைதூர ஒளி ஒலி கல்வியின் வாயிலாக தொழில்நுட்ப கல்வி, அறிவியல் ஆராய்ச்சி, தொழில்நுட்பம் போன்றவற்றை மேலும் செம்மைப்படுத்தும் வகையில் அண்ணா பல்கலைக்கழகம் பல்வேறு விதமான திட்டங்களைச் செயல்படுத்துதல்.

- மாணவர்களிடையே வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் வகையில் பொறியியல், தொழில்நுட்ப அறிவியல் துறைகளில் மதிப்புறு பாடப்பிரிவுகளை கண்டறியவுள்ளது.

- பல்கலைக்கழகம் மற்றும் தொழிற்கூடங்கள் பங்கேற்பை அதிலும் குறிப்பாக கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி நிலையில் நிறுவுவதற்கான விசேட மையங்களை உருவாக்கி நிறுவ திட்டமிட்டுள்ளது.

- சமுதாய தேவைகளுக்காகவும், அதி கவனம் செலுத்த வேண்டிய துறைகளுக்காகவும் அண்ணா பல்கலைக்கழகம் உயர்நிலை மையங்களை பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் துறைகளில் நிறுவ உள்ளது.

- பி.இ/பி.டெக்/பி.ஆர்க்/பிஎஸ்சி பட்ட பிரிவுகளில் ஒருங்கிணைந்த முனைவர் பட்டத்திற்கான திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.

- மின் ஆளுமை மூலமாக அண்ணா பல்கலைக்கழகம் தனது நிர்வாக அமைப்புகளையும் செயல்பாடுகளையும் மேலும் செம்மையாக்கவுள்ளது.

- ஒவ்வொரு வருடமும் அண்ணா பல்கலைக்கழகம் துவக்கப்பட்ட நாளான செப்டம்பர் 4 ஆம் நாள் அன்று **‘சிறப்பு ஆராய்ச்சி முகாம்’** ஒன்றை நடத்தவும், அந்த முகாமில் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் மற்றும் மையங்களின் ஆராய்ச்சிகளையும், ஆராய்ச்சி முடிவுகளையும் வெளியிடவுள்ளது.

# 5. தமிழ்நாடு ஆவணக்காப்பகம்

**5.1** தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி துறை **1909**ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இதன் தலைமையிடம் எழும்பூர் சென்னையில் அமைந்துள்ளது மற்றும் மாவட்ட ஆவண மையங்கள் கடலூர், கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**5.2** தமிழ்நாடு ஆவணக்காப்பகம், பல்வேறு தலைமைச் செயலகத் துறைகளின் ஆவணங்கள், சிப்பாய் கலகத்திற்கு முன்னதான மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களின் ஆவணங்கள், மாவட்ட நீதி மன்றங்களின் ஆவணங்கள் மற்றும் செயலற்று போன துறைகளின் ஆவணங்களை பாதுகாக்கும் அலுவலகமாக உள்ளது. கி.பி. **1657** ஆம் ஆண்டிற்கு முன்னதான ஆவணங்கள் இவ்வாவணக்காப்பகத்தில் பாதுகாக்கப்படுகிறன.

**5.3** தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் தலையாய பணிகளாவது அனைத்து நிரந்தரமான ஆவணங்களையும் ஒரே இடத்தில் சேமித்து, ஒழுங்கான முறையில் வைத்து அறிவியல் பூர்வமாக பாதுகாத்து வரலாற்று ஆராய்ச்சிக்கு அளிப்பது ஆகும்.. தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் சுமார் **65** இலட்சம் தலைமைச் செயலக ஆவணங்கள், முந்தைய வருவாய் வாரிய ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பல நூலாசிரியர்கள், வரலாற்று ஆர்வலர்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளை சார்ந்த ஆராய்ச்சியாளர்கள், (இந்தியர்கள் மற்றும் அயல்நாட்டினர்) தங்கள் ஆராய்ச்சி பணிக்காக ஆவணக்காப்பகத்தில் உள்ள ஆவணங்களை பார்வையிட்டு செல்கின்றனர்.

**5.4** இது ஒரு ஆராய்ச்சி மையமாக சென்னை பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள ஆவணக்காப்பக நூலகம் ஆராய்ச்சி பணிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இந்நூலகம் கல்வியாளர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. அச்சகம் மற்றும் பதிவுத்துறை புத்தகச்

சட்டம் 1867ன் கீழ் பதிவு செய்யப்பட்ட புத்தகங்கள் இங்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

5.5 ஆவணங்களை பாதுகாக்கும் பொருட்டு இவற்றை டிஜிட்டல் ஸ்கேனிங் மற்றும் நுண்படச்சுருள் செய்யும் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளை மேற்கொள்வதற்காக அதிதிறன் கொண்ட மின் சேமிப்பு சாதனங்கள் மற்றும் அது தொடர்புடைய உபபொருட்கள், நுண்படச் சுருள்கள் பாதுகாக்கும் நிலைப்பெட்டிகள், சேமிப்பு பணிக்கலன்கள் போன்ற உபகரணங்கள் ரூ. 40 இலட்சத்தில் வாங்கப்பட்டுள்ளன.

5.6 மேலும், கீழ்க்கண்ட பொருட்களை வாங்குவதற்கு 2012–13ஆம் ஆண்டில் ரூ. 40 இலட்சம் ஒதுக்கீடு செய்ய ப்பட்டுள்ளது.

- விவரச்சுவடி பிரிவு மற்றும் நூலக பயன்பாட்டிற்கு அட்டங்கள்.

- 1900 ஆண்டிலிருந்து உள்ள ஆவணங்களுக்கு டிஜிட்டல் ஸ்கேனிங் மற்றும் நுண்படச் சுருள் செய்யும் பணிகள் மேற்கொள்ளுதல்.

- 1900ஆம் ஆண்டு முதல் உள்ள அட்டவணைகளுக்கு டிஜிட்டல் பணி மேற்கொள்ளுதல்.

- தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் 6 மாவட்ட ஆவண மையங்களில் ஆவணங்களை உலர வைக்க உலர் அட்டங்களும், பீட வசதி கொண்ட மின்விசிறிகள் வாங்குதல்.

- கணினி மற்றும் தொடர்புடைய பொருட்கள் வாங்குதல்.

- ஆவணக்காப்பக ஆவணங்களில் படியும் தூசிகளை அகற்றுவதற்கு தூசு அகற்றும் கருவி வாங்குதல்.

- அழுத்தும் இயந்திரம் வாங்குதல்.

- தமிழ்நாடு ஆவணக்காப்பக ஆராய்ச்சியாளர்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கு, சுத்தப்படுத்தப்பட்ட தண்ணீர் வழங்கும் கருவி (அக்குவா கார்டு அல்லது நிகரானது) வாங்குதல்.

## 6. அறிவியல் நகரம்

**6.1** மாநில மற்றும் மத்திய அரசின் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் அதாவது அண்ணா பல்கலைக்கழகம், இந்திய தொழில்நுட்ப கழகம் (IIT), மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (CLRI), தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் போன்ற நிறுவனங்கள் அமைந்துள்ள கிண்டி–தரமணி பகுதி அறிவியல் நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவியல் தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்தல், தொழில் நிறுவனங்கள் மற்றும் மூலதன நிறுவனங்களுக்கிடையே தொழில்நுட்பங்களை பரிமாற்றம் செய்தல், உலகளாவிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் போன்றவை அறிவியல் நகரத்தின் முக்கிய குறிக்கோள்கள் ஆகும்.

### 6.2 அறிவியல் நகரத்தின் முக்கிய பணிகள்

தலைசிறந்த விரிவுரைகள், அறிவியல் நிபுணர்களை சந்தித்தல், மாநாடு / கருத்தரங்கங்கள், அறிவியல் கண்காட்சிகள், அறிவியல் முகாம்கள்,

அறிவியல் விழா, அதிநவீன தொழில்நுட்பம் சார்ந்த விழிப்புணர்வு இயக்கங்கள் நடத்துதல், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணவர்களுக்கு அறிவியல் நிகழ்ச்சிகள், சுற்றுச்சூழல் சார்ந்த திட்டங்களான ''குப்பையிலிருந்து செல்வம்'' உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**6.3** ஊரக பகுதிகளிலிருந்து **512** மாணவர்கள், **51** மகளிர் அறிவியல் நிபுணர்கள் மற்றும் **18** மகளிருக்கு முறையே 'மாணவர் அறிவியல் கல்வி விருது', ;தமிழ்நாடு இளம்பெண் அறிவியலாளர் விருது', 'தமிழ்நாடு வாழ்நாள் பெண் சாதனையாளர் விருது' ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

**6.4** மரபியல் தொழில்நுட்பம், மீநுண்தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் மூன்று விழிப்புணர்வு முகாம்கள் ரூ.**6** இலட்சம் செலவில் நடத்தப்பட்டு, **500** முதுநிலை மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

6.5 ரூ.4 இலட்சம் செலவில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த 10 கருத்தரங்குகள் நடத்தப்பட்டு, சுமார் 1,000 மாற்றுத்திறனாளி மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

6.6 முன்னோடி தொழில்நுட்பங்களாக மூலச்செல் (Stem cell) தொழில்நுட்பம், மீநுண் தொழில்நுட்பம், தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் குறித்த மூன்று விழிப்புணர்வு முகாம்கள் ரூ.3 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு 400 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

6.7 உயிரி தொழில்நுட்பம், தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம், அணுவியல் தொழில்நுட்பம், திசு வளர்த்தல் (Tissue Culture), வைராலஜி (Virology), மீநுண் தொழில்நுட்பம் (Nano-Technology) அணுவியல் தொழில்நுட்பம் (Nuclear-Technology) குறித்த பயிற்சி பட்டறைகள் ரூ.7 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு, 475 முதுகலை மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

**6.8 500** பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கு உலகம் வெப்பமயமாதல், பேரிடர் தடுப்பு மேலாண்மை, பல்லுயிர் வேறுபாடு மற்றும் சிறப்புக் கருவிகள் ஆகிய துறைகளில் ரூ.**3** இலட்சம் செலவில் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன.

**6.9** ரூ.**3** இலட்சம் செலவில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் குறித்த பயிலரங்கங்கள் நடத்தப்பட்டு, **1,200** பல்வகை மாற்றுத் திறனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**சென்னை அறிவியல் விழா 2012**

**6.10** பெரும் அறிவியல் கண்காட்சி, பொது விரிவுரைகள், குழு விவாதங்கள், அறிவியல் செயல்முறைகள், அறிவியல் பொழுதுபோக்குகள், அறிவியல் போட்டிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ‘சென்னை அறிவியல் விழா’, ஜனவரி **2012**–இல் நடத்தப்பட்டது. எரிசக்தி, சுற்றுச்சூழல், சுகாதாரம், அடிப்படை மற்றும் கால்நடை அறிவியல் ஆகிய கருப்பொருட்கள் மீது அறிவியல் கண்காட்சி நடத்தப்பட்டது. இதைத்தவிர, கால்நடை அறிவியல்

பல்கலைக் கழகத்தின் நேரிடக் காட்சிப்படுத்துதல் உட்பட 120க்கு மேற்பட்ட அரங்குகள் கண்காட்சியில் இடம்பெற்றன.

## 2012 – 13 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள்

### 6.11 மீநுண் வெளிப்படுத்துகை 2012 (Nano-Revelation 2012)

மீநுண் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பயன்பாடுகள் மற்றும் அத்தொழில்நுட்பத்தில் உலகளவில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் ஆகியவற்றினை கல்லூரி மாணவர்களுக்கு கற்றுத்தரும் பொருட்டு, ஒவ்வொரு மாதமும் மீநுண் அறிவியல் தொழில்நுட்பத்தின் தெரிவு செய்யப்பட்ட தலைப்புகளில், 12 தொடர் பயிலரங்கங்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பயிலரங்கங்களுக்கு நாட்டில் உள்ள அறிவியலாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் அழைக்கப்படுவார்கள்.

## 6.12 சென்னை அறிவியல் விழா 2013

2012–13 ஆம் ஆண்டில் பெரும் அறிவியல் கண்காட்சி, பொது விரிவுரைகள், குழு விவாதங்கள், அறிவியல் செயல்முறைகள், அறிவியல் பொழுதுபோக்குகள், அறிவியல் போட்டிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சென்னை அறிவியல் விழா 2013, ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் நடத்தப்படவுள்ளது.

**6.13** அறிவியல் நகரம், “Science City News Letter” எனும் ஆங்கில மாத செய்தி மடலை இலவசமாக வெளியிட்டு வருகிறது. மாணவர்களுக்கென 2012–13 ஆம் ஆண்டில் அறிவியல் செய்திகளை தமிழில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்விதழானது, சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள பள்ளிகள், கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக் கழகங்களுக்கும் இலவசமாக அறிவியல் நகரத்திலிருந்து அளித்திட

உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்விதழ் வெளியீட்டினை நான்கு திங்கள் இடைவெளியில் வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 7. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்

### மன்றத்தின் வரலாறு குறித்த சிறு குறிப்பு

7.1 மாநில அளவிலான உயர்கல்வித் திட்டங்களின் மேம்பாட்டிற்கும் மற்றும் மாநிலத் திட்டங்கள், பல்கலைக்கழக மான்யக் குழுவின் திட்டங்கள் இவற்றை ஒருங்கிணைக்க உதவும் வகையில் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் 1992ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப் பேரவையின் சட்டமொன்றின் வாயிலாக தோற்றுவிக்கப்பெற்றது. இம்மாநில உயர்கல்வி மன்றம் இரு பிரிவுகளைக் கொண்டு செயல்படுகின்றது.

அ) உறுப்பினர்களை உள்ளடக்கிய மன்றம்

ஆ) தமிழகத்திலுள்ள அனைத்து பல்கலைக்கழக துணைவேந்தர்களை உறுப்பினர்களாகக் கொண்ட துணைவேந்தர்கள் ஆலோசனைக் குழுமம்

## 7.2 2011–12 ஆம் ஆண்டிற்கான இம்மன்றத்தின் செயல்பாடுகள்

- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 850 ஆசிரியர்களுக்கு புத்தக்காப் பயிற்சி அளிக்கப்பட்டது.

- மாணவர் சிறு ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் 50 திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு நிதியுதவி செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 35 முதுகலை திட்டங்களும் 15 இளங்கலை திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு முதுகலை திட்டத்திற்கு தலா ரூ.10,000/–ம் இளங்கலை திட்டத்திற்கு தலா ரூ. 5,000/–ம் வழங்கப்படுகிறது.

## 7.3 2012–13 ஆம் ஆண்டில் மேற்கொள்ளவுள்ள செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள்

- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு பாட சம்பந்தமாக மென்பொருள் பயிற்சி அளித்தல்

- உயர்கல்வி சம்பந்தமான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பற்றி ஆய்வு செய்வதற்கு இம்மன்றத்தில் கல்வி தொடர்பு மையம் ஒன்றினை நிறுவுதல்

- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதல்வராக வர வாய்ப்புள்ள ஆசிரியர்களுக்கு புத்தாக்க பயிற்சியினை வழங்குதல்

- தமிழகத்தில் உள்ள அரசு கல்லூரிகளில் தேசிய நூலக மற்றும் மாணவர்களுக்கான தகவல் சேவை கட்டமைப்பினை உருவாக்குதல்

- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு சிறு ஆராய்ச்சி திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்துதல்

- மாணவர் சிறு ஆய்வு திட்டம் எண்ணிக்கையினை அதிகரித்தல்

- சிறந்த ஆசிரியர் விருது வழங்குதல்

- சிறந்த கல்லூரி விருதின் எண்ணிக்கையை உயர்த்துதல்

## 8. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

8.1 இளம் வயதினரிடையே அறிவியல் தொழில்நுட்பச் சிந்தனைகளை ஏற்படுத்த, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், 1983ல் ஏற்படுத்தப்பட்டது. இயற்கையான வானவியல் நிகழ்வுகள் குறித்த மூட நம்பிக்கைகளை அகற்றுவதற்காக, வானவியல் மற்றும் வான் இயற்பியல் நிகழ்ச்சிகளை இம்மையம் நடத்தி வருகிறது. தமிழ்நாட்டின் பிறபகுதிகளிலும் இந்த வசதிகளைப் பெறுவதற்காக திருச்சிராப்பள்ளியில் மண்டல அறிவியல் மையம் மற்றும் வேலூரில் மாவட்ட அறிவியல் மையம் ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

8.2 தற்காலிகக் கண்காட்சிகள், வானவியலிலான குறுகியகால வகுப்புகள், கணினியிலான பயிற்சிப்பட்டறைகள், அறிவியலிலான கருத்தரங்குகள் மற்றும் விரிவுரைகள், கோடைகால மற்றும் குளிர்கால அறிவியல் முகாம்கள், வானவியல் முகாம்கள், கணித திறனறித் தேர்வுகள், வானவியல் ஒலிம்பியாட், வானவியல் திறனறிப் போட்டிகள் மற்றும்

‘அறிவியலாளரைச் சந்தியுங்கள்’, ‘உங்களது மருத்துவ வல்லுநரைச் சந்தியுங்கள்’ ஆகிய நிகழ்ச்சிகளை தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் மாணவச் சமுதாயத்தின் நலனுக்காக நடத்துகிறது.

**8.3** மேலும், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமானது, நேரடி அறிவியல் செய்முறை விளக்கங்கள், அறிவியல் வினாடி வினா, பேச்சுப் போட்டிகள் மற்றும் கட்டுரைப்போட்டிகள், ஓவியப்போட்டிகள் மற்றும் அனைத்து மாவட்டங்கள் மற்றும் மாநில அளவில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த கண்காட்சிகளைச் செயல்முறை விளக்கங்கள்வழி அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கருத்துகளை மாணவர்கள் கற்க விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. முக்கிய வானவியல் நிகழ்வுகளின் போது, அவை குறித்த விளக்கம் அளிக்கும் முகாம்கள் மற்றும் தொலைநோக்கி மூலம் இரவு நேரங்களில் வான் நோக்குதல் போன்றவை நடத்தப்படுகின்றன. இவை தவிர, மாணவர்களுக்கு அறிவியலைக் கற்பித்தலிலான திறனை மேம்படுத்தும் பொருட்டு, ஆசிரியர்களுக்கு செய்முறை விளக்கப் பயிற்சி முகாம்களை இம்மையம் நடத்தி வருகிறது.

**செயல்பாடுகள் :**

8.4 சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திலான பல்வேறு காட்சிக் கூடங்கள் மற்றும் பழங்கால தமிழ் இலக்கியத்தில், விவரிக்கப்பட்டுள்ள ஐந்து வகை நிலங்களின் மாதிரிகளும் அமைக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திலான கருத்துக்களை சிரமமின்றி, உற்சாகத்துடன் கற்பதற்கு ஏதுவாக அறிவியல் தத்துவங்களின் அடிப்படையிலான காட்சிப் பொருட்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் முப்பரிமாண அறிவியல் திரையரங்கம் மற்றும் பிர்லா கோளரங்கம் ஆகியவை நிறுவப்பட்டுள்ளன.

- திருச்சிராப்பள்ளியில், அண்ணா அறிவியல் மையம் – கோளரங்கம், சுற்றியுள்ள மாவட்டங்களில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கருத்துக்களை பிரபலமாக்குவதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. முப்பரிமாண திரையரங்கம் மற்றும் கோளரங்கம் ஆகியவை நிறுவப்பட்டுள்ளன.

- வேலூரில் ரூ.298.00 இலட்சம் மதிப்பீட்டில், மாவட்ட அறிவியல் மையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்த அறிவியல் மையத்தில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திலான நான்கு காட்சிக் கூடங்கள் உள்ளன.

- ரூ.850 இலட்சம் மதிப்பீட்டில் மண்டல அறிவியல் மையம் ஒன்று கோயம்புத்தூரில் நிறுவப்பட்டு வருகிறது. இந்த அறிவியல் மையம் 2012 ஜுன் மாதத்திற்குள் திறக்கப்படவுள்ளது.

- ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு குறித்த காட்சிக்கூடம் 2012 இறுதிக்குள் முடிக்கப்படும். நமது நாட்டின் படைபலத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப முன்னேற்றங்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், இக்காட்சிக் கூடம் நிறுவப்படுகிறது.

- கணிதப் பாடத்தை கற்றலில் ஏற்படுகின்ற அச்சத்தினை நீக்கும்பொருட்டு, ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில், இராமானுஜசன் கணிதக் காட்சிக்கூடம் 2012 ஜுலை மாதத்திற்குள் பொதுமக்களின் பார்வைக்கு திறக்கப்படும்.

- கணிதப் பாடத்தை மாணவர்கள் உற்சாகத்துடன் கற்கவேண்டும் என்ற நோக்கில், ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில், நடமாடும் கணிதப் பேருந்து ஒன்று 2012 ஜுலை மாதத்திற்குள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

- போக்குவரத்துக் காட்சிக்கூடம் மற்றும் அறிவியல் பூங்கா ஆகியவற்றை வலுவூட்டுவதற்கான நடவடிக்கைகள் 2012 ஜூலை மாதத்திற்குள் முடிக்கப்படும். மேலும், மீநுண்தொழில்நுட்பவியல் (Nano-Technology) காட்சிக் கூடம் 2012 ஜூலை மாதத்திற்குள் பொதுமக்களின் பார்வைக்கு திறக்கப்படும். பரிணாம வளர்ச்சிப் பூங்கா ஒன்று விரைவில் திறப்பதற்கு தயாராக உள்ளது.

- திருச்சி அண்ணா அறிவியல் மையத்தில் மூலிகைப் பூங்கா நிர்மாணிப்பதற்கான பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

- கன்னியாகுமரியில் மாவட்ட அறிவியல் மையம் நிர்மாணிப்பதற்காக நிலம் ஒதுக்கீடு செய்து பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

8.5 2012–13–ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படவுள்ள முக்கிய திட்டங்கள்:–

அ) ஒரு செல் உயிரினத்தில் துவங்கி கேம்பிரியின் யுகம் வரை உயிரினப் பரிணாம வளர்ச்சியை விளக்கும் காட்சிப் பொருட்களுடன் கூடிய டைனோசார் பூங்கா ரூ.45 இலட்சம் செலவில், சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் உருவாக்கப்பட்டு வருகிறது.

ஆ) மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவதற்கானத் தேவைகளைப் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, ரூ.140 இலட்சம் செலவில் மரபு சாரா எரிசக்திப் பூங்கா சென்னையிலுள்ள பெரியார்

அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் உருவாக்கப்பட்டு வருகிறது.

இ) மாணவ சமுதாயத்தினரிடையே விண்வெளி ஆராய்ச்சி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், **2012–13** நிதியாண்டில் சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் விண்வெளி தொழில்நுட்பக் காட்சிக்கூடம் ரூ.**50** இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

ஈ) அணுசக்திப் பயன்பாடு பற்றி பொதுமக்களிடையே நிலவும் அச்சத்தினைப் போக்கும் வகையில் இந்திய அணுசக்திக் கழகத்தின் (Nuclear Power Corporation) உதவியுடன் ரூ. **2.40** கோடி மதிப்பீட்டில் **2012–13** நிதியாண்டில் சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அணு சக்திக் காட்சிக்கூடம் அமைக்கப்படும்.

உ) தர்மபுரியில் மூன்று காட்சிக் கூடங்கள் மற்றும் அறிவியல் பூங்காவுடன் கூடிய மண்டல அறிவியல் மையம் ரூ. **8.50** கோடி மதிப்பீட்டில் **2012–13** நிதியாண்டில் நிறுவப்படும்.

ஊ) செய்முறைகளின்வழி மாணவ சமுகத்தினரிடையே அறிவியல் ஆர்வத்தினை ஏற்படுத்திட, **50** பள்ளிகளில் தலா இருபத்தைந்து வகையான நேரடியாக இயக்குதல் தன்மை வாய்ந்த அறிவியல் சார்ந்த காட்சிப் பொருட்கள் இடம் பெறும் வகையில் ரூ.**50** இலட்சம் மதிப்பீட்டில் அறிவியல் மையங்கள் ஏற்படுத்தப்படும்.

## 9. தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி மாநில மன்றம்

**9.1** தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்கென மாநில அளவிலான திட்டத்தை செயல்படுத்துவதற்காக "தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி மாநில மன்ற சட்டம், 2010" (தமிழ்நாடு சட்டம் 2010–இன் 4வது சட்டம்) இயற்றப்பட்டு தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி மாநில மன்றம் அமைக்கப்பட்டு **18.6.2010** முதல் செயல்பட்டு வருகிறது.

**மன்றத்தின் செயல்பாடுகள்**

**9.2** தொழில்நுட்பக் கல்வியில் அறிவியல் ஆராய்ச்சி மற்றும் கல்லூரிகளின் தரத்தினை ஒருங்கிணைத்து நிர்ணயித்தலே இம்மன்றத்தின் முதன்மையான குறிக்கோளாகும். மாநிலத்தில் தொழிற்கல்வியின் வளர்ச்சிக்குத் திட்டமிடுதல், தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்குத் திட்டமிடுதல், தொழில் நுட்பப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளின் தொழில்நுட்பக் கல்வி மேம்பாட்டு திட்டங்களை

பல்கலைக்கழகங்களின் மானியக்குழு மற்றும் அகில இந்திய தொழில் நுட்பக் கல்வி மன்றம் ஆகியவற்றுக்கு மேலனுப்புவது மற்றும் கல்வி வரைமுறைகள் மற்றும் தரங்களை பேணுவதற்கு உதவுதல், தொழிற்கூடங்கள் மற்றும் நிறுவனங்கள் இடையே இணைப்பு ஏற்படுத்துதல், பாடத்திட்டம் மேம்பாட்டுக்கு உதவுதல், தொழில் நுட்பப் பல்கலைக்கழகங்களில் தேர்வுகள் தரத்தை மேம்படுத்துதல் போன்றவை இம்மன்றத்தின் பிற செயல்பாடுகளாகும்.

**மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

**9.3** மாநிலத்தில் தொழில் நுட்பக் கல்வியின் தரத்தினை மேம்படுத்த குறிப்பிடப்பட்டுள்ள நிலைமையும் தரத்தையும் நிர்வகித்தல், பாடத்திட்டங்களை மேம்படுத்துதல், தேர்வுமுறையில் சீரமைத்தல், தரமேம்பாடு பெறுதல் வழியாக தரத்தினை நிர்வகித்தல், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகள், தொழிற்சாலை கல்வி நிறுவனம் ஒருங்கிணைந்து செயல்படுத்துதல், பணியாளர் தொகுதியை உருவாக்கி வளர்ச்சி திட்டங்களை மேற்கொள்ளுதல், வேலைவாய்ப்பு நிலையை

மேம்படுத்துதல், கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டினை வழங்குதல் ஒழுக்கம் மற்றும் மதிப்பினை உருவாக்குதல், தன்னாட்சி கல்லூரிகளை உயர்த்துதல், அடிப்படை விவரம் சார்ந்த நிலை உருவாக்குதல், நூலகங்களை உருவாக்குதல், மூன்றடுக்கு பொறியியல் கல்வியை வழங்குதல் போன்ற தலைப்புகளை உள்ளடக்கிய தொலைநோக்கு திட்டத்தினை தயாரித்துள்ளது.

## 9.4 2012–13ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் படவிருக்கும் நடவடிக்கைகள்

- தரஉறுதி குறித்த கருத்தரங்குகள் / பட்டறைகள், ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டங்கள் குறிப்பாக பொறியியல் மற்றும் தொழில்நுட்ப துறையில் இத்திட்டங்கள் குறித்த செயலாக்கம்.

- அனைத்து பொறியியல் கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்பப் பல்கலைக்கழகங்களில் தொழில் துறையின் பங்கேற்புடன் ஆராய்ச்சி தரத்தை உயர்த்துதல்.

- பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க வசதிப்படுத்துதல், கல்விசார் ஆசிரியர் கல்லூரிகளை ஒருங்கிணைத்தல்.

- தமிழகத்திலுள்ள தொழில்நுட்ப பல்கலைக் கழகங்கள், பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளின் இயக்கம் குறித்த அறிக்கையினை தயாரிப்பது.

- பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சியை, இதர ஆராய்ச்சி முகமைகள் மற்றும் பெருந் தொழில்களுடன் தொடர்புபடுத்தி தொழில் நுட்ப பல்கலைக்கழகங்களில் அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி வாரியம் ஒன்று நிறுவுதல்.

- முக்கியமான தகவல்கள் அனைத்தும் கொண்ட ஒரு தகவல் தொகுப்பு தளம் உருவாக்கி பேணுவது.

- தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களை மற்றும் கல்லூரிகளை சார்ந்தோ அல்லது அதற்கு வெளியிலோ உயர் மேன்மை கல்வி நிறுவனங்களை அமைத்தல்.

- இன்றைய தேதிவரையிலான தகவல்களை / கருத்துருக்களை, புத்தகங்கள், வெளியீடுகள், அறிக்கைகள், குறுந்தகடு, தனிக் குறுந்தகடு போன்றவை கொண்டு ஒரு நூலகம் உருவாக்குதல்.

## 10. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

**10.1** அறிவியல் துறைகளில், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றமானது 1984–இல் தன்னாட்சி உயர் அமைப்பாக அமைக்கப்பட்டது. பல்வேறுபட்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திட்டங்களை கடந்த 27 ஆண்டுகளாக இம்மன்றம் செயல்படுத்தி வருகிறது.

### முக்கிய திட்டங்கள்

**10.2 அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திட்டங்கள்**

சமூகம் தொடர்புடைய ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தும் அறிவியலறிஞர் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு நிதியுதவி வழங்குவதன் மூலம் வேளாண்மை, சுற்றுச்சூழல் அறிவியல், இயற்பியல், உயிரியல், கால்நடை அறிவியல், மருத்துவ அறிவியல், சமூக அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம்

ஆகிய பிரிவுகளில், ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2011–12 ஆம் ஆண்டில், ரூ.18.15 இலட்சம் செலவில் 9 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவு அளிக்கப்பட்டது. 2012–13 ஆம் ஆண்டில், ரூ.35 இலட்சம் செலவில் 15 திட்டங்களுக்கு ஆதரவளிக்கப்படவுள்ளது.

### 10.3 மாணவர் ஆராய்ச்சித் திட்டம்

பொறியியல் / மருத்துவம் / வேளாண்மை / கால்நடை அறிவியல் ஆகிய பாடப்பிரிவுகளில் பயிலும் இளநிலை மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகளில் பயிலும் முதுநிலை இறுதியாண்டு மாணவர்களுக்கு அவர்களது பாடத்திட்டத்தின்கீழ் சமூகம் தொடர்புடைய திட்டங்களை மேற்கொள்வதற்கு ரூ.10,000/– உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. 2011–12 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 800 மாணவர்கள் பயன்பெறும்வகையில் ரூ.14 இலட்சம் செலவில், 200 திட்டங்களுக்கு ஆதரவளிக்கப்பட்டது. 2012–13 ஆம் ஆண்டில், 900 மாணவர்கள் பயன்பெறும்வகையில் ரூ.20 இலட்சம் செலவில் 250 திட்டங்களுக்கு ஆதரவு அளிக்கப்படவுள்ளது.

## 10.4 இளம் அறிவியலறிஞர்களுக்கு பயண நிதியுதவி

பல்கலைக் கழங்கள் / கல்லூரிகள் / ஆராய்ச்சி மையங்களில் பணிபுரிந்துவரும் 40 வயதுக்குட்பட்ட இளம் அறிவியல் அறிஞர்கள் சர்வதேச மாநாடுகளில் கலந்துகொள்வதற்கு ஏதுவாக, அவர்களது விமான பயண செலவு தொகையில், 50% நிதியுதவி வழங்கப்படுகிறது. மேலும், தேசிய அளவில் நடைபெறும் அறிவியல் மாநாடுகளில், அவர்கள் கலந்து கொண்டு ஆராய்ச்சி முடிவுகளை சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக இரயில் பயண (முதல் வகுப்பு) செலவுத் தொகை முழுவதுமாக வழங்கப்படுகிறது. 2011–12 ஆம் ஆண்டில், ரூ. 3 இலட்சம் செலவில் 13 அறிவியலறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. இந்த அறிவியல் அறிஞர்கள், பொருளறிவியல், உயிரி தகவலியல், கணினி அறிவியல், நெசவு, கடல் உணவு மற்றும் இதரவை உள்ளிட்ட பிரிவுகளில், ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்ப்பித்தனர். 2012–13 ஆம் ஆண்டில் ரூ. 3 இலட்சம் செலவில், 13 அறிவியல் அறிஞர்களுக்கு பண நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

## 10.5 இளம் அறிவியல் அறிஞர் ஆதரவு ஊதியத் திட்டம்

35 வயதுக்குட்பட்ட இளம் அறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு இரண்டு முதல் ஆறு மாதங்களுக்கு ஆதரவு ஊதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், தேர்வு செய்யப்பட்ட அறிஞர்கள், நவீன கருவிமயமாக்கல் தொழில்நுட்பங்களை / நவீன ஆராய்ச்சி முறைகளை கற்கும் வகையில், பயிற்சிக்கு உட்படுத்தப்படுகின்றனர். மேலும் இவர்கள் இந்தியாவிலுள்ள ஆராய்ச்சி மையங்கள் / பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் மூத்த அறிவியல் அறிஞர்களுடன் ஆராய்ச்சி மேற்கொள்ள வழிவகை செய்யப்படுகின்றது. 2011–12 ஆம் ஆண்டில், ரூ.1.10 இலட்சம் செலவில், 9 அறிஞர்களுக்கு ஆதரவளிக்கப்பட்டது. 2012–13ஆம் ஆண்டில், ரூ.3 இலட்சம் (மாதமொன்றுக்கு ரூ.10,000/– ஆதரவு தொகை) செலவில், 15 அறிவியல் அறிஞர்களுக்கு ஆதரவளிக்கப்படவுள்ளது. கௌஹாத்தியிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம், பெங்களூருவில் உள்ள இந்திய தொழில்நுட்ப அறிவியல் நிறுவனம் மற்றும் லக்னோவில்

உள்ள மத்திய மருந்து ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றில் இந்த அறிஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

## 10.6 தமிழ்நாடு அறிவியல் அறிஞர் விருது.

வேளாண்மை, உயிரியியல், வேதியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், சுற்றுச்சூழலியில், மருத்துவம், கணிதம், இயற்பியல், சமூக அறிவியல், கால்நடை மருத்துவம் ஆகிய பாடப்பிரிவுகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்துள்ள, அறிவியல் அறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிக்கும் விதமாக, தமிழ்நாடு அறிவியல் அறிஞர் விருது வழங்கப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட அறிஞர்களுக்கு ரொக்கமும், சான்றிதழும் வழங்கப்படுகிறது. 2011–12 ஆம் ஆண்டில், ரூ. 2 இலட்சம் செலவில் 10 அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. 2012–13 ஆம் ஆண்டில் ரூ. 3.50 இலட்சம் செலவில் (ரூ.25,000/– வீதம்) 10 அறிவியல் அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்படவுள்ளது.

## 10.7 அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களை பிரபலப்படுத்துதல்

இத்திட்டத்தின்படி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பல்வேறு அம்சங்களில், அறிவியல் கண்காட்சிகள், ஆசிரியர் பயிற்சி திட்டங்கள், விரிவுரைகளை நடத்தும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் தன்னார்வ அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. 2011–12 ஆம் ஆண்டில், ரூ.10.28 இலட்சம் செலவில், 65 நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. இதன்மூலம், சுமார் 2.5 இலட்சம் மாணவர்கள் / ஆராய்ச்சியாளர்கள்/ பொதுமக்கள் பயன் பெற்றனர். 2012–13 ஆம் ஆண்டில், 3 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.10.50 இலட்சம் செலவில் 70 நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

## 10.8 இளம் மாணவர் அறிவியல் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், 9 ஆம் வகுப்பு பயிலும் திறன்வாய்ந்த இளம் மாணவர்களுக்கு, பெயர்பெற்ற கல்லூரி அல்லது பல்கலைக்கழகங்களில் அறிவியல்

தொழில்நுட்பத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2011–12 ஆம் ஆண்டில் 10 மாவட்டங்களில், ரூ.12 இலட்சம் செலவில் 400 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதன்மூலம் கரூர், திருச்சி, மதுரை, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தஞ்சாவூர், திருவாரூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பயன்பெற்றனர். 2012–13 ஆம் ஆண்டில், ரூ.30 இலட்சம் செலவில் 20 மாவட்டங்களைச் சேர்ந்த 800 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

## 10.9 அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி

மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறும் வகையில், தமிழில் வெளிவரும் அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. 2011–12 ஆம் ஆண்டில் ரூ.0.36 இலட்சம் செலவில் மூன்று இதழ்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. இதன்மூலம் 10,000 மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பயன்பெற்றனர். 2012–13 ஆம் ஆண்டில், சுமார் 10,500 மாணவர்கள்

பயன்பெறும் வகையில், இத்திட்டத்தின்கீழ், ரூ.0.40 இலட்சம் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

### 10.10 புதுமைத் தொழில்நுட்பமும், பரவலாக்கமும்

புதிய தொழில்நுட்பங்கள், கண்டுபிடிப்புகள், அவற்றின் பயன்பாடுகளை கல்வியாளர்கள் மற்றும் அறிவியலாளர்கள் மூலம் பொதுமக்களுக்கு எடுத்துச் செல்லும்வகையில் பயிற்சிகள், பட்டறைகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2011–12 ஆம் ஆண்டில், சுற்றுச்சூழலுக்கு உகந்தவகையில் சாயமிடல், மண்புழு உரம் தயாரிக்கும் தொழில்நுட்பம் மூலம் கிராமப்புற மகளிரின் நிலையை மேம்படுத்துதல், நவீன வேளாண்மை ஆகிய தலைப்புகளில், 16 பயிற்சிகள் நடத்தப்பட்டன. ரூ.6.05 இலட்சம் செலவில் நடத்தப்பட்ட இப்பயிற்சிகளின் மூலம், சுமார் 430 நபர்கள் பயன்பெற்றனர். 2012–13 ஆம் ஆண்டில், 450 நபர்கள் பயன்பெறும்வகையில், ரூ.9 இலட்சம் செலவில் 17 திட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

**10.11 கிராமப்புற பள்ளிகளில் அறிவியல் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல்**

கிராமப்புற பள்ளிகளில் அறிவியல் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக **6**, **7** மற்றும் **8** ஆம் வகுப்பு அறிவியல் ஆசிரியர்களுக்கு, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணிப்பயிற்சி வழங்கப்படுகிறது. **2011–12** ஆம் ஆண்டில், தூத்துக்குடி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, விருதுநகர், கோயம்புத்தூர், ஈரோடு, சிவகங்கை, கிருஷ்ணகிரி மற்றும் திருப்பூர் ஆகிய **10** மாவட்டங்களில், **10** பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டது. ரூ.**9.68** இலட்சம் செலவில் நடத்தப்பட்ட இத்திட்டத்தின்மூலம், **500** ஆசிரியர்கள் பயிற்சி பெற்றனர். **2012–13** ஆம் ஆண்டில், ரூ.**10** இலட்சம் செலவில், **10** மாவட்டங்களில், **10** பயிற்சி திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது.

**10.12 அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்**

இத்திட்டம், தன்னார்வக் குழுக்கள், கிராமப்புற பள்ளி மாணவர்கள் மற்றும் விவசாயிகளிடையே அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும்வண்ணம், கல்லூரிகள் / பல்கலைக்கழகங்கள் / அறிவியல் மையங்களில், மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளில்

பயன்களை அவர்களுக்கு எடுத்துச் செல்வதை நோக்கமாக கொண்டுள்ளது. **2011–12** ஆம் ஆண்டில், திருச்சி, கரூர், சேலம், நாமக்கல், தேனி, நாகப்பட்டினம், விருதுநகர், தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில், ரூ.**6.05** இலட்சம் செலவில், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. **2012–13** ஆம் ஆண்டில், ரூ.**6.50** இலட்சம் செலவில், பத்து மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

### 10.13 தொழில்துறை தேவைகளுக்கேற்ப அறிவியல் தொழில்நுட்ப திறன்களை வளர்த்தல்

கீழ்க்காணும் இரண்டு நோக்கங்களை உடையது. (அ) தொழில்துறைக்கு ஏற்றவாறு, பட்டதாரிகள் திறன்களைப் பெறுதல், (ஆ) சுயதொழில் தொடங்குவதற்கு அவர்களை ஊக்கப்படுத்துதல். கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்துறைகளுக்கு இடையேயான உறவை வலுவூட்டும் பாலமாக இத்திட்டம் செயல்படும்.

**2011–12** ஆம் ஆண்டில், கன்னியாகுமரி, வேலூர், திருச்சி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, ஈரோடு, திருப்பூர், நாமக்கல் கோயம்புத்தூர் மற்றும் தேனி ஆகிய

மாவட்டங்களில், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதன்மூலம் 3,000 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியற் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் பயன்பெற்றனர்.

**10.14 கிராமப்புறங்களில் அறிவியல் தொழில் நுட்பங்களின் பயன்பாடு**

அறிவியல் தொழில்நுட்பங்களையும், கண்டுபிடிப்புகளையும் கிராமப்புறங்களுக்கு கொண்டு செல்வதற்கு இத்திட்டம் உதவி செய்கிறது. 2011–12 ஆம் ஆண்டில், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், அரியலூர், திருநெல்வேலி, நாமக்கல், பெரம்பலூர், ராமநாதபுரம், வேலூர், திருப்பூர் மற்றம் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில், 10 செயல்திட்டங்கள் நடத்தப்பட்டன. ரூ.12.10 இலட்சம் செலவில் நடத்தப்பட்ட இத்திட்டத்தின்மூலம் 5,000 கிராமப்புற மக்கள் பயனடைந்தனர். 2012–13 ஆம் ஆண்டில் 5,000 விவசாயிகள், கலைஞர்கள் மற்றும் கிராமப்புற மக்கள் பயன்பெறும்வகையில், ரூ 14 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

**10.15 கருத்தரங்கு, பயிற்சிப் பட்டறை, அறிவியல் மாநாடு நடத்துவதற்கு ஒரு பகுதி நிதியுதவி அளித்தல்**

இத்திட்டம் அறிவியலறிஞர்கள், ஆசிரியர்கள், தொழில் நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொள்ளும் கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள், அறிவியல் முகாம்கள் நடத்தி அறிவியல் அறிவுப் பரிமாற்றங்கள் செய்யவும், கலந்துரையாடவும் வழிவகுக்கிறது. 2011–12 ஆம் ஆண்டில் 34 நிறுவனங்களுக்கு ரூ.3.40 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டது. 2012–13 ஆம் ஆண்டில் 50 நிறுவனங்களுக்கு ரூ.10 இலட்சம் செலவில் நிதியுதவி அளிக்கப்படும்.

**10.16 கல்லூரிகளின் ஆய்வு மாணவர்களுக்கான அறிவியல் ஆய்வு நிதியுதவி பற்றாக்குறையை களையும் திட்டம்**

இத்திட்டம் கல்லூரிகளில் உள்ள ஆராய்ச்சி மாணவர்கள், ஆராய்ச்சி மேற்கொள்வதற்கு உதவிபுரியும் மற்றும் ஆராய்ச்சி நிதியுதயில் உள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும். ஒவ்வொரு ஆண்டும், நமது மாநிலத்தில் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

ஆனால், இந்நிறுவனத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு ஆய்வுப் பணிகளுக்கு தேவையான நிதியுதவி கிடைப்பதில்லை. ஆய்வுப் பணிகளில் உள்ள நிதிபற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பட்சத்தில், புதுமை எண்ணங்களை சரிபார்ப்பதற்கும், ஆய்வு புள்ளி விபரங்களை பெறுவது மட்டுமல்லாமல், அறிவியல் மனித சக்தி வளர்வதற்கும் வழிவகுக்கும். மத்திய அரசு நிறுவனங்கள் மூலமாக பல்வேறு திட்டங்கள் மூலம் பல ஆய்வு திட்டங்களுக்கு பல்கலைக்கழகங்கள் நிதியுதவி பெறுவதை ஒப்பிடுகையில் குறிப்பாக ஊரக பகுதிகளில் கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு சாதகமற்ற நிலை நிலவுகிறது. ஆய்வு திட்ட வரைவுகளை மாநிலத்தின் கல்லூரிகளிலுள்ள ஆராய்ச்சி மாணவர்களிடமிருந்து பெற்று அவற்றுள் சிறந்ததாக நிபுணர்களால் தேர்வு செய்யப்படும் 2 அல்லது 3 ஆய்வுத் திட்டங்களுக்கு எதிர்வரும் 2012–13ஆம் ஆண்டில் நிதியுதவி அளிக்கப்படும். இத்திட்டத்தை ரூ.15 இலட்சம் செலவில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**10.17 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டம் – நமது பல்கலைக்கழகங்களில் ஆய்வு மற்றும் புதுமைக் கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்துதல் மற்றும் புத்துயிர் ஊட்டுதல் –அறிவியல் தொழில்நுட்ப ஆய்வாளர்களின் தரத்தை மேம்படுத்துதல்**

நமது பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் இளம் ஆய்வாளர்களும், ஆசிரியர்களும் உயர்கல்வி பெற்றிருந்தாலும், அவர்கள் சர்வதேச அளவில் சார்ந்த துறைகளில் நிகழும் ஆய்வுகளை அறிந்திருக்கவில்லை மற்றும் பயிற்சி பெறவில்லை. இதற்கான வாய்ப்புகள் உருவாக்கித் தரப்பட்டால் நமது ஆய்வாளர்கள் மற்ற நாடுகளின் ஆய்வளர்களுக்கு இணையாக உலக அரங்கில் நம்பிக்கையுடனும், திறமையுடனும் போட்டியிட வழிவகை ஏற்படும். எனவே, நமது பல்கலைக்கழகங்களில் உள்ள இளம் ஆசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்களை மற்ற நாடுகளிலுள்ள தத்தமது துறை சார்ந்த ஆய்வு நிறுவனங்களுக்கு அனுப்பி, குறிப்பாக நானோ தொழில்நுட்பம், உயிர் தொழில்நுட்பம், பருவநிலை மாறுபாடு, ஆற்றல்வளம் குறித்த ஆய்வுகள், ஸ்டெம் செல் ஆய்வு போன்ற துறைகளில் பயிற்சி மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டம் மூலமாக வழிவகை செய்யப்படும். இத்திட்டத்தை 2012–13 ஆம் நிதியாண்டில் ரூ. 1 கோடி செலவில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 11. தமிழ்நாடு மாநில உருது கழகம்

**11.1** உருது மொழியை வளர்க்கும் நோக்குடன் தமிழ்நாடு மாநில உருது கழகம் தோற்றுவிக்கப்பட்டது. மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் இக்கழகத்தின் தலைவர் ஆவார்.

### 11.2 செயல்பாடுகள்:

- தேசிய வணிகர் கூட்டமைப்புடன் இணைந்து அகில இந்திய அளவில் கழகத்தால் கவியரங்கம் நடத்தப்பட்டது.
- இரண்டு நாள் உருது மாநாடு மற்றும் கவியரங்கம் நடத்தப்பட்டது.
- டாக்டர் அப்துல் ஹக் இலக்கிய பரிசு மற்றும் பரிசுத்தொகை தலா ரூ. 25,000/– வீதம் ஆறு கவிஞர்களுக்கு பொதுமக்கள் பங்கேற்ற விழாவில் வழங்கப்பட்டது. மேலும் உருது மொழி வழியாக தேர்வுகளில் மாநில அளவில் இடம் பிடித்த மாணவர்களுக்கு தகுதிப் பரிசு மற்றும் பணப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

**11.3 2012–2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள்/திட்டங்கள்**

அ) தகுதி வாய்ந்த உருது மாணவர்களுக்கு பரிசுகள், பணப்பரிசுகள் மற்றும் கல்வி உதவித் தொகை அளித்தல்

ஆ) உருது பயிற்றுவிக்கும் மையங்களுக்கு நிதி உதவி அளித்தல்

இ) உருது மொழியை வளர்க்கும் கவிஞர்களுக்கு உள்ளூர் கவியரங்கம் நடத்துதல்.

**பி. பழனியப்பன்**
அமைச்சர், உயர்கல்வி

# அமைப்பு முறை வரைபடம்

- **முதலமைச்சர்**
  - **அமைச்சர் (உயர்கல்வி)**
    - **தலைமைச் செயலாளர்**
      - **கூடுதல் தலைமைச் செயலாளர் (உயர்கல்வி)**
        - **துறைகள்**
          - தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்
          - கல்லூரிக் கல்வி இயக்ககம்
          - தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
          - தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம்
          - அறிவியல் நகரம்
          - தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மாநில மன்றம்
          - தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
          - தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்
          - தமிழ்நாடு உருது கழகம்
        - **பல்கலைக்கழகங்கள்**
          - சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை
          - அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்
          - மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை
          - பாரதியார் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்
          - பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி
          - அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்
          - அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி
          - மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி
          - பெரியார் பல்கலைக்கழகம், சேலம்
          - திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்
          - தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம், சென்னை
          - தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை
        - **பல்கலைக்கழகம் (தொழில்நுட்பவியல்)**
          - அண்ணா பல்கலைக்கழகம், சென்னை

## கல்லூரிக் கல்வி

## அட்டவணை – 1

## மாநிலத்திலுள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை 2011–12

| கல்லூரிகளின் வகை | அரசு கல்லூரிகள் | அரசு உதவிபெறும் கல்லூரிகள் | சுயநிதி கல்லூரிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| கலை மற்றும் அறிவியல் | 62 | 133 | 421 | 616 |
| உடற்கல்வி | - | 3 | 8 | 11 |
| கீழ்திசை | - | 10 | - | 10 |
| சமூகப் பணி கல்லூரிகள் | - | 2 | - | 2 |
| கல்வியியல் கல்லூரிகள் | 7 | 14 | 639 | 660 |
| பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் | 24 | - | - | 24 |
| **மொத்தம்** | **93** | **162** | **1068** | **1323** |

# அட்டவணை – 2

## மாணவர் சேர்க்கை 2011-2012

| கல்லூரிகள் வகை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | | | | | | மாணவர் சேர்க்கை விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இளநிலை | முதுநிலை | ஆராய்ச்சிப் படிப்பு | கல்வி இயல் | ஆராய்ச்சி மேற்படிப்பு | மொத்தம் | இளநிலை | முதுநிலை | ஆராய்ச்சிப் படிப்பு | கல்வி இயல் | ஆராய்ச்சி மேற்படிப்பு | மொத்தம் |
| அரசு கல்லூரிகள் | 46984 | 5417 | 573 | 1169 | 169 | 54312 | 46898 | 5377 | 539 | 1169 | 169 | 54152 |
| பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகள் | 7623 | 321 | 0 | 0 | 0 | 7944 | 7623 | 307 | 0 | 0 | 0 | 7930 |
| அரசு உதவிபெறும் கல்லூரிகள் | 97829 | 19982 | 2548 | 1818 | 443 | 122620 | 82682 | 19949 | 2537 | 1818 | 443 | 107429 |
| சுயநிதி கல்லூரிகள் | 108997 | 25695 | 1177 | 66157 | 228 | 202254 | 89924 | 15294 | 1164 | 59297 | 228 | 165907 |
| **மொத்தம்** | **261433** | **51415** | **4298** | **69144** | **840** | **387130** | **227127** | **40927** | **4240** | **62284** | **840** | **335418** |

# தொழில்நுட்பக் கல்வி

## அட்டவணை –3

## 2011-2012–ஆம் ஆண்டு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை, மொத்த இடங்கள் மற்றும் மாணவர் சேர்க்கை பற்றிய விவரங்கள்

| பிரிவு | கல்லூரிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | மாணவர் சேர்க்கை | பொது | | பி.ப. (மற்றவர்) | | பி.ப. (முஸ்லிம்) | | மி.பி.வ. | | ஆதிதிராவிடர் | | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | | பழங்குடியினர் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| அரசு முறையான | **30** | 8350 | 7924 | 50 | 42 | 2165 | 1087 | 225 | 59 | 1590 | 672 | 1180 | 452 | 183 | 81 | 108 | 30 | **5501** | **2423** |
| அரசு–சுழற்சி | *14(*)* | 3320 | 3111 | 43 | 14 | 1152 | 175 | 126 | 7 | 782 | 114 | 493 | 94 | 79 | 8 | 24 | 0 | **2699** | **412** |
| அரசு உதவி | **34** | 13842 | 11831 | 300 | 83 | 4640 | 1020 | 568 | 72 | 2445 | 468 | 1575 | 293 | 224 | 45 | 92 | 6 | **9844** | **1987** |
| இணைப்பு | **3** | 215 | 161 | 1 | 0 | 63 | 0 | 4 | 0 | 51 | 0 | 36 | 0 | 5 | 0 | 1 | 0 | **161** | **0** |
| சுயநிதி | **380** | 145910 | 98658 | 8412 | 836 | 37192 | 3028 | 4365 | 167 | 27394 | 1680 | 13509 | 977 | 644 | 63 | 358 | 33 | **91874** | **6784** |
| **மொத்தம்** | **447(*)** | **171637** | **121685** | **8806** | **975** | **45212** | **5310** | **5288** | **305** | **32262** | **2934** | **16793** | **1816** | **1135** | **197** | **583** | **69** | **110079** | **11606** |

(*) : மேலே அரசு – முறையான, பிரிவில் இது உள்ளடக்கியுள்ளதால், மொத்தத்தில் சேர்க்கப்படவில்லை.

# அட்டவணை – 4

## 2011-12 ஆம் ஆண்டு பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை, மொத்த இடங்கள் மற்றும் மாணவர் சேர்க்கை பற்றிய விவரங்கள்

| பிரிவு | கல்லூரிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | மாணவர் சேர்க்கை | பொது | | பி.ப. (மற்றவர்) | | பி.ப. (முஸ்லிம்) | | மி.பி.வ. | | ஆதிதிராவிடர் | | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | | பழங்குடியினர் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| அரசு | 6 | 2560 | 2434 | 96 | 62 | 708 | 485 | 55 | 37 | 336 | 203 | 199 | 157 | 47 | 29 | 15 | 5 | **1456** | **978** |
| அரசு உதவி | 3 | 2645 | 2656 | 219 | 139 | 782 | 578 | 57 | 20 | 308 | 181 | 162 | 131 | 36 | 23 | 12 | 8 | **1576** | **1080** |
| சுயநிதி | 498 | 213004 | 149045 | 15269 | 6526 | 43332 | 28288 | 4580 | 1564 | 22656 | 10952 | 9463 | 4781 | 963 | 401 | 211 | 59 | **96474** | **52571** |
| **பகுதி மொத்தம்** | **507** | **218209** | **154135** | **15584** | **6727** | **44822** | **29351** | **4692** | **1621** | **23300** | **11336** | **9824** | **5069** | **1046** | **453** | **238** | **72** | **99506** | **54629** |
| அண்ணா பல்கலைக்கழகம் சென்னை | 4 | 2305 | 2151 | 226 | 192 | 469 | 330 | 53 | 31 | 262 | 180 | 172 | 148 | 39 | 25 | 15 | 9 | 1236 | 915 |
| அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகம் சென்னை | 4 | 1140 | 1273 | 7 | 12 | 259 | 296 | 29 | 19 | 214 | 176 | 125 | 102 | 12 | 11 | 6 | 5 | 652 | 621 |
| அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகம் திருநெல்வேலி | 3 | 900 | 702 | 11 | 21 | 147 | 198 | 14 | 18 | 83 | 62 | 70 | 55 | 12 | 5 | 6 | 0 | 343 | 359 |
| அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மதுரை | 2 | 780 | 598 | 8 | 4 | 161 | 100 | 16 | 10 | 102 | 53 | 63 | 50 | 14 | 7 | 9 | 1 | 373 | 225 |
| அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகம் திருச்சி | 5 | 2700 | 2295 | 22 | 22 | 498 | 446 | 56 | 35 | 381 | 290 | 233 | 159 | 74 | 53 | 13 | 13 | 1277 | 1018 |
| **பகுதி மொத்தம்** | **18** | **7825** | **7019** | **274** | **251** | **1534** | **1370** | **168** | **113** | **1042** | **761** | **663** | **514** | **151** | **101** | **49** | **28** | **3881** | **3138** |
| **கூடுதல் மொத்தம்** | **525** | **226034** | **161154** | **15858** | **6978** | **46356** | **30721** | **4860** | **1734** | **24342** | **12097** | **10487** | **5583** | **1197** | **554** | **287** | **100** | **103387** | **57767** |


வரைபடம் – 1
2011–12 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை
180000
160000
140000
120000
100000
80000
60000
40000
20000
0
62082
107429
165907
அரசு / பல்கலை கல்லூரிகள்
அரசு உதவி பெறும் கல்லூரிகள்
சுயநிதி கல்லூரிகள்

## வரைபடம் –2

2011–2012ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை



## வரைபடம் –3

2011–2012ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை



**வரைபடம் –4**


2011–2012ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பலவகை தொழில்நுட்ப கல்லூரிகளின் எண்ணிக்கை
400
350
300
250
200
150
100
50
0
30
37
380
அரசு கல்லூரிகள்
அரசு உதவிபெறும் கல்லூரிகள்
சுயநிதி கல்லூரிகள்

**வரைபடம் –5**


2011–2012ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பலவகை தொழில்நுட்ப கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை
120000
100000
80000
60000
40000
20000
0
11035
11992
98658
அரசு கல்லூரிகள்
அரசு உதவிபெறும் கல்லூரிகள்
சுயநிதி கல்லூரிகள்

## அட்டவணை – 5

## தொலைதூரக் கல்வி வாயிலாக பயிலும் மாணாக்கர்களின் விவரம் 2011–12

| வ. எண் | பெயர் | தொலைதூரக் கல்வி வாயிலாக பயிலும் மாணாக்கர்களின் விவரம் | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| 1 | சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை | 19550 | 23650 |
| 2 | அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர் | 162102 | 208165 |
| 3 | மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை | 49383 | 74075 |
| 4 | பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி | 3526 | 5867 |
| 5 | பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் | 43399 | 32738 |
| 6 | அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைகானல் | - | 1396 |
| 7 | அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி | 37361 | 34995 |
| 8 | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி | 17668 | 13479 |
| 9 | பெரியார் பல்கலைக்கழகம், சேலம் | 43371 | 18420 |
| 10 | திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர் | 612 | 845 |
| 11 | தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை | 65134 | 54853 |
| 12 | தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை | - | - |
| | **மொத்தம்** | **442106** | **468483** |

# அட்டவணை – 6

## பல்கலைக்கழக வளாகத்தில் பயிலும் மாணாக்கர்களின் விவரம் 2011–12

| வ. எண் | பெயர் | பல்கலைக்கழக வளாகத்தில் பயிலும் மாணாக்கர்களின் விவரம் | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| 1 | சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை | 1527 | 1451 |
| 2 | அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர் | 27963 | 6960 |
| 3 | மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை | 794 | 924 |
| 4 | பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி | 1039 | 1181 |
| 5 | பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் | 696 | 957 |
| 6 | அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைகானல் | - | 1265 |
| 7 | அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி | 632 | 1054 |
| 8 | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி | 998 | 1610 |
| 9 | பெரியார் பல்கலைக்கழகம், சேலம் | 724 | 681 |
| 10 | திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர் | 143 | 114 |
| 11 | தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை | - | - |
| 12 | தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை | - | - |
| | **மொத்தம்** | **34516** | **16197** |